85

[illegible]ர் தேச சரித்திரம்

85

11 JAN 1943

பாலர்
தேச சரித்திரம்
நான்காம் புத்தகம்

(இரண்டாவது பாரத்துக்கும்
ஏழாவது ஸ்டாண்டர்டுக்கும் உரியது)

954

சுந்தர சுப்பிரமணியம்
&
V. K. சுப்பிரமணியன், B.A., L.T.,
எழுதியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1943
MADRAS

ஜயம் கம்பனியார்
புத்தக வியாபாரிகள்
நுங்கம்பாக்கம் - சென்னை :: வளவனூர் (தென் ஆற்காடு)

பதிவு செய்தது] 1942 [விலை அணா 10

முதல் பதிப்பு, நவம்பர் 1942

V44

முகவுரை

'பாலர் தேச சரித்திர' வரிசையில் இது நான்காவது புத்தகம்; இரண்டாவது பாரத்துக்கும், ஏழாவது ஸ்டாண்டர்டுக்கும் உரிய புதிய பாட திட்டத்தைத் தழுவியே எழுதியது.

சுவை மிகுந்த சரித்திர பாடத்தைக் கதையே போல் கூறின், பாலரும் இளைஞரும் பரிவுடன் படித்து இன்பமும் ஞானமும் எய்துவர். இம் முறையில் நம் தேச சரித்திரத்தை இளைஞரது பருவ இயல்பை மதித்து விளக்கியும் சுருக்கியும் எழுதியுள்ளோம். ஆங்காங்கே பாடந்தோறும் ஏற்ற சித்திரப் படங்கள் அமைந்திருத்தல் காணலாம்.

நம் தேசத்தின் செல்வச் சிறுரும் சிறுமியரும் இந் நூலைப் படித்து, நம் தேசத்தினிடம் ஆர்வமும், முன்னோரிடம் மதிப்பும், தம்மிடம் நல்லறிவும் கொள்வரென எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்கள்

Printed at the Liberty Press, G.T., Madras.

T. K. VENKATARAMAN
Head of the Department of History
Pachaiyappa's College

Pachaiyappa's College
KILPAUK P. O.
Madras, 16th November, 1942

FOREWORD

It has given me great pleasure to go through this short history of our country published by Jayam and Company. The authors have, on the whole, steered clear of controversial topics which have no place in books intended for juvenile readers. They have also sought to interest them by a racy style of narration so as to bring events vividly before the mental eyes of the readers, and have adorned their description of person and events with choice anecdotes. I have no doubt that the aim of the authors which is set out in the preface—that our children must learn to respect our great men and love our great motherland—will be amply fulfilled.

T. K. VENKATARAMAN.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1943
MADRA

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	முன்னுரை	5
2.	கஜனி முகம்மது	8
3.	கோரி முகம்மது	11
4.	டில்லி சுல்தான்கள் : அடிமை வமிசம்	14
5.	கில்ஜி வமிசம்	18
6.	அல்லாவுதீன் கில்ஜி	19
7.	துக்ளக் வமிசம்	21
8.	லோடி வமிசம்	24
9.	இப்ரஹீம் லோடி	27
10.	பாமினி ராஜ்யம்	28
11.	சித்தூர் ராஜபுத்திரர்	32
12.	விஜயநகர ஸாம்ராஜ்யம்	34
13.	மொகலாயர் : பாபர்	38
14.	ஹுமாயூன்	43
15.	ஷெர்ஷா	45
16.	அக்பர்	46
17.	ஜஹாங்கீர்	52
18.	ஷாஜஹான்	55
19.	ஔரங்கசீப்	58
20.	மொகலாய அரசின் வீழ்ச்சி	61
21.	மகாராஷ்டிரர்	66
22.	சிவாஜி	68
23.	சிவாஜிக்குப் பின்	73

எண்	விஷயம்	பக்கம்
24.	பேஷ்வாக்கள்	75
25.	இதர பேஷ்வாக்கள்	78
26.	சீக்கியர்	82
27.	இந்தியாவும் ஐரோப்பாவும்	86
28.	போர்த்துகேசியர்	87
29.	டச்சுக்காரர்	89
30.	பிரஞ்சுக்காரர்	90
31.	ஆங்கில கீழிந்திய வர்த்தகச் சங்கம்	92
32.	ஆங்கில - பிரஞ்சு வியாபாரப் போட்டி	96
33.	கர்நாடகத்தில் குழப்பம்	97
34.	கிளைவின் எழுச்சி	100
35.	வங்கத்தில் ஆங்கில ஆதிக்கம்	105
36.	வாரன் ஹேஸ்டிங்ஸ்	115
37.	லார்டு காரன்வாலிஸ்	127
38.	மூன்றுவது மைசூர் யுத்தம்—திப்பு	130
39.	ஸர் ஜான் ஷோர்	132
40.	வெல்லஸ்லி பிரபு	136
41.	நாலாவது மைசூர் யுத்தம்	139
42.	மகாராஷ்டிரரின் சமஷ்டி	144
43.	மகாராஷ்டிர யுத்தங்கள்	147
44.	மிண்டோ பிரபு	150
45.	மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ்	154
46.	நேபாள யுத்தம்	156
47.	பிண்டாரிகள்	159

பாலர் தேச சரித்திரம்

[இரண்டாம் பாரத்துக்கு]

1. முன்னுரை

ஆதியிலே சந்திரகுப்தன், அசோகன், சமுத்திரகுப்தன் முதலியோர் ஏக சக்கராதிபதிகளாக நம் இந்தியாவை ஆண்டு வந்தனர். அப்பால் ஏழாம் நூற்றாண்டிலே, வட இந்தியாவில் ஹர்ஷ மகாராஜன் பேரரசு கொண்டான். தெற்கிலோ புலிகேசின் என்பான் கிளம்பி, வல்லரசனாக, எங்கும் புகழ் பரப்பினான். ஹர்ஷன், புலிகேசின் இருவரும் காலமான பின்பு, இந்தியாவிலே பெரிய சக்கரவர்த்திகள் தோன்றாது போயினர்.

ஆனால், வட இந்தியாவில் ராஜபுத்திரர் என்னும் ஜாதியார் தோன்றி, ஆங்காங்கே சிறிய சிறிய ராஜ்யங்கள் ஏற்படுத்தி, ஆண்மை செலுத்தி வந்தனர். அன்னார் தம் ஆருயிரை ஒரு பொருட்டாக மதியாத சிறந்த போர்வீரர். ஆயினும், அவர்களுக்குள்ளே போதிய ஒற்றுமையும் நேசமும் ஓங்கவில்லை. அன்றியும் அவர்களிடையே ஏக சக்கராதிபதிகளும் தோன்றவில்லை. பத்தாம் நூற்றாண்டிலே இத்தேசமெங்கும் சிறிய சிறிய ராஜ்யங்களே தோன்றின ; பலவாறான ஜாதி மத வகுப்புக்களும் மலிந்து கிடந்தன. அத்தகைய நிலையில் அயலகங்களிலிருந்து இஸ்லாம்மதத்தினர் படைகொண்டுவந்து இங்கே புகுந்தனர். அவர்களை மறிக்கக்கூடிய வல்லரசு எதுவும் இல்லாது போயிற்று.

இந்தியாவுக்கு மேற்கே அரபிக் கடலை யடுத்து, அரேபியா என்றொரு தேசமுண்டு. ஆறும் நூற்றாண்டிலே அத்தேசத்தில் முகம்மது நபி எனும் தீர்க்கதரிசி யொருவர் தோன்றி, இஸ்லாம் மதத்தைப் பரப்பி, அரபியரை ஒருமனமாக்கி நல்வழிப்படுத்தினார். முடிவில் அவரே அத்தேச அரசரும் ஆனார். கி. பி. 632-ஆம் ஆண்டில் அவர் காலகதியடைந்தார். உடனே அரபியர் இஸ்லாம்மதத்தை எங்கும் பரப்பப் படையுடன் எழுந்து பாரசீகம், துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் இவற்றை ஜெயித்தார்கள். அந்நாடுகளிலெல்லாம் இஸ்லாம் மதம் பரவிற்று. பின்பு, ஆபிரிக்கா, ஐரோப்பா கண்டங்களிலும் அன்னவர் புகுந்து, அப் புது மதத்தைப் பரப்பலாயினர்.

அவ்விதம் அரபியர் ஆண்மை காட்டிய காலத்தில், பேரரசர் பலர் ஒருவர்பின் ஒருவராக அரேபியாவை ஆண்டு வந்தனர். அத்தேசத்தின் தளபதியான முகம்மது காசிம் என்பான் கி. பி. 712-ல் ஒரு பெரும்படையுடன் நம் தேசத்தைச் சார்ந்த சிந்து நாட்டில் புகுந்து வெற்றி கொண்டான். சின்னாள் வரையில் சிந்து நாடு அரபியரின் வசப்பட்டுக் கிடந்தது. அது கண்டதும், ராஜபுத்திர வேந்தரிலே பூபசிம்மன் என்பான் கிளம்பி, அருஞ்சமர் ஆற்றி அவர்களைத் துரத்திவிட்டான். நாளடைவில் அரபியரின் வல்லரசும் வீறுப்பும் சிதறிப்போயின.

பத்தாம் நூற்றாண்டிலே துருக்கஜாதியைச் சேர்ந்த வீரர் பலர் மத்தியஆசியாவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் தனியரசுகள் கொண்டு தருக்கி நின்றனர். அங்ஙனம் முளைத்த அரசுகளில் ஒன்று கஜனி ராஜ்யம். கி. பி. 986-ல் சபக்டிஜின் என்பான் கஜனிக்கு அரசனானான். இவன் பெயர் வாய்ந்த வீரன். சிந்து நதிக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தை இவன் ஜெயித்துப் பிடித்துத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். பின்பு அதன் அரசனாக இருந்தவன் பெயர் கஜனி முகம்மது.

அந்நாளில் நமது இந்தியா தேசம் கைத்தொழிலில் சிறந்து, வியாபாரத்தில் மிகுந்து, செல்வத்தில் ஓங்கியிருந்தது. இந்தியர் தம் சரக்குகளுடன் ஆப்கானிஸ்தானம், துருக்கிஸ்தானம் முதலிய நாடுகள் சென்று, வர்த்தகம் நடத்தி வந்தனர். அன்னியரும் தரைமார்க்கமாக அந்நாடுகளின்வழியே இந்தியாவுக்கு வந்து, பண்டங்களும் பொருள்களும் வாங்கிப்போவது வழக்கம். அவ்விதம்

வடமேற்கு எல்லையிலுள்ள கைபர் கணவாய்

இந்தியாவின் வாணிபம் அமோகமாக நடப்பதைக் கஜனி முகம்மது கவனித்து வந்தான். மேலும், இங்குள்ள நகரங்களின் பெரு வளப்பத்தையும் ஆலயங்களின் செல்வப் பெருக்கத்தையும் அவன் கேள்வியுற்ருன். உடனே, இந்தியாவில் புகுந்து செல்வத்தைக் கொள்ளைகொள்ள அவனுக்கு ஆர்வம் மூண்டது.

நமது இந்தியா தேசம் வடக்கில் இயற்கையிலேயே மலை யரண் கொண்டது; ஏனைய திசைகளிலோ கட

லரண் பொருந்தியது. அந்நாளிலே நீராவிக் கலங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. சிறிய மரக்கலங்களே கரையோரமாகக் காற்றின் உதவியால் போய்வரும். ஆதலின் கடல்மார்க்கமாக இந்தியாவுக்குள் பகைவர் கூட்டம் வருதல் மகா கடினம். எனவே நம் தேசத்திற்குள் புகவேண்டுமாயின், மலைகளின் இடையேயுள்ள கணவாய்களே ஏற்ற வழிகளாம்.

அன்றும், இன்றும் கைபர் கணவாயே கோட்டை வாயிலைப்போல் போக்குவரவுக் குரிய சாதனமாம். அக்கணவாயின் வழியே இஸ்லாமியர் இத்தேசத்தின்மீது படையெடுத்து வரலாயினர். அப்படையெடுப்பின் விவரத்தை அடுத்த அதிகாரங்களில் பார்ப்போம்.

---

2. கஜனி முகம்மது (996—1030)

இந்தியாவின் செல்வப் பெருக்கு ஒரு புறம் பிடித்தாட்ட மத வைராக்கியமும் கஜனி முகம்மதினிடம் விஞ்சிநின்றது. இஸ்லாமிய ரல்லாத ஏனையோருடன் போர் புரிதல் மதக் கடமையென அம்மன்னவன் மதித்தனன். மேலும், கல்லாலும் செம்பாலும் சிலையடித்து வைத்து, ஆண்டவனை வணங்கும் இந்துக்களின் ஆலயங்களை இடித்துத் தள்ளுவதும் ஏற்குமென அவன் சித்தம் துணிந்தது. ஆதலின், அவன் பெரும்படையுடன் 17 முறை இங்கே வந்து, கொள்ளையும் கொலையும் நடத்தி, அபரிமிதமான செல்வத்தைக் கொண்டுபோகலானான்.

அக்காலத்திலே பஞ்சநதிப் பிரதேசத்தை ஆண்டுவந்த அரசன் பெயர் ஜேயபாலன். இவன் ராஜபுத்திர மரபைச் சேர்ந்த பெருவீரன். இவனுக்கும் கஜனி முகம்மதுக்கும் அடிக்கடி சண்டை நடந்துவந்தது. வெற்றியும் தோல்வியும் மாறிமாறி நின்றன. முடிவில் (கி. பி.

1001) ஜெயபாலன் முறியுண்டு, அந்த அவமானம் தாளாமல் தீக்குளித்துத் தன் உயிரை விடுத்தான்.

ஜெயபாலன் மைந்தன் அநங்கபாலன் சிம்மாசனம் ஏறிச் சீறி நின்றான். கஜனி முகம்மது படை கொண்டு வந்தபொழுது, அவனை அநங்கபாலன் சும்மாவிடவில்லை; வட இந்தியாவிலுள்ள அரசர் பலரையும் துணைகொண்டு, கடுஞ்சமர் செய்தான். இந்து மாதர்களும் தேசபக்தி மிகுந்து, ஆடை அணிகளை விற்றுப் பணங்கொடுத்தனர்; வீரருக்கு ஆடை நெய்து தந்தும், வைத்திய சிகிச்சை செய்தும் உதவிபுரிந்தனர். அநங்கபாலன் வெற்றிபெறும் சமயம், ஒரு சிலர் துரோக சிந்தைகொண்டு, கஜனி முகம்மதின் பக்கம் சேர்ந்துகொண்டனர். எதிர்பாராத வஞ்சம் விளையவே, அநங்கபாலன் நெஞ்சழிய, அக் கஜனி முகம்மது இறுதியில் வெற்றிபெறலானான்.

பின்பு நாகர் கோட்டை எனும் பலமான கோட்டையைத் தாக்க, அங்கே கஜனி முகம்மதுக்கு ஏராளமான செல்வம் கிடைத்தது. அப்பால், மூல்டான், தானேசுவரம், கன்னோசி முதலிய நகரங்களை அம் முகம்மது ஜெயித்துப் பிடிக்க முயன்றான். அப்போது ராஜபுத்திர வீரர் திரண்டெழுந்து, அவனைப் பல சண்டைகளில் முறியடித்தனர். இவ்விதம் ஜெயிப்பதும், தோற்பதுமாகப் பதினேழு முறை அவன் இங்கே வந்து போனான்.

அக்காலத்தில் கூர்ஜர நாட்டிலே சோமநாதர் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. தார்வேந்தரும் தனிகரும் அக்கோயிலுக்கு அளவற்ற பொன்னும் மணியும் காணிக்கையாகக் கொடுத்திருந்தனர். விக்கிரகத்தின் சிரத்திலிருந்த இரத்தினமொன்று சூரியப் பிரகாசம் பொருந்தியது. அந்த ஆலயத்தைக் கொள்ளை கொள்ளக் கருதி அவன் (கி. பி. 1022) பெரு முயற்சி செய்தான். ஆண், பெண், குழந்தை அடங்கலுமாக இந்துக்கள் அனைவரும் அக்கோயிலைக் காத்து நின்றனர். உக்கிரமான போரின்

முடிவில் முகம்மதுக்கே வெற்றி கிட்டியது. உடனே ஆலயத்துக்குள் அவன் புகுந்து,'விக்கிரகத்தை உடைத்து, மிகுந்த செல்வத்தைக் கைப்பற்றிச் சென்ருன்.

அதனைக்கொண்டு, அவன் தனது நாட்டை வளம் படுத்தினுன்; நகரை அலங்கரித்தான்; எங்கும் அரண்மனைகளும் மண்டபங்களும் சமைத்தான்; மசூதிகள் பல எழுப்பிப் புலவர்களையும் படிப்பாளிகளையும் ஆதரித்தான் ; பொருள் காட்சிசாலை யொன்றும் உண்டாக்கினுன். அதனுல் கஜனிராஜ்யம் பலவகையிலும் தலைசிறக்கலாயிற்று. கண்மூடுந் தறுவாயில், கொள்ளைப்பணம் அனைத்தையும் அவன் குவித்துப் பார்த்தான் ; பெருஞ் செல்வத்தை விட்டுப் பிரிவதா என்றும் பெருமூச் செறிந்தான். கி. பி. 1030-ஆம் ஆண்டில் அவன் மாண்டுபோனுன்.

கஜனியிலிருந்த அல்பரூனி எனும் புலவர் முகம்மதின் கோபத்துக்கு ஆளானுர். ஆகவே அவர் இங்கு வந்து வசிக்க நேர்ந்தது. அப்போது இந்திய பாஷைகளை அவர் கற்றறிந்து நம் தேசத்தைப்பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். 11-ஆம் நூற்ருண்டில் இந்தியா இருந்த நிலையை அந்நூல் விரித்துக்கூறும். முகம்மதின் படையெடுப்பையும் அட்டகாசத்தையும் அவர் கண்டித்திருக்கிருர் ; இந்துக்களின் நற்குணங்களையும் புகழ்ந்திருக்கிருர்.

முகம்மதின் படையெடுப்பையும் ஆலய இடிப்பையும் கண்டு, இந்துக்களுக்குள்ளே வைரம் மிகுந்தது. நீறுபூத்த நெருப்பேபோலிருந்த அவ் வைரம் அப்பால் கொந்தளிப்பாக மாறிற்று. முகம்மது மரித்த பதினைந்து வருஷங்களுக்குள் இந்துக்கள் கிளம்பி, பல பிரதேசங்களை மீட்டு, ஆறுதல் அடைந்தனர்.

முகம்மது கஜனிக்குப் பின் வந்த அரசர் திறமையும் தகுதியு மின்றி யிருக்கவே கஜனி ராஜ்யம் சீர்குலையத் தலைப்பட்டது. நூற்றைம்பது வருஷகாலம் பிரபலமா யிருந்த கஜனி வமிசமும் மறைந்துபோயிற்று. பன்னி

ரண்டாம் நூற்றுண்டிலே துருக்கரில் கோரி என்னும் வமிசத்தார் தோன்றி, அக்கஜனி நகரைத் தீக்கு இரையாக்கி, ஆப்கானிஸ்தானத்திலே தனியரசு கொண்டனர் அக்கோரி வமிசத்தில் பிரசித்தி பெற்றவன் முகம்மது கோரி எனப்படுவான்.

---

3. கோரி முகம்மது (1186—1206)

இந்தியாவின் செல்வச் சிறப்பே ஆதிமுதல் இன்றளவும் ஒருவிதத்தில் தீம்பாய் முடிந்துளது. கோரி முகம் மதும் நம் தேச வளப்பத்தைக் கேள்வியுற்று முகம்மது கஜனியைப் பின்பற்றக் காலங் கருதியிருந்தான். அக் காலத்திலே வட இந்தியாவில் **கன்னேசி, டில்லி** எனும் இரண்டு ராஜ்யங்கள் சிறந்திருந்தன. முறையே ஜெயசந் திரனும் பிருதிவி ராஜனும் அவற்றை ஆண்டுவந்தனர். இருவரும் ராஜபுத்திரர்; தாயாதியரு மாவர். பின்னவன் பெருவனப்பும் பேராண்மையும் படைத்தவன்; முன்ன வனுக்கோ பிருதிவிமீது பொருமை மிகுந்து நின்றது.

தற்பெருமைகொண்ட ஜெயசந்திரன், ராஜாதிராஜன் என்று பட்டஞ் சூட்டிக்கொள்ள ஆசைகொண்டு, அசுவ மேத யாகம் செய்தான்; அம்மகத்துக்கு மன்னவர் பலரையும் அழைத்தான்; பிருதிவி ராஜனுக்குமட்டும் திரு முகம் அனுப்பவில்லை. இது இப்படியிருக்க, அவனுக்கு அழகிற் சிறந்த **ஸம்யுக்தை** எனும் புதல்வி யொருத்தி இருந்தனள். பிருதிவிராஜனது புஜபல பராக்கிரமங்களைக் கேட்டு, அவனை மணக்கவே அவள் விரும்பி யிருந்தாள். பிருதிவியும் அவளது எழில்நலங் கேட்டு அவளையே மனையாளாகக் கொள்ள மனம் வைத்திருந்தான்.

அசுவமேத யாக சமயத்தில், ஸம்யுக்தையின் சுயம் வரமும் ஏற்பாடாகியிருந்தது. இதற்கும் பிருதிவிராஜனை ஜெயசந்திரன் அழைக்கவில்லை; தவிர, பிருதிவியை அவ

மதிக்கவேண்டி, அவனைப்போலவே உருவ மொன்று சமைத்து, அதற்குக் கீல் பூசி, மண்டபத்தின் வாயிலிலே காவலாளனைப்போல் வைத்திருந்தான். சுயம்வர மண்டபத்தில் மணமாலையுடன் தோன்றிய ஸம்யுக்தை யாரையும் உற்று நோக்கவில்லை; வாயிலிலே நிறுத்திவைத்திருந்த பிருதிவியின் பிம்பத்துக்கு மாலையிட்டு மகிழ்ந்தனள். அச்சமயம் திடீரென ஆங்கே பிருதிவிராஜன் சில வீரருடன் தோன்றி, ஸம்யுக்தையைக் குதிரைமீது ஏற்றிக் கொண்டு விரைந்து மறைந்தான். பிறகு பிருதிவிக்கும் ஜெயசந்திரனுக்கும் தீராப்பகை மூண்டது.

ஜெயசந்திரனது வீரர் சினந்தெழுந்து, பிருதிவியைத் தொடர்ந்துசென்று, பிருதிவியின் வாளுக்கு இரையாயினர். அதுகண்ட ஜெயசந்திரன் வைரங் கொண்டு, பிருதிவியைத் தொலைத்துவிடக் கருதி, முகம்மது கோரிக்கு ஓலையனுப்பினன். 'கஞ்சி வரதப்பா என்றால், எங்கு வரதப்பா' என்றிருந்த கோரி பேரானந்தங் கொண்டு, திரண்ட படையுடன் இந்தியாவில் புகுந்தான். பிருதிவி ராஜனும் அது கேட்டுச் சிங்கநாதத்துடன் போருக்கு எழுந்தனன்.

கோரி முகம்மது

அப்போது ஜெயசந்திரனைத் தவிர ஏனைய ராஜபுத்திரர் அனைவரும் பிருதிவிக்குத் துணையாயினர். தானேசுவரம் என்னுமிடத்தில் இருபக்கத்துப் படைகளும் (கி.பி.1911) சந்தித்து, உக்கிரமாகப் போர்புரிந்தன. அப் போரின் முடிவிலே கோரி முகம்மது படுகாயமடைந்து, பிருதிவியின் கையில் சிக்கிக்கொண்டான். பிருதிவியோ தக்க மருத்துவரைக் கொண்டு, கோரியின் புண்களை ஆற்றி,

உயிர்ப்பிச்சை யளித்து, மரியாதையாக அனுப்பிவைத்தான். பகைவனை உயிருடன் விடக்கூடாதென நேசர் கூறியும், பிருதிவிராஜன் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

உயிர்தப்பி ஓடிய கோரியோ பிருதிவியைப் பழி வாங்க வேண்டுமென்றே எண்ணியிருந்தான்; ஆபத்தில் தன்னைக் கைவிட்டு ஓடிய சேனைத்தலைவர்களின் வாயில் கொள்ளுப்பையைக் கட்டிக் கோரிநகரின் தெருக்களில் நடத்தி, மானபங்கம் செய்தான்; நாள் சில சென்றதும், இந்தியாவின்மீது மீண்டும் படைகொண்டு புகுந்தான். அவ்விதம் கோரி ஒன்பது முறை வர, ஏழு முறை பிருதிவியின் கையில் தோல்வியுண்டான் என்று ராஜபுத்திரரின் சரித்திர நூல்கள் கூறும்.

கடைசிமுறையாக முகம்மது கோரி கி. பி. 1192ஞ ஒரு லட்சம் வீரருடன் இங்கே வந்தான். பிருதிவிராஜனும் முன்போல் ஆயத்தமாக, இருவர் சேனைகளும் தானேசுவரத்திலேயே மீண்டும் சந்தித்தன. ராஜபுத்திரர் வீராவேசத்துடன் சமர் செய்யவே, கோரியின் படைகள் சிதறியோடத் தலைப்பட்டன. அப்படையினைத் துரத்திச் செல்லுகையில், வஞ்சனையாகக் கொலையுண்டான் பிருதிவிராஜன். உடனே டில்லி ராஜ்யம் கோரியின் வசமாயிற்று. பின்பு, ஜெயசந்திரனது கன்னோசி ராஜ்யத்தையும் கோரி பிடித்துக்கொண்டான்.

கோரியும் பல நகரங்களைக் கொள்ளையாடி ஏராளமான பொருள்களை எடுத்துச் சென்றான். இங்கிருந்த ஆலயங்களையும் அவன் நாசமாக்கினான். காசியில்மட்டும் ஆயிரம் ஆலயங்கள் அழிந்தன என்பர். இந்தியாவிலிருந்து ஆட்சிபுரிய அக்கோரி முகம்மதும் கருதவில்லை. ஆதலின், தன் தளகர்த்தரில் ஒருவனான குத்புதீன் என்பவனை இந்தியாவில் ஆட்சி புரியுமாறு அமர்த்திச் சென்றான்.

தானேசுவரச் சண்டையிலே ராஜபுத்திரரில் பலர் வீரசுவர்க்கம் புகுந்தனர். டில்லி மாதரில் பலர் தீக்குளித்

தனர். ஏனைய ராஜபுத்திரரோ கங்கைச் சமவெளியை விடுத்து, மத்திய இந்தியாவிலே ராஜபுதனம் எனும் பிர தேசத்தில் குடியேறி, சிறிய ராஜ்யங்கள் ஸ்தாபித்து அரசுகொண்டனர். பிருதிவிராஜன் மடிந்தபின்பு, டில்லி யிலே பரம்பரையான இந்துராஜ்யம் மறைய, இஸ்லாம் அரசு முளைக்கத் தலைப்பட்டது.

---

4. டில்லி சுல்தான்கள்

அடிமை வமிசம் (1206—1290)

ஆடு மாடுகளை நாம் விலைக்கு வாங்குவதுபோல், முன் காலத்தில் மனிதரையும் விலைக்கு வாங்குவது வழக்கம். அவர்களுக்கு **அடிமைகள்** என்று பெயர். முகம் மது கோரியின் பிரதிநிதியாக டில்லியில் ஆட்சிபுரிய அமர்ந்த **குத்புதீன்** ஓர் அடிமையே. இளமை முதல் அடிமையாக இருந்த குத்புதீன் நாளடைவில் அக்கோரிக் குப் பிள்ளைபோ லானான்; சேனையிலே தலைமைப் பதவி யும் எய்தினான். அதனால் குத்புதீனுக்கு இங்கே அரசு கிட்டலாயிற்று. அடிமையாக இருந்து அரசன் ஆனமை யால் அவனுக்கும் அவனுக்குப்பின் வந்த அரசர்களுக் கும் **அடிமை அரசர்** என்று பெயர் வந்தது. அவர்களுக்கு **ஸுல்தான்** என்று பட்டப் பெயர் உண்டு.

குத்புதீன் : பிருதிவி ராஜனை வென்று, முகம்மது கோரி தன் ஊருக்குத் திரும்புகையில், கோக்கர் எனும் ஜாதியாருடன் அவன் போர் புரிய நேர்ந்தது. அப் போரில் அவன் மாண்டு போனான். கோரி மாண்டதும் குத்புதீன் சுயாதீனம் கொண்டு, சுல்தான் எனும் பட்டத் துடன் டில்லியிலிருந்து அரசாளத் தலைப்பட்டான். அம் மாநகரிலிருந்து அரசு செலுத்திய முதல் முகம்மதிய மன்னவன் குத்புதீனே. நாலே வருஷம் (கி. பி. 1206—

1210) அவன் டில்லி சுல்தானுக விளங்கினுன். அவன் காலத்திலே பண்டில்கண்ட், கூர்ஜரம், வங்காளம், மகதம் முதலிய நாடுகள் அவன் வசமாயின.



குதுப் மினுர்

குத்புதீன் சிறந்த வீரனுதலின், போர் வீரரிடம் பிரியங்கொண்டு, அவர்களுக்கு மிக்க பொன்னும் பூமியும் கொடுத்தான். அவன் கட்டிய கட்டடங்களில் இரண்டு இன்றளவும் டில்லியில் அழியாமல் நிலைபெற்றுள. அவற்

றுள் ஒன்று டில்லி நகரிலுள்ள **குதுப் மசூதி**. மற்ருென்று **குதுப் மினர்** எனும் மிகப் பெரிய ஸ்தம்பம். இது 250 அடி உயரம் உள்ளது; சுமார் ஆயிரம் வருஷம் ஆகியும், மழை வெயில் காற்று இவற்ருல் கெடாமல் இருக்கிறது. இக்காலத்து எஞ்சினியர்களும் அதன் நன்னிலே கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைவர்.

அல்தமஷ்: குத்புதீனுக்குப் பின் அவன் மைந்தன் அரசனுகியும் ஓராண்டுக்குமேல் ஆளவில்லே. குத்புதீனது அடிமையும் மாப்பிள்ளேயுமான அல்தமஷ் (கி. பி. 1210-1236) சிம்மாசனம் ஏறி, இருபத்தைந்து வருஷம் ஆட்சி செலுத்திவந்தான். இவன் காலத்தில் சிந்துநதி முதல் கங்கைநதி வரையில் உள்ள பிரதேசம் முழுதும் இவன் வசமிருந்தது. மங்கோலியர் எனும் முரட்டு ஜாதியார் சிங் **கிஸ்கான்** என்பவனது தலேமையில் இந்தியாவில் புக முயன்றும் இவன் தடுத்துவிட்டான்.

ரஜியா: அல்தமஷ் இறந்த பின்பு அவன் மகள் **ரஜியா** என்பவள் (கி. பி. 1236—1239) அரசைக் கைக் கொண்டாள். டில்லியிலிருந்து அரசு செலுத்திய பெண்ணரசி இவள் ஒருத்தியே. இவள் மிகவும் படித்தவள்; தைரியமும் தந்திரமும் வாய்ந்தவள்; ஆண் உடை தரித்து அரியணேயில் அமர்ந்து, ராஜரீகம் நடத்துவாள்; ஆண் வேஷத்துடனேயே வீதி வலமும் வருவாள். சிறிதும் சலியாமல் சிறப்பாக இவள் ஆண்டு வந்தனள். விரோதிகளால் அவள் கொலேயுண்டு போகவே குழப்பம் ஏற்பட ஆறுண்டுகளுக்குப் பின் நாசிருதீன் பட்டம் பெற்ருன்.

நாசிருதீன்: அடிமை அரசரில் சிறந்த ஒருவன் **நாசிருதீன்**. இவன் இருபது வருஷ காலம் (கி. பி. 1245—1266) நேர்மையாக அரசாண்டான். தெய்வ பக்தியிலும் கல்வி கேள்விகளிலும் இவன் சிறந்தவன். குடிகள் கட்டும் வரிப்பணத்தில் ஒரு பைசாகூட இவன் தன் செலவுக்கு எடுத்துக் கொள்ளவில்லே; முகம்மதிய

ரின் வேத நூலான குர்-ஆன் என்பதைக் கையினுல் எழுதி விற்று, அந்தப் பணத்தைக் கொண்டே காலங் கழித்து வந்தான். ஒரு வேலேக்காரி வேண்டுமென அவன் மனேவி ஒரு சமயம் விரும்பியும், அதற்கு இவன் ஒப்பவில்லே. கல்விமான்களுடன் உரையாடுவதிலேயே இவன் காலங் கழித்தான். இவனிடம் மந்திரியாக இருந் தவன் கியாசுதீன் பால்பன்.

பால்பன் : நாசிருதீனுக்குப் பின்னர் பால்பன் (கி. பி. 1266—1287) சுல்தாஞக வந்தான். இருபது வருஷ காலம் இவன் திறமையாக ஆட்சி செலுத்தினுன் ; காடுகளே யழித்து நாடாக்கியும், நல்ல சாலேகளே எங்கும் அமைத்தும், கொள்ளேக் கூட்டத்தாரை ஒழித்தும், நன்மை பல செய்தான். மகா தடபுடல்காரனுதலின், இவனேக் கொடிய அரசன் என்பர். வங்காளத்திலிருந்த பிரதிநிதி கலகமாய்க் கிளம்பவே, அவனேயும் அவன் குடும்பத்தையும் பரிவாரத்தையும் வீதியிலே தூக்குமரம் நாட்டி இவன் கொன்று குவித்தான். இவன் காலத்தில் மொகலாயர் என்போர் இந்தியாவுக்குள் திரண்டுவந்தனர். அவர்களேப் பன்முறை இவன் துரத்தியடித்தான்.

முடிவில் பால்பன் பேரன் கைகுபார் என்பான் பட்டத்துக்கு வந்தான். இவன் துன்மார்க்கனுதலின், பலரும் இவனே வெறுத்தனர். மூவாண்டு அரசாண்ட பின்பு 1290-ஆம் ஆண்டில் இவன் கொலேயுண்டான். அடிமை யரசரில் கடையவன் இவனே. இவனுக்குப்பின் அடிமை அரசரின் வமிசம் அற்றுப்போயிற்று. துருக்கிய வகுப்பைச் சேர்ந்த கில்ஜி வமிசத்தார் டில்லியில் அமர்ந்து ஆளத் தொடங்கினர்.

—

5. கில்ஜி வம்சம் (1209—1320)

கடைசி அடிமையரசனிடம் தளகர்த்தனாக இருந்தவன் ஜலாலுதீன் எனப்படுவான். வேந்தனது அவல நிலையையும், நாட்டின் அலங்கோலத்தையுங் கண்டு, அரசனைக் கொன்று, இவன் சிம்மாசனம் ஏறினான். பட்டம் ஏறும்பொழுது இவனுக்கு வயது எழுபது. படுகொலை புரிந்து பட்டத்துக்கு வந்தபின்னர், மீண்டும் இரத்தக் களறி காண இவன் விரும்பவில்லை. அத்தகைய மனநிலை கண்டு மாளவநாடு கலகமாகக் கிளம்பியது. உடனே தன் சோதரன் மைந்தன் அல்லாவுதீன் என்பானை மாளவத்தின்மீது இவன் அனுப்பினான்.

அல்லாவுதீன் அங்ஙனமே சென்று, அக்கலகத்தை அடக்கினான். பேராசை பிடித்தவனாதலின், தேசமெங்கும் தண்டு கொண்டுசென்று தாண்டவம்புரிய இவன் விரும்பினான். அப்போது தட்சணத்திலிருந்த **தேவகிரி** நாட்டின் செல்வச் சிறப்பு இவனுக்குத் தெரியவந்தது. தேவகிரியை இப்போது தௌலதாபாத் என்பர். திடீரென்று இவன் பெரும்படையுடன் சென்று, தேவகிரி நகரை முற்றுகை போட்டான். எதிர்பாராது நேர்ந்த முற்றுகையை அத்தேவகிரி வேந்தன் சமாளிக்க முடியவில்லை. ஆதலின், மிகுந்த பணங் கொடுத்து, அல்லாவுதீனிடம் அவன் சமாதானம் செய்துகொண்டான்.

வெற்றிமாலையும் வெகு பணமும் கிட்டியவுடனே ஆனந்தபரவசனாய் டில்லிக்குத் திரும்பினான் அல்லாவுதீன்; உடனே அரசின்மீது ஆசைகொண்டு, பெரியப்பனைக்கொன்று இவன் பட்டம் ஏறினான்; அத்துடன் நில்லாமல், அவன் பிள்ளைகளின் கண்களையும் பிடுங்கிக் கொடுமை புரிந்தான். இவன் காலத்திலும் மங்கோலியர்

பெருங்கூட்டமாக வந்துபுக, அவர்களை இவன் முறியடித்து ஒட்டினன். அவ்வெற்றிக் களிப்பு மேலிடவே, இந்தியாவெங்கும் தன் ஆட்சியைப் பரப்பவேண்டுமென இவனுக்கு ஆவல் உதித்தது.

---

6. அல்லாவுதீன் கில்ஜி (1295—1310)

முதன் முதலாகக் கூர்ஜர நாட்டின்மீது அல்லாவுதீன் படைகொண்டு சென்றான். அந்நாட்டினை யாண்டு வந்த கர்ண தேவன் அஞ்சியோடவே, அவன் மகிஷி கமலாதேவி அல்லாவுதீன் கையில் சிக்கிக்கொண்டாள். ஏராளமான திரவியமும் அகப்பட்டது; எண்ணிறந்த இந்துமாதரும் சிறைப்பட்டனர். பின்பு இந்துக்களில் பலரை இவன் கொன்று, டில்லி சென்று, கமலா தேவியை மணந்து மகிழ் பூத்தான்.

அல்லாவுதீன்

அப்பால் இவன் மேவார் நாட்டின்மீது பாய்ந்தனன். அப்போது அந் நாட்டின் வேந்தனாக விளங்கியவன் பீமசிம்மன். அவன் தேவி பத்மினி. வனப்பில் சிறந்த பத்மினியை அடையக் கருதி அந்நாட்டின் தலைநகரான சித்தூரை அல்லாவுதீன் முற்றுகை போட்டான். பன்னிரண்டு வருஷம் ராஜபுத்திரர் தீரமுடன் எதிர்த்து நின்றனர். முடிவில் கோட்டையிலே ஒரு புறம் தகர்ந்து போயிற்று. அதுகண்டு, கோட்டைக்குள்ளிருந்த ராஜபுத்திர மாதர் அனைவரும் கலியாண கோலமேபோல்

ஆடையும் அணிகளும் பூண்டு, தாமரைத் தடாகத்தில் இறங்குவதேபோல் தீக்குளித்து உயிர் நீத்தனர்.

ஆடவரோ மஞ்சள் உடைதரித்து மார்தட்டி உடைவாளுடன் கோட்டையை விட்டு வெளியேவந்து, கோர யுத்தம் புரிந்து உயிரைத் துறந்தனர். பின்பு அக்கோட்டைக்குள் அல்லாவுதீன் புகுந்து பார்க்க, அது ஒரு சுடுகாடுபோல்இருந்தது. ஒரு சிறுவன் மட்டும் தப்பியோடி, வயது வந்ததும் அந் நாட்டை மீட்டு, அங்கே ராஜபுத்திர அரசை மீண்டும் நிலைநாட்டினன்.

பிறகு தட்சணத்தையும் தென்னிந்தியாவையும் ஜெயிக்க வேண்டுமென்று அல்லாவுதீன் கருதினன். உடனே பெருஞ்சேனை திரள, அதற்கு மலிக்காபூர் என்பான் சேனதிபதி ஆயினன். அவனோ அல்லாவுதீனின் அடிமைகளில் ஒருவன்; அல்லாவுதீனுடைய அன்புக்குப் பாத்திரமானவன். முதன்முதலாக மலிக்காபூர் தட்சணத்திலுள்ள தேவகிரி நாட்டின்மீது பாய்ந்து, அதன் அரசனைக் கப்பங் கட்டச் செய்தான்; பின்பு ஓரங்கல் நகரை ராஜதானியாகக் கொண்ட தெலுங்கு ராஜ்யத்தை ஜெயித்தான்; அதற்குப் பின்பு மைசூர் ராஜ்யத்தின் தலைநகரான துவாரசமுத்திரம் என்பதைக் கைப்பற்றிக் கொண்டான்; அப்பால் தென்னிந்தியாவிலுள்ள பாண்டி நாட்டின்மீது பாய்ந்து, மதுரையை வசஞ் செய்து, இராமேசுவரம் வரையில் சென்று கொடி நாட்டினன்; பல இடங்களில் மசூதிகளும் கட்டினன்.

இந்தியாவின் பெரும் பாகத்தில் கொடிபோட்ட முதல் முகம்மதிய மன்னவன் அல்லாவுதீனே. இந்து மாதை மணந்துகொண்ட முதல் முகம்மதிய வேந்தனும் இவனே. பல நாடுகளை இவன் ஜெயித்துப் பிடித்தாலும், நெடுங்காலம் அவை அடங்கிக் கிடக்கவில்லை. கூர்ஜர நாட்டு வாசிகள் கலகமாகக் கிளம்பித் தனியரசு கொண்டனர்; சித்தூர்க் கோட்டையைக் காவல் புரிந்து நின்ற

அல்லாவுதீன் சேனை துரத்தி யடிக்கப்பட்டது. தேவகிரியும் முகம்மதியச் சேனையை ஓட்டிவிட்டுச் சுயாதீனம் கொண்டது. இவ்விதம் அரசு குலைந்துவர, அல்லாவுதீனை வியாதியும் பீடிக்கத் தொடங்கிற்று. முடிவில் ஏக்கமும் நோயும் கூடிக்கொண்டு இவனைக் கொன்றுவிட்டன.

அல்லாவுதீனுக்குப் பின் அவன் மைந்தன் முபாரக் ஐந்தாண்டு அரசாண்டான். ராஜரீகத்தை இவன் கவனியாமல், வேறொருவனிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தான். முகம்மதியரில் பலருக்கு அது பிடிக்கவில்லை. அப்போது பஞ்சாபின் கவர்னரா யிருந்த கியாசுதீன் என்பான் ஸுல்தான் ஆயினன். இத்துடன் கில்ஜி வமிசம் முடிவடைந்தது.

---

7. துக்ளக் வமிசம்

முகம்மது துக்ளக் (1325—1351)

கில்ஜி வமிசத்தின் கடைசி யரசனைக் கொன்று பட்டமேறிய கியாசுதீன், துக்ளக் வமிசத்தைச் சேர்ந்தவன். அவன் அன்பும் உறுதியுங்கொண்டு, அரசாளத் தொடங்கினன்; வடமேற்கு எல்லைப்புறத்தில் தக்க பாதுகாப்புக்கள் செய்து வைத்தான். பழைய ராஜ வமிசம் மறைந்து, புதிய ராஜ வமிசம் தோன்றியதனால், தேவகிரி, ஓரங்கல் ஆகிய நாடுகளில் குழப்பங்கள் நிகழ்ந்தன. உடனே கியாசுதீன் அக் குழப்பங்களை யடக்கி, அங்கெல்லாம் ஒழுங்கை நிலைநாட்டினான்; பின்பு, படைகொண்டு வங்காளம் சென்று, அங்கே அமைதியை உண்டுபண்ணினான். அதன்பின் டில்லிக்குத் திரும்பவே, அங்கே மண்டபமொன்று இடிந்துவிழ, அதில் அகப்பட்டு அவன் மாண்டுபோனான்.

கியாசுதீனுக்குப்பின் அவன் மைந்தன் முகம்மது துக்ளக் சிம்மாசனத்தில் அமர்ந்து, 25 வருஷகாலம்

அரசாட்சி செய்துவந்தான். இவன் மகா தெய்வ பக்தன்; சிறந்த கல்விமான்; கணித சாஸ்திரத்தில் நிபுணன்; வான சாஸ்திரத்தில் வல்லவன்; பெரு வீரனும் ஆவான். எனினும் இவனைச் சற்றறி மூடன் எனவும், கொடும் பித்தன் எனவும் சிலர் கூறுவர்.

இந்தியா தேசத்தின் முக்கால் பாகம் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவனுக்கு முன்பு முகம்மதியரில் இவ்வளவு பெரிய ராஜ்யங் கொண்டோர் கிடையாது. ஜாதி, மத பேதமில்லாமல், தகுதி ஒன்றையே மதித்து, அதிகாரிகளையும் தளகர்த்தர்களையும் இவன் நியமித்தான். இவன் காலத்தில் கொடிய பஞ்சங்கள் தோன்றின. உடனே வரிவஜா செய்து, வேளாளருக்கு இவன் ஆறுதல் அளித்தான்; பஞ்சநிவாரண வேலைகளுக்கும் ஏராளமான பணஞ் செலவழித்து ஜனங்களுக்கு உதவி புரிந்தான்.

முகம்மது துக்ளக்

இவன் காலத்திலே மங்கோலியர் வடமேற்கிலிருந்து டில்லி நகர் வரையில் வந்து, அட்டகாசஞ் செய்தனர். அவர்களுடன் கடுஞ் சண்டை போட்டால், மக்களிலே பலர் அழிவரென இவன் பெரிதும் சிந்தனை செய்தான்; முடிவிலே ஏராளமான பணங் கொடுத்து அம் மங்கோலியரை அனுப்பிவிட்டான்.

அங்ஙனம் மங்கோலியரை அனுப்பியபின் இந்தியாவுக்கு வடக்கேயுள்ள மலைப்பிரதேசம், வடமேற்கிலுள்ள பாரசீகதேசம் இரண்டையும் ஜெயிக்க முகம்மது துக்ளக் விரும்பினன். பாரசீகப் படையெடுப்புக்கு எகிப்து தேச

வேந்தன் ஆதரவு தருவதாகச் சொல்லினன். அதன்மேல் முகம்மதின் படைகள் புறப்பட்டுச் சென்றன. ஏற விட்டு ஏணியை வாங்குவதுபோல், எகிப்து வேந்தன் வாளா இருந்துவிட்டான். ஆதலினுல் பாரசீகப் படையெடுப்பு இடைநடுவில் முறிந்து கைகூடவில்லை.

வடக்கே இமயமலையை அடுத்துள்ள பிரதேசத்தின் மீது படைகொண்டு செல்வதாயின், பல பெரிய மலைக் குன்றுகளைக் கடந்து செல்லவேண்டும். அக் குன்றுகளைக் கடத்தலென்பது ஆகாத காரியமாயினும், பரீட்சார்த்தமாக ஒரு சேனையை இவன் அனுப்பிப் பார்த்தான். எதிர்பாராத விதமாகப் பெருமழை பொழியத் தலைப்பட்டது ; அதனுல் வீரர் மிகவும் வருந்தினர் குளிர் தாங்காமல் பலர் மாண்டு மடிந்தனர். அதன் மேல் அப்படையெடுப்பையும் கைவிட நேர்ந்தது.

முகம்மதின் காலத்தில் ராஜ்யம் மிகவும் விசாலமாக இருந்தது. ஆதலின், தலைநகரம் ஒரு மூலையில் இருப்பதினும் நடுநாயகமான இடத்திலிருப்பதே மேலென இவன் எண்ணினுன். அங்ஙனமே டில்லிமா நகரிலிருந்து தேவகிரிக்கு ராஜதானியை மாற்றிவிட ஏற்பாடுகளாயின. முதலில் அரசாங்க ஊழியரும் காரியாலயங்களும் போய்ச் சேர, அப்பால் நகர ஜனங்கள் போய்ச் சேருமாறு கட்டளை பிறந்தது.

டில்லிக்கும் தேவகிரிக்கும் இடையே எழுநூறுமைல் தூரம். பாதையின் இருமருங்கிலும் நிழல்தரும் மரங்கள் நிறைந்திருந்தன. வழியில் ஆங்காங்கே சத்திரம் சாவடிகளும் இருந்தன. மேலும் நெடுங்காலமாக வசித்துவந்த இடத்தைவிட்டுப் போகநேர்வதில் ஏற்படும் நஷ்டத்தைக் கட்டித்தரவும் முகம்மது துக்ளக் வழிதேடினுன். ஆயினும் மகாஜனங்களுக்கோ பரம்பரையான வாசஸ்தலத்தை விட்டு வேற்றிடம் போக மனமில்லை. வேந்தன் ஆணை சீறி நின்றதனுல், முணுமுணுத்துக்கொண்டே

பலரும் பயணமாயினர். நெடுந்தூரம் மூட்டைமுடிச்சுக்களுடன் நடந்து செல்லும் கஷ்டம் ஒருபுறம், கொள்ளை நோய்கள் ஒருபுறம், ஆக இரண்டும் சேர்ந்து மக்களை வாட்டின. அஃதறிந்த இறைவன் மீண்டும் டில்லியையே ராஜதானியாகக் கொண்டனன்.

படையெடுப்புக்களாலும் பஞ்சங்களாலும் செலவு அதிகம் நேர்ந்தமையால், அரசன் பொக்கிஷம் வறண்டு விட்டது. அதனைச் சமாளிக்கவேண்டியே, வெள்ளி, தங்க நாணயங்களுக்குப் பதிலாகச் செப்பு நாணயங்களை அச்சடித்து வழங்கினன் முகம்மது துக்ளக். மக்களில் சிலரும் கள்ள நாணயங்கள் அச்சடித்து வழங்கலாயினர். அதனல் செல்வ நிலைமை இன்னும் சிக்கலாயிற்று. அந் நாணயங்கள் மதிப்பினை இழந்தன. வர்த்தகம் குறைந்தது. அவ்வேளை செப்பு நாணயங்கள் அனைத்தையும் உரிய விலைக்கு வாங்கிப் பழைய நாணயங்களையே மீண்டும் இவன் வழங்கலானன்.

மகாஜனங்களின் நலத்தை மதித்து, முகம்மது துக்ளக் செய்த காரியங்கள் பற்பலவாம். நோயாளிகளுக்கு உதவியாக இவன் பல வைத்தியசாலைகளை அமைத்தான்; அனாதைகளுக்கும் ஏழைகளுக்குமாக அன்னசாலைகள் பல ஏற்படுத்தினன்; வேளாண்மை விருத்தியாகவேண்டி, எண்ணிறந்த கால்வாய்கள் வெட்டிவைத்தான். அறிவைப் பரப்ப இவன் அமைத்த கல்விச்சாலைகளும் பலவாம்.

---

8. லோடி வமிசம் (1451—1526)

முகம்மது துக்ளக்குக்கு மைந்தன் இல்லையாதலின், அவனுக்கு ஒன்றுவிட்ட சோதரன் பிரோஸ்ஷா என்பான் சிம்மாசனம் ஏறினன். இவன் கருணையும் சாந்தமும் வாய்ந்தவனய், முப்பத்தேழு வருஷ காலம் அரசாண்டு வந்தான். மதவைராக்கியம் மிகுந்தவனதலின்,

விக்கிரக ஆராதனை கூடாதென்று கட்டளை யிட்டான்; முகம்மதிய ரல்லாதாருக்குத் தலைவரியும் போட்டான்.



டில்லி சுல்தான்கள் காலத்திய தேச படம்

இவன் கருணை வாய்ந்த காவலனாயினும் திறமை வாய்ந்த வீரனல்லன். இவன் தந்தையின் காலத்தில் தோன்றிய கொந்தளிப்புக்கள் இவன் காலத்திலே

எங்கும் பரவின. அதனால் டில்லி ராஜ்யம் சின்னபின்னமாயிற்று. தட்சணத்திலே **பாமினி ராஜ்யம்** என ஒரு புதிய ராஜ்யம் ஏற்பட்டது. அந்த ராஜ்யத்தை யடுத்து **விஜயநகர ஸாம்ராஜ்யமும்** தோன்றியது; வங்காளமோ தனியரசு கொண்டது.

இவனுக்குப்பின் ஒருவர் பின் ஒருவராகப் பற்பல அரசர் அரியணை ஏறினர். அனைவரும் திறமையற்றவராக இருந்தமையால், டில்லி ராஜ்யம் இன்னும் கலகலத்தது. போதாக் குறைக்குத் **தைமூர்** என்பான் வடமேற்கிலிருந்து வந்து, கொள்ளையும் கொலையும் நடத்திக் கொக்கரித்தான். தைமூர் துருக்க வமிசத்தைச் சேர்ந்த ஒரு கொடியன்; கொல்லுக் கொலைக்கு அஞ்சாதவன்; துருக்கர், தூர்த்தர், பாரசீகர் முதலியோரைக் கொண்ட பெரும்படையுடன் இந்தியாவில் புகுந்தான்; 1388ஆம் மூல்தான் நகரைக் கொள்ளை கொண்டபின், மறுவருஷம் டில்லிநகருக்குள் புகுந்தான்.

தைமூர்

தைமூர் டில்லியில் புகுந்தபொழுது, துக்ளக் வமிசத்தின் கடைசி வேந்தனான **முகம்மதுஷா** டில்லி சுல்தானாக விளங்கினான். தைமூரின் வரவு கேட்டதும், இவன் ஓடி ஒளிந்துகொண்டான். நாதனற்றுக் கிடந்த நகரிலே தைமூர் இலகுவில் புகுந்து சக்கரவர்த்தி என முடிசூடி, மக்கள் அனைவரும் அபரிமிதமான பணங் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டான். இயன்றவளவு மக்கள் பணங்கொடுத்து உதவியும், தைமூர் திருப்தி கொள்ளவில்லை. உடனே அவன் வீரர் கோபங்கொண்டு

டில்லிவாசிகளை வாளுக்கு இரையாக்கி, இரக்கம் என்பது இம்மியும் இல்லாமல் நகரைச் சூறையாடினர்.

டில்லிநகரின் தெருக்களில் இரத்த ஆறு ஓட, மூலை முடுக்குகளி லெல்லாம் பிணக்காடுகள் நிரம்பின. பதி னைந்துநாள் கொள்ளையும் கொலையும் கண்டுகளித்த பின் னர், அளவற்ற திரவியத்துடன் அவன் தன் சொந்த தேசம் திரும்பிச் சென்றான்; எண்ணிறந்த மக்களையும் சிறைகொண்டு போனான்.

தைமூர் சென்றபின்பு முகம்மதுஷா வெளிக்கிளம்பி, டில்லிக்கு வந்துசேர்ந்தான். அப்போது டில்லிப் பிர தேசம் மட்டுமே அவனுக்கு உட்பட்டு நின்றது. அப் பால் ஸயீத் எனும் வமிசத்தைச் சேர்ந்த கிஸிர்கான் என்பான் பட்டமேறினான். இவனும் இவன் வமிசத்தா ரும் சுமார் நாற்பது வருஷம் டில்லி சுல்தான்களாக அரசு செலுத்தினர். அப்பால் ஆப்கானிஸ்தான வாசி யான பஹ்லால் லோடி சிம்மாசனத்தில் அமர்ந்தனன்.

—

9. இப்ராஹிம் லோடி (1517—1526)

பஹ்லால் லோடி என்பவன் லோடி எனும் வமிசத்தைச் சேர்ந்தவன். ஆதலின், இவனும் இவனுக்குப் பின் வந்த அரசரும் லோடி வமிசத்தினர் எனப்படுவர். இவ் வமிசத்தார் சுமார் எழுபது வருஷகாலம் (கி. பி. 1450 முதல் கி. பி. 1526 வரை) டில்லி சுல்தான்களாக விளங் கினர். லோடி வமிசத்தின் கடைசி யரசன் பெயர் இப் ரஹிம் லோடி. இவன் சேனை அடிக்கடி கலகமாகக் கிளம் பியதனால், படைவீரருக்கு இவன் கடுமையான தண்டனை விதித்தான். ஆயினும், சேனையின் குழப்பம் அடங்காமல் கொழுந்துவிடத் தலைப்பட்டது. நாட்டில் கொந்தளிப்பு மிஞ்சியது. மக்களும் மனங்குழம்பி நின்றனர்.

அப்போது பஞ்சநதிப் பிரதேசத்தில் தளகர்த்தனாக இருந்தவன் தௌலத்கான் என்பவன். ஆப்கானிஸ்தானத்தில் அரசுகொண்டு இந்தியாவினுள்புக எண்ணி நின்ற பாபர் என்பானை அத்தௌலத்கான் அழைக்கலானான். தைமூர் வமிசத்தைச் சேர்ந்த அப்பாபர் பரம சந்தோஷத்துடன் படைகொண்டு வந்தான். பாணிபத் என்னும் இடத்திலே 1526ல் இரு பக்கத்துப் படைகளும் சந்தித்தன. அச்சண்டையில் இப்ரஹிம் லோடி தோற்றுப் போகவே, டில்லி ராஜ்யம் பாபரின் வசமாயிற்று. பின்பு மொகலாய மரபினரான பாபரும் அவன் சந்ததியாரும் டில்லியிலிருந்து அரசாளத்தொடங்கினர்.

குத்புதீன் காலமுதல் (கி. பி. 1206) இப்ரஹிம்லோடி காலம்வரையில் (கி. பி. 1526) டில்லி சுல்தான்கள் என்போர் சுமார் 300 வருஷகாலம் ஆட்சி செய்து வந்தனர்.

---

10. பாமினி ராஜ்யம் (1437—1526)

முகம்மது துக்ளக்கின் காலத்திலே இந்தியா தேசமெங்கும் கொந்தளிப்பு மூண்டதல்லவா? அப்போதும் அதற்குப் பின்பும் இத் தேசத்திலே ஆங்காங்கு பற்பல சிற்றரசுகள் முளைத்துக் கிளைத்தன. அவ்வரசுகளில் சில இந்து அரசுகள்; சில முகம்மதிய அரசுகள். முகம்மதிய அரசுகளில் முக்கியமானது பாமினி ராஜ்யம். அந்த அரசைக் கண்டவன் விருத்தாந்தம் விசித்திரமாம்.

ஹாஸன் கங்கு: டில்லிமாநகரில் கங்கு என்னும் வேதியனிடம் ஹாஸன் எனும் ஒரு வேலைக்காரன் இருந்தான். அந்த ஹாஸன் பாரசீக தேசத்தை ஆண்டுவந்த பாமன் எனும் அரசனது சந்ததியைச் சேர்ந்தவன். வேதியனது வயலை அவ்வேலையாளன் உழுது நின்றபொழுது, பெரும் புதையல் ஒன்று அகப்பட்டது. அதனை வேதியனிடம் கொண்டு சேர்த்தான் வேலையாளன். அதுகண்டு



பாமினி, விஜயநகர ராஜ்யங்கள்

கங்கு சந்தோஷம் அடைந்து, டில்லியரசின் சேனையிலே அவனுக்கு ஒரு சிப்பாய் வேலை தேடிக் கொடுத்தான்.

மிக்க புத்தியும் சாமர்த்தியமும் வாய்ந்த ஹாஸன் வரவர உயர்ந்த உத்தியோகம் எய்தி, முடிவில் சேனைத் தலைவன் ஆயினன். முகம்மது துக்ளக்கின் காலத்திலே தேசத்தில் குழப்பம் ஏற்பட, ஹாஸன் அது சமயம் தட்சணத்திலே தனியரசு கொண்டான். கொண்டதும், வேதியரின் உதவியையும், தன் வமிசத்தின் பெயரையும் நிலைநாட்டவே, ஹாஸன் கங்கு பாமினி எனும் பெயர் சூடி அரியணையில் அமர்ந்தான். அவ் வேதியனையே அமைச்சனுகவும் கொள்ள, செவ்வனே ஆட்சி நடந்து வந்தது. அவன் கண்ட ராஜ்யமே பாமினி ராஜ்யம்.

பாமினி ராஜ்யம் 1347ஆ தோன்றி 1482ஆ வரையில் நிலைத்திருந்தது. அதன் தலைநகரம் குல்பர்கா எனப் படும். ஒருவர்பின் ஒருவராகப் பதின்மூவர் ஆங்கிருந்து ஆட்சி நடத்திவந்தனர். அவர்களின் ஆட்சியிலே சூழ்ச்சி களும் கொலைகளும் கொடுமைகளும் நிரம்பியிருந்தன. நாளடைவில் அங்கு முகம்மதியருக்குள் இரு கட்சிகள் ஏற்பட்டன. வெளிநாடுகளிலிருந்து வந்த முகம்மதியர் ஒரு கட்சியாகவும், இந்திய முகம்மதியர் ஒரு கட்சியாகவும் நின்று, சச்சரவு செய்து வந்தனர்.

முகம்மது கவான்: வெளிநாட்டு முகம்மதியரின் தலைவனுக இருந்தவன் முகம்மது கவான் என்பவன்; வியாபாரங் கருதி இங்கே வந்த ஒரு பாரசீகப் பெரு மகன்; மெத்தப்படித்தவனும் மிக்கயோக்கியனுமாவான்; சுயநலம் சிறிதும் இன்றி, அரசிலே பெரும்பதவி வகித்து, அளவிலாச் சீர்திருத்தஞ் செய்தான்; தனது செல்வம் அனைத்தையும் தான தர்மத்திலேயே செலவிட்டான். இவன் ஏற்படுத்திய பாடசாலைகளும், சமைத்த மசூதி களும், நிருமித்த வைத்தியசாலைகளும் ஏராளமாம். ஆயுள் பூராவும் பரநலத்திற்கே இவன் பாடுபட்டுவந்தான்.

முகம்மது கவானிடம் அரசனுக்குப் பெருமதிப்பு உண்டு. இவனை மாய்த்துவிடவேண்டுமென எதிரிகள் எத்தனையோ சூழ்ச்சிகள் செய்தனர். அதன் விளைவாக அரசன் ஒரு நாள் இவனைக் கொன்றுபோடும் வண்ணம் குடிவெறியில் கட்டளையிட்டான். முகம்மது கவான் மரிக்கவே, பாமினி ராஜ்யத்தின் ஆயுளும் முடியலாயிற்று. இவன் கொலையுண்டபின் முப்பது வருஷங்களுக்குள் பாமினி ராஜ்யம் சிதைந்துபோயிற்று.

யூஸப் அடில்ஷா எனும் ஓர் அடிமை பீஜப்பூர் (விஜயபுரி) பிரதேசத்தில் 1498 ஆ தனியரசு கொண்டான். வடக்கிலிருந்த அஹ்மத்நகரமும் நிஜாம்பேரி என்பவன் தலைமையில் தனியரசாயிற்று. நிஜாம்பேரிக்குப் பின் அவன் மகன் ஆமத் என்பவன் நிஜாம்ஷா எனும் பட்டப்பெயருடன் பார்த்திபன் ஆனான். பின்பு மற்றோர் அடிமையான குலிகுட்பு என்பவன் தேலிங்கானத்திலே தனி ராஜ்யங் கொண்டான். இவன் ராஜதானி கோல் கோண்டா எனப்படும். தவிர, பீரார், பீதார் என்று இன்னும் இரண்டு சிற்றரசுகளும் ஏற்பட்டன. இங்ஙனம் பாமினி ராஜ்யம் சிதைந்து, பீஜப்பூர், அஹ்மத்நகர், கோல்கொண்டா, பீரார், பீதார் என ஐந்து ஆயது.

அந்த ஐந்து அரசுகளிலே பீரார், பீதார் இரண்டும் சிறிது காலத்தில் மறைந்துபோயின. ஏனைய மூன்றுமே நெடுநாள் நீடித்துநின்று பதினேழாம் நூற்றாண்டில் மொகலாய ஸாம்ராஜ்யத்தில் ஐக்கியமாயின. பீஜப்பூர், அஹ்மத்நகர், கோல்கொண்டா இவற்றில் ஆட்சிசெலுத்தி வந்த சுல்தான்கள் மிகப்பெரிய கோட்டைகளும், அழகு வாய்ந்த மசூதிகளும், வேலைப்பாடான மண்டபங்களும் கட்டி, நாட்டை அலங்கரித்தனர். மூன்றிலும் பீஜப்பூரே மிகச்சிறந்து விளங்கியது. பீஜப்பூரிலுள்ள கட்டடங்கள் இன்றும் நேத்திரானந்தம் விளைக்கும்.

11. சித்தூர் ராஜபுத்திரர்

மத்திய இந்தியாவிலே ராஜபுதனம் எனும் பெரு நாடு ஒன்றுண்டு. அங்கே, மேவார், மார்வார், பீகானீர், ஜெயப்பூர், பூண்டி எனப் பற்பல நாடுகள் உள்ளன. ஆங்குள்ள மக்கள் அனைவரும் ராஜபுத்திரர் எனப்படுவர். அவர்களை ஆதிகால க்ஷத்திரியரின் சந்ததியார் என்பர் சிலர்; வேறு சிலரோ அயலகத்திலிருந்து வந்து நம் தேசத்தில் குடியேறி, இந்துமதத்தை மேற்கொண்ட போர்க்குல மக்கள் என்பர். இது எங்ஙனமாயினும், ராஜபுத்திரர் என்போர் பரம்பரையாகப் போர்வீர வகுப்பினராவர்; வெகு வீரம் படைத்த மகா தைரியசாலிகள்; சரீர வன்மையில் சாலச் சிறந்து, தெய்வபக்தியிலும் தேசபக்தியிலும் இணையற்றவர்கள்.

அந்த ராஜபுத்திர நாடுகளிலே மிகச் சிறந்ததும் பழமையானதும் மேவார் எனப்படும். மேவார் நாட்டு ராஜபுத்திரர் இராமபிரானது சந்ததியாரென அவர்களின் சரித்திரம் கூறுநிற்கும். ஏனைய ராஜபுத்திரரினும் அவர்களே முதன்மை யானவர்கள். சென்ற 1500 ஆண்டுகளாக வாழையடி வாழையென அங்கே ஓர் அரசவமிசம் இன்றளவும் இருந்து வருகிறது. ஆதியிலே அரபியர் சிந்து நாட்டின்மீது புகுந்து அரசு கொண்டபொழுது, மேவார் மன்னவனான பூப சிம்மன் என்பானே அந்த அரபியரைப் போரில் புறங்கண்டு வாகை சூடியவன்.

அக்காலத்தில் மேவாரின் தலைநகரம் சித்தூர் எனப்படும். சித்தூரை அல்லாவுதீன் கில்ஜி தாக்கியபொழுது, உயிரை ஒரு பொருட்டாக மதியாமல் ராஜபுத்திரர் போர் புரிந்தனர். பன்னிரண்டு வருஷகாலம் பிரமாதமான சண்டையிட்ட பின்பே சித்தூர் நகருக்குள் அல்லாவுதீன் புக முடிந்தது. அப்போது, அன்னியர் கையில் சிக்கக்

கூடாதென ஆங்கிருந்த மாதர் அனைவரும் தீக்குளித்தனர். அத் தீக்குளிப்பினை ஜோஹர் என்பர்.

சித்தூரை வசஞ்செய்து கொண்டாலும், நெடுநாள் அல்லாவுதீன் சேனை அங்கிருக்க இயலவில்லை. மேவார் ராஜபுத்திரர் கிளம்பி, அவன் சேனையை வெருட்டியோட்டி மீண்டும் சுயவரசு கொண்டனர். அந் நாட்டரசரில் பலரும் மகா பராக்கிரமசாலிகள். பிருதிவிராஜன் முகம்மது கோரியுடன் சண்டையிட்ட காலத்தில், மேவார் வேந்தனான சமர சிம்மன் தலைகொடுக்கச் சென்றான் கி. பி. 1416 முதல் 1469 வரையில் ஆட்சி செலுத்தியவன் மகா ராணு கும்பன். இவன் கூர்ஜர, மாளவ முகம்மதிய மன்னவர்களைப் போரில் வென்று, பெருமிதமான வெற்றி மண்டபமொன்று கட்டினான். வானத்தைமுட்டும் அம் மண்டபம் இன்றும் அங்கே கும்பமேரு என்ற பெயருடன் எடுப்பாக நிற்பதைக் காணலாம்.

சித்தூர் வேந்தரில் சிறப்பு வாய்ந்த மற்றோர் அரசன் மகா ராணு சங்கிராம சிம்மன். இவன் காலத்தில் ஏனைய ராஜபுத்திரர் அனைவரும் இவனையே குலபதி எனவும், இந்துபதி எனவும் கொண்டாடி வந்தனர். டில்லி சுல்தான்களிலே லோடி வமிசத்தினரை இவன் பரிபவங் கண்டான்; இப்ரஹிம் லோடியை வென்று, டில்லியில் பாபர் சிம்மாசனம் ஏறியவுடன், அவனை முதற் போரில் புறங்கண்டான்; டில்லியிலே அன்னிய அரசு மீண்டும் முளைக்கக் கூடாதென அப் பாபருடன் அரும்போர் புரிந்து, பெரும்புகழ் பெற்றான். சண்டையிலே இவன் பட்ட காயங்கள் எண்பதுக்கு மேலிருக்கும்.

பிரதாப சிம்மன்: பாபரின் பேரனான அக்பர் சக்கரவர்த்தியின் காலத்திலே எல்லா ராஜபுத்திரரும் தலை வணங்கிய போதிலும், மேவார் ராஜபுத்திரர் மட்டும் தலைவணங்க வில்லை. ஆதலின், மேவார் மன்னவனான பிரதாப சிம்மனுக்கும் அக்பர் சக்கரவர்த்திக்கும் 27வருஷ

காலம் சண்டை நடந்தது. கடைசி வரையில் அக்பருக்கு அப்பிரதாபன் தலைவணங்காமல் தருக்கியே நின்றான். சித்தூரை அக்பர் ஜெயிக்க முடியவில்லை. பிரதாபன் மாண்டபின்பே அக்பருடன் சித்தூர் வேந்தர் நேசங்கொள்ளலாயினர்.



பிரதாப சிம்மன்

மும்முறை முகம்மதியரால் சித்தூர் தரைமட்டமாயினும், அதன் சிறப்பும் வீரமும் சிறிதும் குன்றவில்லை. சித்தூர் கைதவறிய பின்பு, உதயபுரி எனும் புதிய ராஜதானியொன்றை மேவார் வேந்தர் அமைத்துக் கொண்டனர். அத்தலைநகரின் பெயரைக் கொண்டு, நாட்டையும் இப்போது உதயபுரி என்றழைப்பர். தற்சமயம் சித்தூர் நகரம் பாழ்பட்டுக் கிடப்பினும், அதன் சரிதமும் தோற்றமும் யாவரையும் வியக்கச் செய்யும்.

---

12. விஜயநகர ஸாம்ராஜ்யம் (1336—1565)

அல்லாவுதீன் காலத்திலே அவன் தளகர்த்தன் மலிக் காபூர் என்பவனும் அப்பால் இன்னும் சிலரும் தென்னிந்தியாவின்மீது படையெடுத்துக் கொள்ளை கொண்டனர் அல்லவா? அதனால் இந்து சமூகத்துக்கும் அவர்களின் புராதனமான நாகரிகத்துக்கும், மகத்தான தர்மத்துக்கும் தீமை உண்டாயிற்று. அங்ஙனம் பேராபத்து பரவாதிருக்கப் பெருமக்கள் செய்த பிரமாதமான முயற்சியினால் விஜயநகர சாம்ராஜ்யம் ஏற்பட்டது.

வித்யாரண்ய நகரம்: வடக்கிலிருந்து முகம்மதியர் படைகொண்டு தெற்கே வருவதை மறிக்கவும், இந்து

மக்களை இனிது காக்கவும், சங்கமன் என்னும் ஒரு சிற்றரசனது மைந்தர் விரதம்பூண்டனர். அவர்கள் ஆற்றலால் துங்கபத்திரை நதியின் வடகரையில் ஆனைகுந்தி எனும் ராஜதானி எழுந்தது. சின்னாளுக்கெல்லாம் அந்நகரம் முகம்மதியரால் பாழ்பட்டது. அதன்மேல், அச் சோதரரில் இருவரான ஹரிஹரன், புக்கராயன் என்பவர்கள் வித்யாரண்யர் எனும் குருவின் மொழிகேட்டு, அந்நதியின் தென்கரையிலே விரூபாட்ச நகரம் அல்லது வித்யாரண்ய நகரம் எனும் நகரை நிருமித்தனர்.

அந்த ஹரிஹரனும் புக்கராயனும் தம் ஆயுள் அளவும் பாமினி ராஜ்யத்துடன் போராடி வித்யாரண்ய நகரை விஜயநகரமாக மாற்றி ஆண்மை செலுத்தி வந்தனர். அவர்களின் காலத்தில் தென்தேசமெங்கும் அமைதியும் சமாதானமும் நிலவலாயின; கல்வியும் வியாபாரமும் கவனிக்கப்பட்டுவந்தன. பின்பு, இரண்டாம் ஹரிஹரன் என்பான் பிரபல அரசனாகித் தெற்கே திருச்சி, காஞ்சீபுரம் வரையில் தன் ஆட்சியைப் பரப்பினான். அந்த வமிசத்தில் முக்கிய அரசன் இரண்டாம் தேவராயன் என்பவன். இவன் காலத்தில் விஜயநகரம் மிகச் சிறந்த நகரமாக விளங்கியது. இவன் பாமினி சுல்தான்களுடன் கடும்போர் புரிந்து, விஜயநகரை வளம்படுத்தினான். இவன்காலத்தில் பாரசீக வேந்தனது தூதனான அப்துல் ரஸாக் என்பான் விஜயநகரைக் குறித்து எழுதியது :

விஜயநரின் சிறப்பு : 'பூவுலகிலே விஜயநகரைப் போல் அழகிய நகரைக் காண்பதரிது. நகரைச் சுற்றிலும் ஒன்றுக்குள் ஒன்றாக ஏழு கோட்டைமதில்கள் உள. கோட்டைமதில்களுக்கு நடுவே விசாலமான வீதிகளும் வனப்பு வாய்ந்த மாளிகைகளும் மிகுதி. நகரின் நடுவே வேந்தனது மாளிகையும் தனசாலையும் அமைந்துள. பலவாறான பண்டங்களை விற்கப் பிரத்தியேகமான கடைத் தெருக்கள் உண்டு. நறுமணம் நிரம்பிய பல

வகை மலர்களும், நவரத்தினங்களும், பொன்னும் கடை வீதிகளிலே மிகுதி. ராஜமாளிகையின் அருகே பூங்காவும் தடாகமும் நீராழிமண்டபமும் கண்ணைக் கவரும்.'

அந்த அரசனது காலத்திற்குப் பின்னர் ராஜ்யத்திலே குழப்பமும் அராஜகமும் தோன்றலாயின. அப்போது துளுவ வமிசத்தார் கிளம்ப, அதன் முதல் அரசன் நரசிங்கன் அக் குழப்பத்தை யடக்கி, அரசைத் திறம்பட நடத்தி வந்தான்; தமிழ்நாட்டில் பல பாகங்களை ஜெயித்துப் பிடித்ததோடு, அயலக முகம்மதிய அரசருடன் அருஞ்சமர் புரிந்து, ஆபத்துக்களை யெல்லாம் அகற்றினான். பின்னர் சாளுவ வமிசத்தார் தோன்றி விஜய நகரை இன்னும் திறம்பட ஆளத் தொடங்கினர். சாளுவ வமிச வேந்தரில் மிகச் சிறந்தவன் கிருஷ்ணதேவராயன்.



கிருஷ்ணதேவராயன்

கிருஷ்ணதேவராயன் கி. பி. 1509 முதல் 1529 வரையில் ஆட்சி செலுத்தி வந்தான். இவன் மதியமைச்சன் பெயர் திம்மரசு. அம்மந்திரியை அப்பாஜி என்று அன்புடன் கிருஷ்ண தேவ ராயன் அழைப்பது வழக்கம். அவ்விருவருக்கும் ராயர், அப்பாஜி எனும் பெயரே பிரபலம். இருவரையும் குறித்துப் பல கதைக

ளுண்டு. திறல் வேந்தனும் மதியமைச்சனும் சேர்ந்து, ஒரிஸா நாட்டை ஜெயித்தனர்; நலிந்துகிடந்த சோழ, பாண்டிய நாடுகளைப் பிடித்து, விஜயநகர ஸாம்ராஜ்யத்தைப் பரப்பினர். தஞ்சாவூர், மதுரை முதலிய இடங்களில் கிருஷ்ணதேவனது சேனாதிபதிகள் பிரதிநிதிகளாக இருந்து ஆண்டுவரலாயினர்.

பிறகு அரசனும் அமைச்சனும் சேர்ந்து, பீஜப்பூர் சுல்தானை எதிர்த்து, ராய்ச்சூரை வசம் செய்து கொண்டனர். இச் சண்டையில் கிருஷ்ண தேவராயன் காட்டிய வீரதீரச் செயல்களைப் போர்த்துகேசிய யாத்திரிகனான நூனிஸ் என்பான் புகழ்ந்துள்ளான். அப்போரின் பலனாக அயலக முகம்மதிய அரசுகள் கப்பங்கட்டி வாழ்ந்து வரலாயின. விஜய நகர ஸாம்ராஜ்யம் வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து, தெற்கே குமரி முனைவரையில் பரவிற்று.

கிருஷ்ண தேவராயன் பெரும் போர்வீரன் என்பது மட்டுமன்று; சாலச் சிறந்த கவிஞனும் கல்விமானும் ஆவான். கலைகள் பலவும் ராயரின் ஆட்சியில் தலைசிறந்து விளங்கின. நாட்டிலே பல பாகங்களில் தேவாலயங்கள் எழுந்தன; ஏரி குளம் குட்டை முதலிய நீர்நிலைகள் மலிந்தன; நீர்ப்பாசன வசதிகள் நிரம்பின; வர்த்தகம் அமோகமாக ஓங்கியது; ஜனங்கள் அமைதியும் ஆனந்தமுங்கொண்டு வாழ்ந்துவந்தனர். விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் வலிமையும் வளமையுங் கண்டு தட்சண முகம்மதியவரசுகள் சீறி நின்றன. ஆயினும் கிருஷ்ணதேவராயன் இருக்கும்வரை அவை ஏதுஞ் செய்ய இயலவில்லை.

கி. பி. 1530ஆம் கிருஷ்ணதேவராயன் கண்மூடினான். அவன் சந்ததியார் திறமைசாலிகளாக இல்லை. ராய்ச்சூர் முதலிய கோட்டைகள் கைதவறின. மாகாணங்களிலே கவர்னர்களாக இருந்தவர்கள் தனியரசராகத் தலையெடுத்தனர். தஞ்சாவூர் நாயக்கர் வமிசமும் மதுரை நாயக்கர் வமிசமும் அக்காலத்தில் தலையெடுத்தனவாம்.

தலைக்கோட்டை யுத்தம் : கி. பி. 1543ஸ் ராம ராயன் சக்கரவர்த்தியாக விளங்கினான். இவனும் பீஜப்பூர் சுல்தானும் சேர்ந்துகொண்டு, அஹமத்நகரை ஜெயித்தனர். அப்போது ராமராயன் கொடுமை பல இழைத்தனன். அதுகண்டு முகம்மதியர் மனம் புழுங்கினர். அதன்விளைவாக முகம்மதிய ராஜ்யங்களெல்லாம் ஒன்று கூடி, விஜயநகரை எதிர்த்தன. கி. பி. 1565ஸ் தலைக் கோட்டை எனுமிடத்தில் பிரமாதமான யுத்தம் நடந்தது. தொண்டு கிழவனாயினும், ராமராயன் பட்டத்துயானை மீதேறிப் படுகளத்தில் பெருஞ் சமர் செய்தான்.

யுத்தநடுவில் பட்டத்துயானை மதம்பிடித்து ஓடியது. ராமராயன் தவறிக் கீழேவிழ, அவன் சேனைகள் நாற்புறமும் சிதறிவிட்டன. உடனே முகம்மதியர் ஜெய பேரிகையுடன் விஜயநகரினுள் புகுந்தனர். அவ்வளவு தான் தாமதம். மாடமாளிகைகள் இடியுண்டன; கூட கோபுரங்கள் குலைந்தன; ஆலயங்கள் தகர்ந்தன; அரண் மனைகள் அழிந்தன. குரங்கின் கையில் சிக்கிய பூமாலையே போல், நகரம் சிதறிச் சின்னபின்னமாயிற்று. பல்லாரி ஜில்லாவிலே ஹம்பி எனுமிடத்தில், பாழடைந்த அந் நகரை இன்றும் காணலாம். பாழ்பட்ட நிலையிலும் அதன் பண்டைய நிலைமை யூகித்துணர இயலும். சுமார் இரண்டரை நூற்றாண்டு இந்துக்களுக்கு ஆறுதல் அளித்து வந்த ஸாம்ராஜ்யம் அவ்விதம் அழிவுற்றது.

---

13. மொகலாயர் : பாபர் (1526—1530)

அடிமை யரசரின் காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின்மீது மங்கோலியர் படையெடுத்து வந்தனர் அல்லவா? அம்மங்கோலியரின் தலைவனாகத் திகழ்ந்தவன் செங்கிஸ்கான் என்பவன். அப்பால் துக்ளக் வமிசத்தாரின் காலத்திலே தைமூர் என்பான் இங்கே

படைகொண்டு வந்து செந்தூளி பரப்பினுன். லோடி வமிசத்தாரின் காலத்திலே பாபர் என்பான் படை கொண்டுவந்தனன். செங்கிஸ்கானும் தைமூரும் பாப ருக்கு முறையே தாய் வழியிலும் தந்தை வழியிலும் முன்னோர்கள் ஆவர்.

பாபர் பிறந்த நாடு துருக்கிஸ்தானம். அங்கே அவன் தந்தை ஒரு சிற்றரசனுக இருந்தான். பாபருக்குப் பன்னிரண்டாவது வயதில் அவன் தந்தை காலமானுன். உடனே அரசை அவன் சிற்றப்பன் கைப்பற்றிக் கொண்டான். பாப ரின் உயிருக்கு ஆபத்து நேரும்போலிருந்தது. ஆதலின் ஊர் ஊராக ஓடித்திரிய நேர்ந்தும் அவன் மனம் தளரவில்லை. சிற்றரசு போயின், பேரரசு கொள்ளலாம் என்பதே அவன் கருத்தாயிற்று.

பாபர்

பத்து வருஷ காலம் தங்க இட மின்றி அலைந்து திரிந்தபின், இருபத்திரண்டாம் வயதிலே ஆப்கானிஸ்தானத்தில் பாபர் புகுந்து, அங்கே கஜனி, காபூல் ஆகிய இரு நகரங்களையும் பிடித்துக்கொண்டான். மூதாதையரின் செயலை எண்ணிப் பார்க்கையில், இந்தியாவின் மீது அவனுக்கும் ஆசை பிறந்தது. ஆவல் கைகூட அவன் காலங்கருதியிருந்த சமயத்தில்தான் இந்தியாவுக்கு வருமாறு அவனுக்கு அழைப்பு வந்தது. உடனே திரண்ட சேனையுடன் இந்தியாவுக்குள் அவன் புகுந்தான்.

அப்போது டில்லி சுல்தானுக விளங்கிய இப்ரஹிம் லோடி ஒரு லட்சம் வீரருடன் யுத்தத்துக்கு எழுந்தான். பாணிபத் என்னுமிடத்தில் (1526) பாபர் ஜெயமடைய, டில்லி யாட்சி கிட்டியது. பாபரையும் அவன் சந்ததியாரை

யும் மோகலாயர் என்பர். அரியணையில் அமர்ந்ததும் பாபர் தனது வீரர் அனைவருக்கும் சம்மானம் செய்தான். அவன் மூத்த பிள்ளையான ஹுமாயூன் என்பான் படையுடன் சென்று, ஜான்பூர், காஜிபூர் எனும் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டான்.

டில்லியிலே லோடிவமிசம் தொலைந்தும் புதிய முகம்மதிய ராஜ்யமொன்று முளைப்பதுகண்டு, இந்து மக்கள் வாளா இருக்கவில்லை. அக்காலத்தில் சித்தூர் வேந்தனாக விளங்கிய மகா ராணா சங்கிராம சிம்மன் பெரும் படையுடன் கிளம்பினான். முடிவேந்தரும் சிற்றரசரும் பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனருமாக நூற்றிருபது பேர் தம் தம் படையுடன் சங்கிராமனுக்குப் பக்க பலமாக எழுந்தனர். ராஜபுத்திர சிங்கத்தின் முன்னே பாபரின் வீரர் வேசாறிப்போயினர். பாபரும் கதிகலங்கினான்.

அந்த நிலையில், 'ஆக்ரா நகரைத் தாண்டி அப்பால் தெற்கே வருவதில்லை. டில்லியிலிருந்து அரசாளுகிறேன், கப்பமும் கட்டுகிறேன். இதற்கு ஒப்பிப் போரை நிறுத்தல் வேண்டும்,' என்று சங்கிராம சிம்மனுக்கு அப் பாபர் தூதனுப்பினான். சங்கிராம சிம்மன் அதற்கு இணங்காமல், போரே சிறந்ததென்றான். சிக்ரி என்னுமிடத்தில் இரண்டு சேனைகளும் சிறிப் போர் புரிந்தன. பாபர் சேனையின் முன்வரிசை பிளவுபடப் பின்வரிசைகளும் கலங்கின. சங்கிராம சிம்மன் வெற்றிபெறும் சமயத்தில், துரோகம் நிகழவே ராஜபுத்திரர் திகைத்தனர்.

அப்போது பாபரின் புதிய பீரங்கிப்படை குண்டு மழை பொழிந்தது. அன்றியும் பீரங்கிகளைப் பார்த்தறியாத சங்கிராமன் வீரர் சற்றே சலித்தனர். தோல்வியுடன் சித்தூர் செல்லாமல், வெற்றியுடனேயே அத் தலைநகரில் புகவேண்டும் என்று சங்கிராமன் சபதம் பூண்டு, அதற்காகச் சேனையும் திரட்டினின்றான். இதற்கிடையிலே மூப்பின் மிகுதியும், தோல்வியுண்ட துயரமும், துரோகத்தின்

விளைவும், கொடிய நோயும் கூடிக்கொண்டன. அதனால் சங்கிராமன் உயிர்துறக்கவே, பெரும்பகை தொலைந்த தென்று பாபர் ஆறுதல் அடைந்தான்.

சங்கிராம சிம்மன் மரித்துவிட்டாலும், ராஜபுத்திரர் வாளா இருக்கவில்லை. மாளவநாட்டைச் சேர்ந்த சந்தேரி எனுமிடத்தில் வசித்த ராஜபுத்திரர் சினந்து எழுந்தனர். அவர்களை அடக்காவிடின், அரசு நிலைக்காதென்று பாபர் உணரலானான். உடனே மொகலாயப் படைகள் கறுவிக் கிளம்பின. நீண்ட நாள் கோரமான யுத்தம் நடந்தது. சந்தேரி நகரின் கோட்டையும்கொத்தளங்களும் தகர்ந்தன. உள்ளிருந்த வீரர் தங்கள் மனைவி மக்களைவாளுக்கு இரையாக்கிப் போர்முனையில் குதித்து முடிவு வரையில் சமர் செய்து உயிர் துறந்தனர்.



பாபர் காலத்தில் மொகலாய ராஜ்யம்

பாபருக்கு மீண்டுமொரு பகை வந்து மூண்டது. பழைய லோடி வமிசத்தைச்

சேர்ந்த பட்டாணியர் பீஹாரிலே படைதிரட்டிப் போருக்கு எழுந்தனர். 1529ஆ அவர்களையும் பாபர் போரில் வென்று போட்டான்.

அங்ஙனம் பற்பல போர்கள் புரிந்து வெற்றிபெற்றதன் பலனாக வட இந்தியாவின் சிலபாகம் பாபரின் வசமாயிற்று. ஆகவே, டில்லியிலிருந்து சக்கரவர்த்தியென அவன் அரசாளலானான். முகம்மதியரிலே மொகலாய வகுப்பினைச் சேர்ந்தவனாதலின், அவனுக்கும் அவனுக்குப் பின்வந்த அரசருக்கும் மொகலாய மன்னவரெனப் பெயர் ஏற்பட்டது.

பாபர் என்றால் சிங்கம் என்று அர்த்தம் என்பர். பெயருக்கேற்ப அவன் வீரதீரமும் சரீரபலமும் வாய்ந்தவன்; பெரிய நதியிலும் இறங்கி நீந்துவான்; தினம் நூறு மைல் குதிரைசவாரி போவான்; நான்கு வருஷ காலமே ஆட்சிபுரிந்து, பற்பல சண்டைகள் போட்டு வாகைமாலை சூடினான்; டில்லி, ஆக்ரா நகரங்களில் பல மண்டபங்கள் கட்டி, எண்ணிறந்த பழத்தோட்டங்களும் வைத்தான்; எளியவருக்கு நன்மை பல புரிந்தான்.

பரகதிபோகும் தறுவாயில் பாபருக்கு வயது நாற்பத்தொன்பது. அவன் மகன் ஹுமாயூன் நோய் கொள்ளவே, மருத்துவ வல்லார் வந்து பார்த்தும் பலனில்லை. உடனே பாபர், ‘ஆண்டவனே! என் உயிரினும் என் மைந்தன் உயிரே பெரியது; என் அருமந்த மகன் நோய்வாயினின்று பிழைப்பானாக; நான் அவனுக்குப் பதிலாக மரிக்கத் தயார்,’ என்று வேண்டிக்கொண்டான். அங்ஙனமே பாபர் மரிக்க ஹுமாயூன் பிழைத்தெழுந்தனன் என்பர்.

—

14. ஹுமாயூன் (1530—1540)

பாபர் இறந்த பின்னர், அவன் மூத்த மைந்தன் ஹுமாயூன் அரியணை ஏறினன். அப்பனைப் போல் பிள்ளையிடம் வீரதீரமும் விடாமுயற்சியும் இல்லை. சுகவாசத்திலேயே நாட்டங்கொண்டு கிடந்தான் அக் கோமகன். தந்தை சொல்லிப்போன வண்ணம் அவன் தன் தம்பியரில் ஒருவனுக்கு ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் இரண்டையுங் கொடுத்தான்; மற்றைய இருவருக்கும் மாகாண கவர்னர் பதவி கொடுத்து மகிழ்ந்தான். ஆயினும் அச் சோதரர் திருப்திகொள்ளாமல், டில்லியரசின் மீது ஆசைகொண்டு கிடந்தனர்.

அக்காலத்தில் கூர்ஜரநாடு மொகலாயருக்கு உட்படாமல், தனியரசாக இருந்துவந்தது. அதனையாண்டு வந்த பகதூர்ஷா அயலகமான சித்தூர்மீது சீறி எழுந்தான். சித்தூர் ராணி உடனே உதவி வேண்டி ஹுமாயூனுக்கு ஓலையனுப்பினுள். டில்லிபாதுஷா அவ்விதமே சித்தூர் அரசிக்குத் துணையாக எழுந்து, பகதூர்ஷாவை முறியடித்தான். அதுசமயம் ஹுமாயூனுக்கு ஒரு பகைவன் தோன்றினன். அவன் பெயர் ஷேர்கான்.

ஆப்கானிய அல்லது பட்டாணிய வகுப்பைச்சேர்ந்த ஷேர்கான் பிழைப்பைநாடி இந்தியாவுக்கு வந்து, வங்கத்திலே சேனையி லமர்ந்து நாளடைவில் வங்கத்தையும் கைப்பற்றிக்கொள்ளக் கருதினன். அப்போது ஹுமாயூன் ஒரு படையுடன் செல்லவே, ஷேர்கான் ஓடி ஒளிந்தனன். பகைவனது தொல்லை தீர்ந்ததென ஹுமாயூன் சுகபோகத்தில் மூழ்கிக் கிடக்கலானன். அதுவே சமயமென ஷேர்கான் கருதி, ஹுமாயூனை எதிர்த்தனன். எதிர்பாராத ஆபத்து நேர்ந்தமையால் உயிருக்கஞ்சி விதியின்றி ஹுமாயூன் ஓட நேர்ந்தது. ஷேர்கானே

ஹுமாயூனைத் தொடர்ந்துவந்து, டில்லிசேர்ந்து, போரில் அவனை வென்றான். மீண்டும் உயிருக்கஞ்சி லாகூரை நோக்கி ஹுமாயூன் ஓட, அவனைத் துரத்தினான் ஷேர்கான். அதுகண்டு ஹுமாயூன் சிந்து நாட்டை நோக்கி ஓட நேர்ந்தது. இனிமேல் ஹுமாயூன் திரும்பி வாரானென ஷேர்கான் கருதி, டில்லியரசில் அமர்ந்து ஆளத் தொடங்கினான்.



ஹுமாயூன்

ஓடிய ஹுமாயூன் சிந்துநாட்டிலே இரண்டு வருஷ காலம் இங்குமங்கும் அலைந்து திரிந்தான். அப்போது அவனும் அவன் மனைவியும் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. உடன்வந்தோர் அனைவரும் அவனைக் கைவிட்டனர். மனைவி யொருத்திதான் கடைசி வரையில் உடனிருந்தாள். வேளையிலே அன்ன பானமும் இல்லாது அவதிப்பட நேர்ந்தது. அத்தகைய நிலையில் கருப்பவதியான அவன் மனைவிக்குப் பிரசவ நோய்கண்டது. அப்போது அமரக்கோட்டையை ஆண்டு வந்த இந்து வேந்தன் அவ்விருவரையும் வரவேற்றனன்.

அமரக் கோட்டையிலே ஹுமாயூனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அக் குழந்தையே பின்னாளில் அக்பர் சக்கரவர்த்தியாக விளங்கியவன். மைந்தன் பிறந்த ஒரு மாதத்துக்கெல்லாம், ஷேர்கானுக்கு அஞ்சி மீண்டும் ஹுமாயூன் ஓட நேர்ந்தது. வடமேற்குக் கணவாய் வழியே ஆப்கானிஸ்தானம் போக அவன் எண்ணினான். முடிவில், மனைவியும் தானுமாகப் பாரசீகத்துக்கு ஓட்ட மெடுத்தான் ஹுமாயூன். அப்பால், நிம்மதியாக அங்கே சின்னாள் ஹுமாயூன் வாழ்ந்துவந்தான்.

15. ஷேர்ஷா (1540—1545)

போர் முனையில் ஹுமாயூனை வேற்றி கோண்டபின்பு, 1540-ம் ஆடு ஷேர்கான், ஷேர்ஷா என்னும் பெயருடன் டில்லியரியணையில் அமர்ந்தான். அன்னியர் மறுபடியும் டில்லியில் அரசாளுதல் கண்டு, ராஜபுத்திரர் சகிக்கவில்லை. ஆதலின் அவர்களுடன் ஷேர்ஷா நீண்ட நாள் சண்டையிட நேர்ந்தது.

அரசியல் நேர்மை: ஐந்து வருஷ காலமே ஷேர்ஷா அரசாண்டான். பின்பு முடிவிலே போர்முனையில் அவன் ஆவி போயிற்று. ஐந்தாண்டே அரசாண்டும், அரசியலை அவன் சீராக்கி மக்களுக்கு நலம் பல புரிந்தான். உதாரணமாக, தேசத்தை மாகாணங்களாகவும் ஜில்லாக்களாகவும் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அதிகாரிகளை நியமித்தான்; பயிர் நிலங்களை யெல்லாம் அளவு செய்து மக்களிலே இன்னின்னாருக்கு இன்னின்ன நிலம் என்று குறிப்பிட்டான்; நிலவரி நாலில் ஒரு பங்கே என்று வரையறுத்தான்; வரியைப் பணமாகவோ தானியமாகவோ ஜனங்கள் கட்டலாமென விதித்தான்.

குதிரைகளின்மீது விரைவில் தபால்களைக்கொண்டு போக அவன் ஏற்பாடு செய்தான். நாணயங்கள் அச்சடித்து வழங்கியும், காவலாளரை ஆங்காங்கே நியமித்தும், வர்த்தகத்தை விருத்தி செய்தான். கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே பிஷாவர் (புருஷ புரம்) வரையில் ஆயிரம் மைலுக்கு ராஜபாட்டை போட்டான். பாதசாரிகளுக்கு அனுகூலமாக ராஜபாட்டைகளிலே இருமருங்கும் நிழல்தரும் மரங்கள் வைத்தான். ஆங்காங்கே சத்திரங்களும் சாவடிகளும் அமைத்து வைத்தான். ஏழை எளியவருக்கு இனமாக அன்னபானம் வழங்க ஏற்பாடு

செய்தான். இந்துக்களையும் முஸ்லீம்களையும் சமமாகப் பாவித்து நெறியுடன் ஆண்டுவந்தான்.

அடிமையரசர் காலம் முதல் அவனைப்போல் நெறி தவருமல் முறை செய்த முகம்மதிய மன்னவர் இல்லை. அவனுக்குப் பின் பத்து வருஷ காலம் அவன் வமிசத்தார் டில்லியிலிருந்து அரசு செலுத்தினர். ஒருவராவது அவனைப்போல் தகுதியும் திறமையும் வாய்ந்திருக்கவில்லை. ஆதலின் ஹிமு எனும் ராஜபுத்திரன் அரசியலை வகித்து, ஒழுங்கீனங்களைப் போக்கி, ராஜ்யம் சீர் குலையாமல் காத்து வந்தான். ராஜபுத்திர னொருவன் ஆட்சி புரிவதா என்று அரசவமிசத்தார் முணு முணுத்தனர். முடிவிலே சதியாலோசனையும் செய்தனர்.

ஹுமாயூன் தோற்றம்: அவ்விதம் டில்லியில் பிணக்கு நிகழுகையில் பாரசீக வேந்தன் துணைகொண்டு, ஹுமாயூன் கிளம்பி, ஆப்கானிஸ்தானத்தில் புகுந்து, ஆங்கிருந்த சோதரனைப் போரில் வென்று, காபூல், காந்தாரம் ஆகிய நாடுகளைப் பிடித்துக்கொண்டான்; பின்பு மைந்தன் அக்பரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு டில்லி சேர்ந்து, அரசையும் மீட்டுக்கொண்டான்.

டில்லியரசை மீண்டும் எய்திய ஹுமாயூன் நெடுநாள் அதனை அனுபவிக்க வில்லை. ஆறுமாத காலமானதும் ஒரு நாள் மாடியிலிருந்து கீழே இறங்கி வருகையில் கால் வழுக்கிக் கீழே வீழ்ந்து, மாண்டு போயினன்.

---

16. அக்பர் (1556—1605)

தந்தை இறந்துபோகையில், அக்பருக்கு வயது பதின்மூன்றுதான். அப்போது மொகலாய ராஜ்யம் மிகவும் குறுகியிருந்தது. அவ்வரசை நிலைக்கவிடுவதா என்று பலர் கொதித்து நின்றனர். அவர்களில் ஒருவன் ஷெர்ஷாவின் வமிசத்தைச் சேர்ந்த கடைசி வேந்தனை

சிக்கந்தர் என்பவன். தவிர, ஹிமு எனும் ராஜபுத்திரனே இந்து ராஜ்யத்தை நிலைநாட்டவேண்டுமென்று பெரும் படை திரட்டி முயலாநின்றான்.

அந்நிலையில் அக்பரின் அத்தை புருஷனான பைராம் கான் என்பான் ஊன்றுகோல்போல் உதவி வந்தான். பஞ்சநதிப் பிரதேசத்திலே சிக்கந்தர் சீறிக் கிளம்பவே, அவனையடக்க மொகலாயச் சேனை எழுந்தது. சண்டையிலே சிக்கந்தர் தோற்றோடினான். அதுசமயம் ஹிமு ஒரு திரண்ட சேனையுடன் கிளம்பி, ஆக்ரா, டில்லி இரு நகரங்களையும் கைப்பற்றி, ராஜா விக்கிரமஜித் எனும் பட்டந்தாங்கி, டில்லியிலே சிம்மாசனம் ஏறினான்.

அதுகேட்ட மொகலாய தளகர்த்தர் மனந்தளர்ந்து, இந்தியாவைத் துறந்து, ஆப்கானிஸ்தானம் சென்றுவிடலாமென அக்பருக்கு ஆலோசனை சொல்லினர். பைராம் கான் அதற்கு மனமொப்பாமல், ஹிமுவை எதிர்த்தே தீரவேண்டும் என்றான். உடனே மொகலாயச் சேனை புறப்பட, பாணிபத் எனும் இடத்தில் (1556) இருதரத்துச் சேனைகளும் கைகலந்தன. ராஜபுத்திரர் இயற்கையான வீராவேசங் காட்டிப் போர்புரிந்தனர். முடிவில் ஹிமு படுகாயமடையவே, இந்து வீரர் வேசாறிப் போயினர். அவர்களை வதைக்க அக்பர் விரும்பவில்லை.

பின்பு, அக்பர் டில்லி அரியணையில் அமர்ந்ததும், சிக்கந்தர் மறுபடியும் போருக்கு எழுந்தான். மொகலாயச் சேனை அவன் கையில் சிக்கிச் சீரழிந்தது எனினும் அக்பரும் அவன் துணைவரும் ஆவேசத்துடன் போர்புரியவே, சிக்கந்தர் சரண்புகுந்தான். அப்பால் ஆஜ்மீர், குவாலியர், ஜான்பூர் முதலிய பிரதேசங்களை அக்பர் கைப்பற்றிக்கொண்டான். அங்ஙனம் அக்பர் முயன்று வருகையில், மற்றோர் ஆபத்து நேர்ந்தது.

அரசையும் போரையும் நடத்திவந்த பைராம்கானே அக்பரை அவ்வளவாக மதியாமல், தருக்கும் மிடுக்குங்

கொண்டு, தன் இஷ்டப்படி அரசை நடத்திவந்தனன். பன்முறை அக்பர் பக்குவமாக உரைத்துப் பார்த்தும் பைராம்கான் மதிகொள்ளவில்லை. அதுகண்ட அக்பர் உடனே அரசை ஏற்றுக்கொண்டு, பைராம்கானை மக்காநகருக்கு யாத்திரை போகும்வண்ணம் ஆணையிட்டான். பைராம்கான் அதுகண்டு சண்டைக்கு எழுந்தும், பின்பு தோல்வியுண்டு, அக்பரிடம் சரண் புக நேர்ந்தது.

அக்பர்

அரசை ஏற்றுக் கொண்டபொழுது பால்ய வயதே வாய்ந்திருந்தும் அக்பர் அன்பும் உறுதியும் பூண்டு பண்பட்ட வேந்தனைப் போல் அரசை நடத்திவந்தான். அதிகாரிகளில் சிலர் சூழ்ச்சிபுரிந்தும், சிலர் பெரும்போக்காகவும் நடந்துவந்தனர். சாம, பேத, தான, தண்டம் எனும் உபாயங்களில் சமயத்திற்கு ஏற்றதைக் கையாண்டு அனைவரையும் வசஞ்செய்து கொண்டான் அக்பர். பின்பு, மாளவம், காபூல் ஆகிய நாடுகளை அடிப்படுத்தி ஆட்சியைப் பெருக்கினான்.

தன் பாட்டனது காலம் முதல் ராஜபுத்திரர் வீறுகொண்டு நிற்பதையும், அன்னார் பெருவீரங் காட்டுவதையும், அக்பர் உற்றுநோக்கினான்; வீரதிலகமான அன்னவரை அணைத்துக்கொள்ளாவிடின், அரசு நிலைக்காதென உணர்ந்துகொண்டான்; அன்னாருடன் நேசமாயிருக்கக் கருதி ஜெயபுரிவேந்தன் பீகாரிமல் என்பானது மகளை மணந்துகொண்டான்; தன் மைந்தருக்கும் ராஜபுத்திர மாதரை மணம்புரிவித்தான்; சேனையிலும் அரசியலிலும் ராஜபுத்திரருக்கு உயர்பதம் அளித்தான். அன்னவர் அரசனிடம் விசுவாசத்துடன் நடந்துவந்தனர்.

மொகலாய அரசைப் பெருக்குவதில் அக்பருக்கு வலது கைபோல் விளங்கிய சேனைத்தலைவன் ராஜா மான சிம்மன் எனும் ராஜபுத்திர வீரன். சேனைத் தலைவரிலே மற்றொருவன் பகவான் தாஸ் எனும் ராஜபுத்திரப் பெரு மகன். பொக்கிஷ மந்திரியாக விளங்கியவன் ராஜா தோதர் மல் எனும் ராஜபுத்திரன். இவன் அர்த்த சாஸ் திரத்தில் அதிநிபுணனாதலின் நிவவரியைப் பாகுபடுத்தி அரசிறையை ஒழுங்குசெய்தான். அக்பரின் அந்தரங் கக் காரியதரிசியாகவும் விகட வேந்தனாகவும் விளங்கிய வன் ராஜா வீரபாலன் என்னும் வேதியன்.

ராஜபுத்திரரின் பேருதவி கிட்டவே, கூர்ஜரம், வங் காளம், ஒரிஸா முதலிய பற்பல நாடுகள் அக்பரின் ஆட் சிக்கு உட்படலாயின. விந்தியமலைக்கு வடக்கிலுள்ள பிர தேசங்கள் பலவும் மொகலாய ராஜ்யத்தில் அடங்கிக் கிடந்தன. ஆயினும் ராஜபுத்திர வேந்தரில் முதல்வனான சித்தூர் வேந்தன் மட்டும் அக்பருக்கு வணங்கவில்லை. ஆதலின் மேவாரின் தலைநகரான சித்தூரை அக்பர் முற் றுகையிட்டான். இருபக்கத்திலும் எண்ணிறந்த வீரர் மாண்டுபோயினர். முடிவில் சித்தூர்க் கோட்டை பற்பல இடங்களில் இடியுண்டது. அதுகண்டு மானத்துக்கு அஞ்சிய மாதர் தீக்குளித்தனர். ஆடவரோ மஞ்சள் உடைதரித்து, மற்போர்புரிந்து வீரசுவர்க்கம் புகுந்தனர். பின்பே சித்தூர் நகரம் அக்பரின் வசமாயிற்று.

பிரதாபனுடன் போர்: ஆயினும் சித்தூர் வேந்தன் உதயசிம்மன் அடிவணங்கவில்லை; உதயபுரி எனும் புதிய ராஜதானியொன்று கட்டி வாழ்ந்து வந்தான். அப்பால் உதயன் மைந்தன் பிரதாப சிம்மன் பட்டமேறி, இழந்த சித்தூரை மீட்பதென்று அருஞ் சபதம் பூண்டான். அக்பருக்கும் பிரதாபனுக்கும் இருபத்தேழு வருஷம் கடும்போர் நடந்தது. நாடு நகரம் அனைத்தையும் இழந்து, தன்னந்தனியனாய் நின்றும், பிரதாப சிம்மன் பணிய

வில்லை. கடைசியில் பிரதாபன் சமர்செய்து, இழந்த நக ரங்களில் பலவற்றையும் மீட்டுக்கொண்டான்.



சாந்த் பீபியுடன் சண்டை: வட இந்தியா முழுதும் வசமானபின், தட்சணத்திலும் ஸாம்ராஜ்யத்தைப் பரப்ப

அக்பர் முயன்றுன். தட்சணத்திலே பாமினி ராஜ்யம் ஐந்து சிற்றரசுகளாகப் பிரிந்ததல்லவா? அவற்றுள் பீஜப்பூர், அஹ்மத்நகரம், கோல்கொண்டா ஆகிய மூன்றுமே சிறப்பாக இருந்தன. அஹ்மத்நகரின்மீது மொகலாயச் சேனை பாய்ந்தது. அப்போது இளவேந்தனது அத்தையான சாந்த் பீபி என்னும் அரசி அச்சேனையை எதிர்த்துநின்று ஆண்சிங்கம்போல் போர் புரிந்தாள். அக்பரே சேனைத்தலைமை வகித்துப் போரை நடத்தினுன்; அப்போது, அவ்வரசியின் வீரங்கண்டு அவன் பெரிதும் மெச்சினன். முடிவில் அவ் வீர மாது வஞ்சனையாக மாய்ந்துபோக, அஹ்மத்நகரம் அக்பரின் வசமாகியது. உடனே, விஜயபுரி, கோல்கொண்டா ஆகிய இரண்டும் அக்பருடன் சமாதானம் கொண்டன.

தனது ராஜ்யத்தைப் பதினைந்து மாகாணமாக அக்பர் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தலைவர்களை நியமித்தான். அவர்களுக்கு ஸுபேதார் என்று பெயர். அவர்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கோ ஸுபா என்று பெயராம். நிலத்தின் வருமானத்தை மதித்தே அக்பர் வரி விதித்தான்; நிலவரி தவிர வேறு வரி விவசாயிகள் கொடுக்கநேரவில்லை. முகம்மதியரல்லாதாருக்கு விதித்திருந்த ஜிஸியா எனும் தலைவரியை எடுத்துவிட்டான். முன்னம் முகம்மதிய மன்னரில் பலர் மத வைராக்கியங்கொண்டு நடந்துவந்ததனுல், இந்துக்களுக்குத் தொந்தரவு ஏற்பட்டது. அக்பரின் காலத்தில் அத்தகைய தொந்தரவுகள் நேரவில்லை.

மத சமரசம்: மத வைராக்கியத்தை விடுத்து, மத சமரஸம் கொள்ளவே அக்பர் பெரிதும் முயன்றுன். சர்வசம்மதமான சமரஸ மதமொன்றைக் காணவேண்டுமென்பதே அக்பரின் பேரவா. இந்துமத தத்துவங்களை அவன் நன்கு தெரிந்துகொண்டான்; மகாபாரதம், ராமாயணம் முதலிய நூல்களைப் பாரசீக பாஷையில் மொழி

பெயர்க்கச் செய்தான்; கிறிஸ்தவமத தத்துவத்தை அறியவேண்டிப் பாதிரிமார்களை வரவழைத்து உபசரித்தான். பதினைந்து வருஷகாலம் பாதிரிமார் அவன் சபையில் இருந்தனர். வெள்ளிக்கிழமைதோறும் அவன் சபையிலே முகம்மதியர், கிறிஸ்தவர், ஜயினர், பௌத்தர், பிராமணர், பாரசிகர் முதலிய பற்பலரும் தம்தம் மத தத்துவத்தை எடுத்துரைப்பர். அச் செவியுணவு கொண்டு அவனும் பிறரும் பேரானந்தம் அடைவர்.

அக்பரின் அரிய சகாக்களிலே அபுல் பாஸல், அபுல் பைஜி இருவரும் மிக முக்கிய புருஷர். இவர்களில் அபுல் பாஸலைத் தனது சகோதரனேபோல் அக்பர் பாவித்து வந்தான். இவனைக் கலந்துகொள்ளாமல் அக்பர் எதுவும் செய்வதில்லை. அக்பரின் ஜீவிய சரிதையையும் அரசியல் நேர்மையையும் ஒரு நூலாக இவன் எழுதியுள்ளான். அந்நூலின் பெயர் அயினி அக்பர். அபுல் பைஜி என்பவனோ பெருங் கவிஞன்; வடமொழியை நன்குணர்ந்து, இந்துக்களின் காவியங்களைப் பாரசீக பாஷையில் மொழி பெயர்த்த வல்லவன்.

இந்தியாவை ஆண்ட சிறந்த சக்கரவர்த்திகளில் ஒருவன் அக்பர். அக்காலத்திலே உலகில் அக்பருக்கு ஈடான சக்கரவர்த்திகள் இல்லை. இன்றும் அக்பரின் கீர்த்தி நின்று நிலவுகிறது.

---

17. ஜஹாங்கீர் (1605—1627)

அக்பரின் மூன்று மைந்தரில் மூத்தவனாகிய ஸலீமின் நடத்தை மோசமாக இருந்தது. ஆதலின் அவனுக்கு அரசுதர முதலில் அக்பர் விரும்பவில்லை. மற்ற இரு மைந்தரும் இளமையிலேயே இறந்துவிட்டமையால், ஜஹாங்கீர் எனும பெயருடன் ஸலீம் பட்டத்

துக்கு வந்தான். ஜஹாங்கீர் என்றால் உலகை ஜெயித்தவன் என்று பொருள்படும்.

ஜஹாங்கீர்

நூர் ஜஹான் : அக்பரைப் போல் ஜஹாங்கீர் கூரிய மதியும் பேராற்றலும் படைத்திருக்கவில்லை; மதுபானத்தில் மோகங்கொண்டு, சுகவாழ்வில் ஈடுபட்டுக் கிடந்தான். படைக்கலப் பயிற்சியும் கவி பாடும் வன்மையும் அவனுக்கு உண்டு. அக்பரைப் போலவே ராஜபுத்திர மாதை மணந்துகொண்டு, அக்குலத்தாரின் அபிமானத்தையும் ஆதரவையும் அடைந்தனன். நூர்ஜஹான் எனும் ஓர் அழகிய மாதின்மீது பெருங்காதல்கொண்டு அவன் பேதுற்றுக் கிடந்தான்.

நூர் ஜஹான்

அக்பரின் அரசவையிலிருந்த பெருமகனொருவனது மகள் நூர் ஜஹான். அவள்மீது ஜஹாங்கீர் தணியாக் காதல் கொண்டதைக் கண்டு, அக்பருக்குப் பிடிக்கவில்லை. ஆதலின், அக்பர் அவளை ஷேர் ஆப்கன் என்பானுக்கு மணம் புரிவித்து, வங்காளத்துக்கு அனுப்பிவிட்டான். பட்டத்துக்கு வந்ததும், ஷேர் ஆப்கனைக் கொன்று, நூர் ஜஹானை யடைந்தான் ஜஹாங்கீர்.

ஆறு வருஷகாலம் ஜஹாங்கீரை அவள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. முடிவில் ஒருவாறு இசைந்து அவனை மணந்துகொண்டனள். உடனே அம்மன்னவன் தனது

ராஜ்யாதிகாரம் அனைத்தையும் அவளிடமே ஒப்படைத்தான். கூரிய மதியும் சீரிய தைரியமும் வாய்ந்தவளாதலின், யாதொரு குறையுமின்றி, அரசியலை அவள் செவ்வனே நடத்தி வந்தாள்.

அரசுக்குச் சண்டை: ஜஹாங்கீரின் மூத்த மைந்தன் குஷ்ரு என்பவன் அரசில் ஆசைகொண்டு கலகமாக எழுந்தான். போர்முனையில் படு தோல்வி கொள்ளவே ஆயுள் அளவும் அவன் சிறையில் கிடக்க நேர்ந்தது. இரண்டாவது மைந்தனான குர்ரம் என்பவன் இளவரசு ஆயினன். நூர் ஜஹானோ தனது மாப்பிள்ளையான ஷாரியார் என்பவனை இளவரசாக்க விரும்பினாள். குர்ரம் ஓர் ராஜபுத்திர மாதுக்குப் பிறந்தவன்; தவிர ராஜபுத்திர மாதையும் மணந்து கொண்டவன். முன்னம் ராஜபுத்திரனா யிருந்து முகம்மதியனாக மாறிய முகபத்கான் என்பான் குர்ரமுக்குப் பக்கபலமானான்.

பிற ராஜபுத்திரரும் துணை புரியவே, முகபத்கான் கிளம்பி, ஜஹாங்கீரை அரண்மனையிலேயே சிறை வைத்தான். பின்பு வெகு தந்திரமாக அரசனைச் சிறை மீட்டாள் நூர் ஜஹான். நாளடைவில் ஜஹாங்கிர் உயிர் துறக்கவே, ஷாஜஹான் எனும் நாமஞ் சூடி அரியணையில் அமர்ந்தான் குர்ரம். எனவே நூர் ஜஹானது முயற்சி பலிக்காது போயிற்று.

ஜஹாங்கீரின் காலத்தில் மொகலாய ராஜ்யம் குன்றவில்லை. அவனது காலத்திற்கு முன்னமேயே வியாபாரங் கருதி ஆங்கிலேயர் இங்கே வந்திருந்தனர். சூரத் நகரில் அவர்களுக்கு ஒரு பண்டகசாலையும் இருந்தது. இங்கே வியாபாரச் சலுகை பெறவேண்டி, இங்கிலாந்தின் அரசனான முதலாம் ஜேம்ஸ் என்பவர் ஜஹாங்கீரிடம் ஒரு தூதனை அனுப்பினார் காணிக்கையுடன். அவன் பெயர் ஸர் தாமஸ் ரோ.

---

18. ஷாஜஹான் (1627—1658)

ஷாஜஹானது பிறப்பையும் வாழ்க்கையையும் மதிக்கையில், அவனை முகம்மதியன் என்னுமல், ராஜபுத்திரன் என்பதே பொருந்தும். முகம்மதிய பக்தனுக இருந்தும், அவனிடம் சமரஸப் பான்மையே மிகுதி. குடிமக்களின் நலத்தைக் கருதி மிக நேர்மையாக அவன் ஆட்சி செய்துவந்தான். ராஜபுத்திரர் பெருந்துணையாக இருக்கவே, பலவிதத்திலும் அவன் ஆட்சி சிறப்புற்றது.

பட்டத்துக்கு வந்தவுடனே, தனது சோதரரும் சோதரரின் புதல்வர்களும் அரசுக்கு ஆசைகொண்டு எழுவரோ என்று ஷாஜஹானுக்கு அச்சம் பிறந்தது. ஆதலால் அவர்கள் அனைவரையும் அவன் கொன்று குவித்தான்; அங்ஙனம் கொடுமை புரிந்தானுயினும், பின்னர் எல்லாரிடமும் பிரியமேகொண்டு நடந்து வந்தான். குடிமக்கள் நேரில் வந்து, குறைகளைச் சொல்லிக் கொள்ளுவதில் அவனுக்கு விருப்பம் அதிகம்.

ஷாஜஹான்

வேடிக்கை விநோதங்களிலும், ஆடம்பர அலங்காரங்களிலும் அவன் மோகம் கொண்டவன் ; ஆதலின், மிக உயர்ந்த ஆடை அணிகள் பூண்டு, சதுரங்க சேனையும் சூழ்ந்துவர, அடிக்கடி நகர்வலம் வருவான் ; ஏராளமான பணத்தைச் செலவிட்டு, அழகிய மாளிகைகளும், உன்னத மண்டபங்களும், உயர் கோபுரங்களும் எங்கும் அமைத்

தான். அவன் காலத்தில் எழுந்த கட்டடங்கள் அனைத்தும் கண்ணையும் கருத்தையும் கவரும் வனப்புடையன.

மும்தாஜ் மஹால்: ஷாஜஹானது பட்டமகிஷியின் பெயர் மும்தாஜ் மஹால். அவள் அழகில் சிறந்து, அன்பில் உயர்ந்து, அருள் வடிவாக விளங்கியவள்; பதின்மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்தபின், கடைசி பிரசவத்தில் காலகதியானாள். அப்பொழுது, மறு விவாஹம் செய்துகொள்ளக் கூடாதென ஷாஜஹானை அவள் வேண்டிக் கொண்டாள். அவ்விதமே மன்னவன் நடந்து, அவள் ஞாபகம் நிலைக்க, ஆக்ரா நகரிலே அழகிய கோரியொன்று அமைத்தான்.

மும்தாஜ் மஹால்

அக்கோரியே தாஜ் மஹால் எனப்படும். உலகிலே அதற்கு இணையான கட்டடம் எதுவும் இல்லை. அதனைப் பார்ப்பின் இன்று கட்டியது போலவே காணப்படும். அதனைக் கட்டி முடிக்க முப்பது வருஷம் பிடித்தது. கட்டிய செலவும் முப்பது லட்சமாம். கண்ணைப் பறிக்கும் பளபளப்பான சலவைக் கற்களால் ஆனது தாஜ் மஹால். பூவுலக யாத்திரிகர் பலரும் ஆக்ரா சென்று, அக்கோரியைப் பார்த்து வியந்து திரும்புவர்.

டில்லியிலே ஜும்மா மசூதி ஒன்றும் ஷாஜஹான் கட்டுவித்தான். அதன் அமைப்பு அதி அற்புதம். ஆக்ரா நகரில் அவன் கட்டிய முத்து மசூதியும் அப்படியே. சிற்பத் திறத்தையும் ஓவியத் தொழிலின் உயர்வையும் அவ்வேந்தன் அமைத்த கட்டடங்களில் காணலாம். பற்பல மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் கட்டி மகிழ்ந்த

தனுல், அவனே மாளிகை மன்னன் என்பர் சிலர். நவரத்தினங்களும் பொன்னும் வைத்திழைத்து அவன் அமைத்த மயிலாசனம் விலைமதிக்க முடியாதது. அதன் மதிப்பு ஒரு கோடிக்கு மேலுமிருக்கும்.



தாஜ் மஹால்

ஷாஜஹானது சேனைத் தலைவரில் ஒருவனான கான் ஜஹான் லோடி என்பவன் கலகமாய்க் கிளம்பினுன். அஹ்மத் நகரம் அவனுக்குத் துணையாக நின்றது. உடனே பெரும் படையுடன் ஷாஜஹான் புறப்பட்டு அத் தளகர்த்தனைக் கொன்று, அஹ்மத்நகர அரசனை யும் அடக்கினுன். பீஜப்பூர், கோல்கொண்டா அரசரும் ஒடுங்கினர். இதனுல் தட்சணத்திலே மொகலாய ஸாம்ராஜ்யத்தின் செல்வாக்கும் மதிப்பும் ஓங்கி உயர்ந்தன.

மைந்தருக்குள் மாறுபாடு: ஷாஜஹானுக்குப் புதல்வா நால்வர். மூத்தவன் தாரா என்பவன் இளவரசனுகி, அரசன் அருகே யிருந்தான். இரண்டாவனுன ஷுஜா வங்காள கவர்னராக விளங்கினுன். மூன்ருவனுன ஔரங்கசீப் தக்காண கவர்னராகத் தருக்கி நின்ருன். நாலாவனுன முரத் என்பவன் கூர்ஜரத்தின் கவர்னராக நின்ருன். எழுபதாம் வயதிலே ஷாஜஹானுக்கு நோய் கண்டது. உடனே மைந்தர் தம்முள் மாறுபட்டுச் சண்டைக்கு எழுந்தனர். தனது சோதரரை யெல்லாம் கொன்று, தந்தையையும் சிறையிலிட்டு, அரியணையில் அமர்ந்தான் ஔரங்கசீப்.

---

19. ஔரங்கசீப் (1658—1707)

பட்டத்துக்கு வந்தபொழுது, ஔரங்கசீபுக்கு வயது நாற்பது. அக்பரைப்போல் ஔரங்கசீபும் ஐம்பது வருஷகாலம் அரசாண்டான். பாபரின் காலத்தில் முளைத்த மொகலாய ராஜ்யம் அக்பரின் காலத்திலே நாலா பக்கத்திலும் பொங்கிப் பரந்தது. அக்பருக்குப் பின் வந்த இருவர் காலத்திலும் அவ் வரசுக்கு ஊனம் நேரவில்லை. ஔரங்கசீபின் காலத்திலோ அரசு பரந்து விரிந்தும், தத்தளித்தது.

ஔரங்கசீப்

அரசையடைய விரும்பி ஆதியிலே ஔரங்கசீப் போருக்கு எழுந்தபோது, ஜோதிபுரியின் வேந்தனுன யசோவந்தன், தாராவுக்கு

உதவியாக நின்முன். அதனை ஔரங்கசீப் மறவாமல், யசோவந்தன்மீது வைரங்கொண்டு, அவனை வஞ்சனையாக மாய்த்தான்; பிறகு அவன் மைந்தன் அஜீத் சிம்மனைச் சிறைசெய்து, ஜோதிபுரியைத் த்ரைமட்ட மாக்கினுன். அப்போது ராஜபுத்திரர் அனைவரும் சேர்ந்துகொண்டு மொகலாய அரசை எதிர்த்தனர். முப்பது வருஷகாலம் பெருஞ்சண்டை போட்டும் அவர்களை முனைமுகத்தில் ஔரங்கசீப் ஜெயிக்க முடியவில்லை.

தட்சணத்திலுள்ள முகம்மதியச் சிற்றரசுகளை வெற்றிகொள்ள வேண்டுமென்று ஔரங்கசீப் கருதினுன். அதன்படி 1681ஆு அவன் சேனுசமுத்திரம் கிளம்பியது. கடுஞ் சண்டைக்குப் பின், பீஜப்பூர் ராஜ்யம் பணிந்தது. பின்பு கோல்கொண்டாவை நோக்கி மொகலாயச் சேனைகள் சென்றன. கோர யுத்தம் நடந்த பின், கோல்கோண்டாவும் பணிந்தது. தக்காணத்தை ஔரங்கசீப் ஜெயித்தானுயினும், அச்சண்டையின் கோரச் செயல்களைக் கண்டும் கேட்டும் முகம்மதியருக்குள்ளே மிக்க மனக் கசப்பு ஏற்படலாயிற்று.

அப்பொழுது, ஔரங்கசீபின் பிள்ளை யொருவன் அக்பர் என்பவன் ராஜபுத்திரருடன் சேர்ந்துகொண்டு, தானே சக்கரவர்த்தி என்று கூறிப் போருக்கு எழுந்தான். இன்னொரு பக்கம் மகாராஷ்டிரர் என்னும் வகுப்பினர் சிவாஜியின் தலைமையில் கிளம்பி, ஔரங்கசீபுடன் மல்லுக்கு நின்றனர். தட்சணத்திலே முகம்மதியச் சிற்றரசுகளும் தொல்லை கொடுக்கலாயின. பஞ்சநதிப் பிரதேசத்திலே சீக்கியர் என்போர் சீறியெழுந்து, மொகலாய ராஜ்யத்தை எதிர்த்து வந்தனர். இணையிலா வல்லரசாகி, மகோன்னத நிலைகொண்ட மொகலாய ராஜ்யம் சிதறத் தலைப்பட்டு விட்டது.

ராஜபுத்திரரின் உறவும் இந்துக்களின் ஆதரவும் இன்றேல் அரசு நிலைக்காதென அக்பர் கண்டு, சேனை

யிலும் அரசிலும் அவர்களுக்குப் பெரும் பதவிகள் அளித்து அணைத்துவந்தான்; ஜாதி, மத வித்தியாசம்



பாராட்டாமல், சமரஸமே கொண்டு, ஜிஸியா எனும் தலைவரியை எடுத்துவிட்டு, எல்லாரையும் அன்பினால்

பிணித்துவந்தான். ஔரங்கசீபோ இந்துக்களையும் ராஜ புத்திரரையும் நம்பாமல், மத வைராக்கியமே மிகுந்து, மீண்டும் தலைவரி போட்டான். இவன் காலத்திலே இந்து ஆலயங்கள் பல இடிபட்டன. விக்கிரகங்கள் உடைபட் டன. இடிபட்ட ஆலயங்களின் கற்களைக் கொண்டு மசூதிகள் எழுந்தன. உத்தியோகங்களிலிருந்த இந்துக் களும் நீக்கப்பட்டனர்.

மகா தெய்வ பக்தியும், தூய்மையான துறவுத் தன் மையும், ஆடம்பரமற்ற மிக எளிய வாழ்க்கையும் ஔரங்க சீப் கொண்டிருந்தும் அவை பயன்படவில்லை. குடும்பத் திலும் அவனுக்குச் சந்தோஷம் இல்லாது போயிற்று. ஒரு பிள்ளை கலகமாய்க் கிளம்பி நிற்க, இதர பிள்ளை களும் தகுதியற்றுக் கிடந்தனர். இத்தகைய மனப் புண்ணுடன் அம்மன்னவன் தனது 90-வது வயதில கண் மூடினன். இந்தியாவை ஆண்ட முகம்மதியப் பெருமன்னவர்களில் ஔரங்கசீபே கடைசி மன்னவன்; தகுதியும் திறமையும் இருந்தும், பிரஜைகளை நம்பாமல் விரோதித்துக் கொண்டான். அவனை அவர்களும் நம்பா மல் விரோதமாக எழுந்தனர். அவனுக்குப் பின் மொக லாய ஸாம்ராஜ்யம் சின்னபின்ன மாகிவிட்டது.

20. மொகலாய அரசின் வீழ்ச்சி

பாபர், அக்பர், ஷாஜஹான், ஔரங்கசீப் முதலிய மன்னவர்கள் மனோபலம் வாய்ந்திருந்தார்கள். ஔரங்கசீபுக்குப்பின் வந்தவர்களோ ஆளும் திறமையும் மனோபலமும் அற்றவர்களாய் இருந்தனர். மேலும் மொகலாயப் பெருமக்களும் வீரதீரத்தில் குன்றி ஆடம் பரத்திலும் சுகபோகத்திலும் மூழ்கி ஆனந்தித்துக்கிடந் தனர். மொகலாயப்படைஞர் ஆதியிலே அநேக சண்டை களில் பண்பட்டு வீரதீரம் பெற்றிருந்தும், அப்பாலோ

போக போக்கியங்களை விரும்பிப் போர்க்களத்திலும் பல்லக்கி லேறியும் மனைவிமக்களுடன் சென்றும் களியாட்டங்களில் அயர்ந்தும் காலங் கழிப்பாராயினர்.

ஔரங்கசீப் தட்சணத்தின்மீது படையுடன் சென்றபொழுது, அவன் படைவீடு ஒரு பெரிய நகரின் திருவிழாக் கோலமேபோல் திகழ்ந்திருந்தது. குடிமக்களின் நலத்தை அக்பர் முதன்மையாகக் கருதியதேபோல், ஏனைய அரசர் எண்ணாமல், அச்சுறுத்தி ஆளவேண்டும் என்றே எண்ணிவிட்டனர். ஓர் அரசனுக்குப் பின்னர் மற்றொருவன் பட்டத்துக்கு வருகையில், அரசகுடும்பத்தில் படுகொலையும் பரிபவமும் இழைத்தல் வழக்கமாகிவிட்டது. மதவெறியால் அரசுமுறை அவலமாயிற்று. சீக்கியர், மகாராஷ்டிரர் இவர்களோ பலவிதத்திலும் அப்பேரரசை வாட்டி வதைக்கலாயினர்.

பகதூர்ஷா : அந்நிலையில், ஔரங்கசீபின் மைந்தன் முவாஜம் என்பவன் பகதூர்ஷா எனும் பட்டஞ் சூடி ஐந்து வருஷகாலம் (1707—1712) அரியணையில் அமர்ந்திருந்தான். சீர்கெட்டிருந்த அரசைச் சீராக்க அவன் முயன்றும் முடியவில்லை. இந்துக்களுக்கு விதித்திருந்த தலைவரியை அவன் நீக்கினான்; சிறைபட்டிருந்த மகாராஷ்டிர அரசனான ஸாகு என்பானை விடுவித்தான்; மகாராஷ்டிரருடன் நேசங்கொள்ள முயன்றான். பஞ்சாபிலே சீக்கியர் வெகு தொல்லை கொடுத்ததனால், அவன் நிம்மதியாக வாழமுடியவில்லை. மொகலாயப்பெருமக்களும் தக்கதுணை புரியவில்லை. ஐந்தாண்டு அரசாண்டு அவன் காலமானான்.

ஸயீத் சோதரர் : பின்பு பகதூர்ஷாவின் மூத்த புதல்வன் ஜஹந்தர் ஷா என்பவன் 1712ஆம் பட்டத்துக்கு வந்தான். அரசைக் கவனியாமல் இவன் சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடக்கவே, முன்னையிலும் மொகலாய ராஜ்யம் சீர்குலைந்தது. இவன் சோதரனான பருக்ஸியர் என்பவன் தன் அண்ணனைக் கொன்று 1713ஆம் சிம்மா

ஸனம் ஏறினுன். பருக்ஸியருக்கு ஸயீத் சோதரர் இருவர் துணைவராக நின்றனர். இருவரும் ஹூஸேன் அலி, அப்துல்லா எனப்படுவர். மகாராஷ்டிரருடனும் ராஜபுத்திரருடனும் நேசமாயிருந்தாலன்றி, அரசு நிலைக்காதென இருவரும் கண்டுகொண்டனர். உடனே இருவரும் அவ்விரு ஜாதியாருடனும் நட்புரிமை பூண்டு, அக்பரின் வழியைப் பின்பற்றினர். அதுகண்டு முகம்மதியரில் சிலருக்குப் பிடிக்கவில்லை. தவிர அவ்விருவரின் செல்வாக்குக் கண்டும் முகம்மதியருக்குப் பொறுமை பூத்தது. பருக்ஸியரும் அதற்கு உடந்தையாக இருந்தான்.

அதன்மேல் ஹூஸேன் அலி, அப்துல்லா இருவரும் சேர்ந்து பருக்ஸியரைக் கொலைபுரிந்து 1719ஆ முகம்மது ஷா என்பவனைச் சிம்மாசனத்தில் தூக்கிவைத்தனர். சின்னுளைக் கெல்லாம் முகம்மது ஷா அச் சோதரரின்மீது வெறுப்புக் கொண்டு, இருவரையும் உயிர் வாங்கிவிட்டான். பின்னர் மொகலாய ராஜ்யம் இன்னும் சின்னபின்னமாயிற்று. முகம்மது ஷாவின் காலத்தில் நாதர் ஷா என்பான் பாரசீகத்திலிருந்து படைகொண்டு வந்து, டில்லியில் புகுந்து, ஆண் பெண் குழந்தை அடங்கலையும் கொன்று அட்டகாசம் புரிந்தான்; முடிவில், ஏராளமான பொருள்களையும், கோஹினூர் எனும் விலையற்ற வைரத்தையும், மயிலாசனத்தையும் கவர்ந்து சென்றுன்.

நாதர் ஷா

முகம்மது ஷா 1748ஆ காலமாகவே, அவன் மைந்தன் அஹ்மது ஷா என்பான் அரசனுகி, ஆறு வருஷம் ராஜபோகங்கொண்டான். அப்போது

மகாராஷ்டிரரிலே சிந்தியா, ஹோல்கார் எனும் தலைவர்கள் இந்துஸ்தானத்திலே தனித்தனியே ராஜ்யங்கள் ஏற்படுத்திக் கொண்டனர். நாட்டிலே குழப்பங்களும் கலகங்களும் எங்கும் மலிந்தன.

ஷா அலம்: அப்பால் கி. பி. 1754-ஆு இரண்டாம் ஷா அலம் என்பவன் டில்லி பாதுஷாவாக ஆனான். இதற்கிடையில் சுயேச்சை பெற்றுவிட்ட வங்காளத்தைத் திரும்பவும் கைப்பற்ற இவன் முயன்றான். 1757-ஆு பிளாஸி யுத்தத்தில் வங்காள நவாப் ஸிராஜ் உத் தௌலா இறந்து போகவே ஆங்கிலக்கம்பனியின் தயவினால் மீர் ஜாபர் என்பான் வங்காள நவாபு ஆயினன். பிறகு மீர் காஸிம் என்பவன் நவாப் ஆனான். இந்த நவாபும் அயோத்தி நவாபும் ஷா அலமும் சேர்ந்து ஆங்கிலக் கம்பனியாருடன் (1763) பக்ஸார் எனுமிடத்தில் சண்டை புரிந்தனர். மூவரும் அதில் தோற்றுப் போகவே, வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மாகாணங்களின் அரசுரிமை பெயரளவில் ஆங்கிலக்கம்பனிக்குக் கிட்டியது. ஷா அலமோ ஒப்புக்கு டில்லி பாதுஷாவாக விளங்கி, ஆங்கிலேயரிடமிருந்து வாழ்வுக்குரிய திரவிய சகாயம்பெற்றுக் காலங் கழித்து வரலானான்.

ஷா அலம்

ஆங்கிலேயர் அங்ஙனம் கைமேலாவதைக் கண்டு மகாராஷ்டிரர் சகிக்கவில்லை. சிந்தியாவும் ஹோல்காரும் கிளம்பி, டில்லியைக் கைப்பற்றி, ஷாஅலத்தை அங்கே இருத்தி, வடஇந்தியா முழுவதிலும் ஆட்சிசெலுத்த அடிகோலினர். அதுசமயம் ஷாஅலம் மகாராஷ்டிரரின் வச

மாகிவிடவே, அவனுக்குக் கொடுத்துவந்த உபகாரச் சம்பளத்தை ஆங்கிலேயர் நிறுத்தி விட்டனர். பின்பு 1803-ஆம் டில்லியை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். மறுபடியும் ஷா அலம் ஆங்கிலேயரின் ஆதீனத்துக்கு உட்பட்டான். 1806-ஆம் ஷா அலம் மரிக்கவே, அவன் மைந்தன் அக்பர் என்பவன் பேருக்குமட்டும் டில்லி சக்கரவர்த்தியாக இருந்து வந்தான்.



பழைய டில்லிக் கோட்டை

1827-ஆம் ஷா அலத்தின் பேரன் பகதூர்ஷா என்பவன் டில்லி நகருக்கு மட்டும் தலைவனாகி ஆங்கிலேயரிடம் திரவிய சகாயம் பெற்றுப் பெருங்காய மிருந்த பாண்டமேபோல் விளங்கி நின்றான். 1857-ஆம் இத் தேசத்தில் சிப்பாய்க் கலகம் கிளம்பியது. அப்போது பகதூர்ஷாவை டில்லி சக்கரவர்த்தியென அக் கலகக்காரர் அமர்த்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனை யடக்கி டில்லியை ஆங்கிலேயர் கைப்பற்றியபொழுது பகதூர்ஷா சிறைப்பட்டான். அத்துடன் மொகலாயரின் ராஜ வமிசம் முடிவுற்றது.

21. மகாராஷ்டிரர்

முற்காலத்திலே இந்தியாவை ஐம்பத்தாறு தேசங்களாக வகுத்திருந்தார்கள். அத் தேசங்களில் ஒன்று மகாராஷ்டிரம் எனப்படும். அங்கே வசிக்கும் ஜனங்களை மகாராஷ்டிரர் என்பார்கள். பம்பாய் ராஜதானியிலுள்ள மேற்கு மலைப்பிரதேசம் அவர்களின் புராதனமான வாசஸ்தலம். தற்சமயம் இந்தியாவிலே ஏறக்குறைய மூன்று கோடி மகாராஷ்டிரர் உளர்.

மலைப்பிரதேச வாசிகளாதலின், மகாராஷ்டிரருக்கு உடல்வலியும் மனவலியும் மிகுதி. பாடுபட்டுழைப்பதில் அவர்கள் மகா வல்லவர்கள். இயற்கையாகவே அவர்கள் சுதந்திரப் பிரியர். மேற்குத்தொடர் மலையின் ஒவ்வொரு குன்றிலும் ஒரு கோட்டை கட்டிக்கொண்டு, அவை ஒவ்வொன்றிலும் ஒரொரு தலைவன் இருப்பான். அருகேயுள்ள கிராமங்களுக்கெல்லாம் அத்தலைவனே அதிகாரி; தனிக் காட்டு ராஜனுமாம்.

மகாராஷ்டிரர்களிடம் கம்பீரம் அதிகம்; போர்க்குணமும் மிகுதி. நன்றியறிவிலே அன்னார் நனிசிறந்தோர். பிறனொருவன் தீமை யிழைப்பின், யானையைப்போல் கறுவி நின்று, சமயம் பார்த்துப் பழிவாங்கத் தவறார்; அடைக்கலத்தைக் காக்க ஆருயிரையும் வழங்குவர்; அவமதிப்போரை ஆயுள் அளவும் சும்மாவிடார்; பழிவாங்குவதாயின், முன்னதாகவே பகைவனுக்கு எச்சரிக்கை செய்வர். ஆதிகாலத்திலே இத் தேசமெங்கும் இந்து ராஜ்யங்கள் நிரம்பி நின்றபொழுது, அவர்களின் குண விசேஷங்கள் பெரிதும் பரிமளித்தன.

அப்பால் இந்தியாவில் முகம்மதிய ஆதிக்கம் தோன்றவே, மகாராஷ்டிரரிடம் தந்திரமும் சூழ்ச்சியும் ஓங்கி உயரலாயின; வீரதீரமும் விடாப்பிடியும் சுறுசுறுப்பும்

தன்னம்பிக்கையும் மிளிர்ந்தன. குதிரையேற்றத்திலும் வேல்கம்பு வீச்சிலும் வல்லவர்க ளாதலின், திடீரென்று பகைவர்மீது பாய்ந்து அவர்கள் பரிபவம் இழைப்பர்; பகைவர் திரண்டுவரின், பயங்கொள்ளாமல், போர் நூலின் தந்திரத்தைத் தழுவி, மலையுச்சிக்கு விரைந்து சென்று பாதுகாவல் தேடிக்கொள்வர். ஆதலின் முகம்மதியரும் பிறரும் பெரும்படையுடனும் பீரங்கியுடனுஞ் சென்றும், அவர்களை முற்றிலும் முறியடிக்க முடியவில்லை.

பாரதபூமியின் நிலைகண்டு, தெய்வம், தேசம், தர்மம் மூன்றினையும் காக்கவேண்டுமென்று 15, 16-ஆம் நூற்றுண்டுகளிலே மகாராஷ்டிர மெங்கும் பேருக்க மொன்று தோன்றியது. மகான்களும் ஞானிகளும் புலவரும் கவிஞரும் கிளம்பி, மக்களுக்குப் போதம் புகட்டி, சுதர்ம சுயராஜ்ய லட்சியங் கொள்ளவேண்டு மென்று வற்புறுத்தி வந்தனர். மகாராஷ்டிர மக்களும் விழிப்புக் கொண்டு வீறுகாட்டச் சமயம் பார்த்திருந்தனர்.

அந்நாளிலே மகாராஷ்டிரரில் பலர் தட்சண முகம்மதிய மன்னவரிடம் போர்வீரராகவும் தளகர்த்தராகவும் சேவகஞ் செய்துவந்தனர். சிலர் அந்த அரசுகளிலே ஜாகீரும் ஜமீனும் சன்மானம்பெற்றுக் குட்டியரசர்போல் குலவி நின்றனர். பீஜப்பூர், அஹ்மத்நகரம் ஆகிய முகம்மதிய அரசுகளில் மகாராஷ்டிர அதிகாரிகளும் சிப்பந்திகளுமே மிகுதி. பீஜப்பூர் வேந்தனிடம் சேனைத் தலைவனாக இருந்த ஒருவன் பெயர் ஷாஜி. ஔரங்கசீப் சக்கரவர்த்தியாக வந்த காலத்தில், பூனா, பங்களூர் இரண்டினுக்கும் ஷாஜியே கவர்னராக இருந்தான். அந்த ஷாஜி மகாராஷ்டிரப் பெருமக்களில் ஒருவன்; வீர சிவாஜியின் தந்தையு மாவன். சிவாஜியோ மகாராஷ்டிர குலத்தினுக்கு மகிமை யூட்டி, மன்னவனாகி இப்பூமி யெங்கும் புகழ் பரப்பினான். இவன் வரலாற்றை அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

22. சிவாஜி (1627—1680)

பீஜப்பூர் வேந்தனிடம் சேனையில் சேவகம் பார்த்த ஷாஜி நிலையாக ஓரிடத்தில் இருக்க இயலவில்லை; ஆதலின் பூனா நகரிலே மனைவி ஜீஜாபாய், மகன் சிவாஜி ஆகிய இருவரையும் இருக்கப் பணித்தான்; அவ்விருவருக்கும் துணையாகவும், பூனா ஜாகீரைப் பராமரிக்கவும் காண்டதேவன் எனும் வேதியனையும் அமர்த்தினான். ஆதலினால், இளமை முதல் சிவாஜி தன் தந்தையுடன் வசிக்க முடியாதுபோயிற்று.

சிவாஜி எந்தப் பள்ளிக்கூடத்திலும் சேர்ந்து வாசிக்கவில்லை. பெற்ற தாயும் அவ்வேதியனுமே அறிவு புகட்டி வந்தனர். அன்னை ஜீஜாபாய் தினம் பாரத, ராமாயணக் கதைகள் சொல்லுவாள். அதுகேட்டுச் சிவாஜியும் அப் புராண, இதிகாச வீரரைப்போல் சிறந்து விளங்க வேண்டுமென ஆசை கொள்வான். அவன் தந்தைக்குச் சொந்தமான ஜாகீரைக் காண்டதேவன் பரிபாலித்து வருகையில், சிவாஜியும் உடனிருந்து கவனிப்பது வழக்கம். அவன் கல்விகற்ற வகை இதுவே. அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பர். அது எங்ஙனமாயினும், மகாமேதையாக அவன் விளங்கினான்.

இளமையிலே சிவாஜி பற்பல படைக்கலங்களிலும் பயிற்சிபெற்றான்; மலைநாட்டினரான மாவலர் என்போருடன் நெருங்கிப் பழகினான். அவர்கள் அவனிடம் அளவுகடந்த அபிமானம் கொண்டனர். அத்தகைய மக்களைப் பக்கபலமாகக் கொண்டு இந்து ராஜ்யம் ஒன்றை ஸ்தாபிக்க இளமையிலேயே அவன் ஆவல் கொண்டான். பீஜப்பூர் வேந்தனிடம் வேலைக்கமரும்படி ஷாஜியும் காண்டதேவனும் பன்முறை அவனை வற்புறுத்தி

வந்தனர். அவனே 'யாருக்கும் கைகட்டி வாழமாட்டேன்' என்று பிடிவாதமாயிருந்தனன்.

அப்போது தட்சணத்திலுள்ள முகம்மதியச் சிற்றரசுகளின் போக்கையும், அவற்றால் இந்துமக்கள் படும் அவதியையும் சிவாஜி கூர்ந்தறிந்தனன். அறியவே, இந்து ராஜ்ய மொன்று காணும் ஆவல் அவனிடம் கொழுந்து விட்டது. பின்னர் அம் மாவலரின் துணை கொண்டு, பீஜப்பூர் அரசின் கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாக அவன் தாக்கலானான். விரைவிலே பல மலைக் கோட்டைகள் அவன் வசமாயின. பத்தொன்பது வயது நிரம்புவதற்குள் கொங்கண தேச முழுதும் அவனுக்கு உட்பட்டுவிட்டது.

சிவாஜி

சிவாஜியின் துடுக்கைக் கண்டு பீஜப்பூர் வேந்தன் கொதிப்புக் கொண்டான்; உடனே அப்ஸல்கான் என்பானைப் பெருஞ் சேனையுடன் சிவாஜியின்மீது விடுத்தான். தந்திரத்தில் கைவந்த சிவாஜி சண்டை தொடங்கு முன்பு, தானும் அப்ஸல்கானும் தனியே பேசவேண்டுமென்றான். குறிப்பிட்ட வண்ணம் சிவாஜியும் அப்ஸல்கானும் தனி இட மொன்றில் சந்தித்தனர். ஒருவரையொருவர் கட்டித் தழுவுகையில், சிவாஜியின் குரல்வளையை அப்ஸல்கான் நெறிக்கலானான்.

உடனே சிவாஜி தனது கையில் மறைத்து வைத்திருந்த புலிநக ஆயுதங்கொண்டு அவன் வயிற்றைக் கிழித்து, பிச்சுவா கொண்டு குடலைச் சரித்தான். அத

ணுல் அப்ஸல்கான் சாயவே, அண்டையில் பதுங்கியிருந்த மாவல வீரர் பீஜப்பூர் சேனையின்மீது சீறி விழுந்தனர். அச்சேனை அல்லோலகல்லோலங் கொண்டு ஓட்டம் எடுத்தது. தட்சணமெங்கும் அச்செய்தி பரவவே, இந்துக்களைக் காக்க வந்த தீர புருஷனென அனைவரும் சிவாஜியைப் போற்றினர். தட்சண முகம்மதியச் சிற்றரசுகள் அதன்மேல் சிவாஜியைக் சண்டு கலங்கிக் கிடந்தன.

பின்பு சிவாஜி தட்சணத்தில் மொகலாயருக்குச் சொந்தமான சில நகரங்களைத் தாக்கினுன். உடனே ஒளரங்கசீபின் சேனை ஒன்று ஷீஸ்டாகான் என்பவன் தலைமையில் புறப்பட்டது. அச்சேனையின் பெருக்கைக் கண்டு சிவாஜி தந்திரமாகப் பின்வாங்கினுன். ஷீஸ்டா கானே பூனுவில் புகுந்து, சிவாஜி வளர்ந்த அரண்மனையிலேயே ஆடம்பரத்துடன் தங்கினுன். அந் நகரையும் மாளிகையையும் ஆயிரக்கணக்கான மொகலாய வீரர் காத்து நிற்கலாயினர்.

ஒருநாள் சிவாஜி மாறுவேடம் பூண்டு, சில துணைவருடன் அந்நகரில் புகுந்து, ஒரு திருமணக்கோலத்துடன் சேர்ந்து, நள்ளிரவில் ஷீஸ்டாகான் மீது பாய்ந்தான். மொகலாயச் சேனைத் தலைவன் அதுகண்டு வெருண்டு, உடம்பில் பட்ட காயத்துடன் உயிர்தப்பி யோடினன். பெருமிதமாக வந்த மொகலாயச் சேனையும் பேதுற்றுத் திரும்பிச் சென்றது. உடனே மகாராஷ்டிர வீரனது அஞ்சாமையும் பிரதாபமும் பாரதபூமியெங்கும் பரவின. பின்பு சிவாஜி ஒரு படை வகுப்புடன் சென்று, சூரத் நகரைக் கொள்ளையாடினுன்; தட்சணத்திலும் மொகலாயருக்குச் சொந்தமான பல இடங்களின்மீது பாய்ந்தான்; கப்பல் படையொன்று கொண்டு, பீஜப்பூர் அரசின் துறைமுகங்களைச் சூறையாடினுன்.

சிவாஜியின் பிரதாபச் செயல்களைக் கண்ட ஒளரங்கசீப் மற்றொரு சேனையை அவன்மீது ஏவினுன். அச்

சேனையும் ஒய்ந்து ஒடுங்கிப் போகவே, மொகலாயருக்கும் சிவாஜிக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. மொகலாயருக்கு உட்பட்ட சுபேதாரைப்போல் தட்சணத்திலே சிவாஜி இருந்துவருவதென்றும், பல பிரதேசங்களின் அரசிறையில் நாலிலொரு பங்கை (சௌத்) சிவாஜிக்கு மொகலாயர் கொடுப்பதென்றும் ஏற்பாடாயிற்று.

பின்பு தனது அரசவைக்கு வந்து போகவேண்டுமென்று சிவாஜியை ஔரங்கசீப் வெகுபரிவுடன் அழைத்தான். வடஇந்தியா செல்லின், மொகலாய ராஜ்யத்தின் வன்மையை நேரில் கண்டறியலாம், அத்துடன் வட இந்தியாவிலும் இந்து அரசைப் பரப்ப வழி தேடலாம் என்னும் கருத்துக்கொண்டு மொகலாய ராஜ சபைக்குப் போக சிவாஜி இசைந்தான். ஔரங்கசீபோ அவ்வீரனை மரியாதையுடன் வரவேற்காமல், வஞ்சனையாகச் சிறை செய்தான். சிவாஜியுடன் அவன் மைந்தன் சாம்பாஜியும் சிறையாயினன். ஆயினும் சிவாஜியோ மனந் தளரவில்லை. தானும் மைந்தனுமாகக் கூடைகளில் அமர்ந்து தந்திரமாக வெளியேவந்து தப்பிப் போயினன்.

வெளியே வந்ததும் சிவாஜி வெகுண்டெழுந்து, மொகலாயரின் பிரதேசங்கள் பலவற்றைத் தாக்கினன்; மொகலாயருக்குச் சொந்தமான பிராந்தியங்களின் அரசிறையிலே தனக்கு நாலிலொரு பங்கு (சௌத் எனும் வரி) உண்டென்று உரிமை பாராட்டி வசூல் செய்தான்; அப்பால் கர்நாடகம், மைசூர் ஆகிய இரு நாடுகளையும் வசஞ்செய்து கொண்டான்; இரண்டாவது முறையாக ஸூரத் நகரைக் கொள்ளையாடினன்; மறு வருஷத்திலே மொகலாயச் சேனைவெள்ள மொன்றைப் போரிலே புறங் கண்டான். அப்போது மொகலாய வல்லரசும் சரி, தட்சண அரசுகளும் சரி, வகையின்றி வாளா கிடந்தன.

பல பிரதேசங்களையும் கோட்டைகளையும் கைப்பற்றவே சிவாஜிக்கு உட்பட்ட நாடு பரந்து விரிந்தது;

அதற்கேற்ப அவன் பெருஞ் சேனையொன்று திரட்டினுன்; தக்க கப்பல் படையுங் கொண்டான். கொண்டதும் மகா ராஜன் என வேத விதிப்படி முடிசூடிக் கொண்டான். 1674-ஸு ராயக்கோட்டையில் பட்டாபிஷேகம் நடந்தது. அப்போது இத்தேசத்திலே வர்த்தகம் புரிந்துகொண்டிருந்த ஆங்கிலக் கம்பனியாரும் காணிக்கையுடன் சிவாஜியைக் கண்டுகொண்டனர்.

பட்டாபிஷேகம் கொண்ட பின்னர், தனது அரசை சிவாஜி பற்பல பாகங்களாகப் பிரித்தான்; ஒவ்வொரு பாகத்திற்கும் ஓரொரு பிரதிநிதியை நியமித்தான்; அரசியலில் ஆலோசனை சொல்லவும், ஒவ்வோர் இலாகாவைப் பரிபாலிக்கவும், எட்டு மந்திரிகள் கொண்ட அஷ்டப்பிரதான் என்னும் சபையை அமைத்தான். மந்திரிகளில் முதல்வன் பேஷ்வா என்று பட்டம் பெற்ருன். குடிமக்களுக்கு நன்மைபுரிய அவன் பலவழிகள் கோலினுன்; பின்பு தென்னிந்தியாவில் புகுந்து பல இடங்களை வசஞ் செய்து கொண்டான்.

பிறந்தது முதல் ஓயாமல் ஒழியாமல் போர் புரிந்து வந்ததனுல் சிவாஜி நோய் கொண்டு, 53-வது வயதில் 1680-ஸு காலகதி ஆயினன். தன்னந் தனியனுய் நின்று தோளிரண்டுமே துணையெனக் கொண்டு, பேரரசொன்று கண்டு, வல்லரசை ஆட்டிவைத்து எங்கும் புகழ்பரப்பிய சிவாஜியின் பெருமையே பெருமை.

சிவாஜி ஜாதி மதபேதம் காட்டி நடக்கவில்லை; முகம்மதியருக்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லை. அன்னுரின் வேத நூலாகிய குர்-ஆனை அவமதிக்கவில்லை; தன் கையில் சிக்கிய முகம்மதிய மாதரைத் தங்கையர் போல் நடத்தினுன்; முகம்மதியத் துறவிகளை ஆதரித்தான். அவன் ஆட்சியில் குடிகள் அனைவரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

---

23. சிவாஜிக்குப் பின்

சிவாஜிக்குப் பின்பு அவன் மூத்த புதல்வன் சாம்பாஜி சிம்மாசனம் ஏறினான். அந்நாளிலே மகாராஷ்டிரத்தில் சிறந்து விளங்கியவர் ராமதாஸ் சுவாமிகள். அவர் சாம்பாஜியின் குணத்தை யறிந்தும், ஔரங்கசீபின் போக்கை யுணர்ந்தும், தக்க புத்திமதி கூறி எச்சரிக்கை செய்தார். சிவாஜி இறந்து விட்டதால், மகாராஷ்டிரத்தை எளிதில் ஜெயித்துவிடலாமென ஔரங்கசீப் எண்ணினான். உடனே பெரிய மொகலாயச் சேனை யொன்று பெருமிதமாகப் புறப்பட்டது. சாம்பாஜியோ அச்சேனையை எதிர்த்து வெருட்டி யோட்டிவிட்டான்; ஆயினும் முற்றிலும் முறியடிக்கவில்லை. மொகலாயச் சேனையோ மீண்டும் தாக்கச் சமயம் பார்த்திருந்தது.

தந்தை சிவாஜியைப்போல் பெருமதியில்லாவிடினும் திறமையிலும் போர்வன்மையிலும் சாம்பாஜி குறைந்தவனல்லன். ஆதலின், அயலகத்திலே அகங்கரித்து நின்ற போர்த்துகேசியருக்குப் போர்முனையிலே அவன் புத்தி புகட்டினான்; ஜான்ஜிரா என்னுமிடத்தில் கப்பல்படை கொண்டு தருக்கி நின்ற அபிஸீனிய முகம்மதியரை ஒடுக்கினான்; பின்பு வழக்கம்போல் களியாட்டத்திலும் கேளிக்கையிலும் மூழ்கிக் கிடக்கலானான்.

சிறு வயது முதலே மதுவிலும் மாதரிடமும் சாம்பாஜி மோகங் கொண்டவன். ராஜ்ய பரிபாலனத்தை அக்களிமகன் நன்கு கவனிக்கவில்லை. சேனையின் ஒழுங்கு குன்றியதையும் அவன் பொருட்படுத்தவில்லை. மாதர் மயக்கில் அவன் சிக்குண்டு கிடந்த சமயம் பார்த்து, மொகலாயச் சேனை எழுந்து வந்து, தந்திரமாக அவனைச் சிறை செய்துவிட்டது. பின்னர் மொகலாய தளகர்த்தன்

அவ்வேந்தனை ஔரங்கசீபின் சமூகம் கொண்டு நிறுத்தினான். அங்கே அவனை ஔரங்கசீப் பல வகையில் அவமானங் கண்டனன். சாம்பாஜியும் சுடச்சுட அம்மொகலாய சக்கரவர்த்திக்குப் பதில் கொடுக்கத் தவறவில்லை. முடிவில் கோரமான சித்திரவதைக்கு அச்சாம்பாஜி ஆளாயினன். சித்திரவதையின் சமயத்திலும் வீரதீரத்திலோ மனவலியிலோ சொல்வன்மையிலோ சிறிதும் சாம்பாஜி குன்றாதிருக்கவே, அது கண்டு மொகலாயரே வியப்பு மிகக் கொண்டனர்.

சாம்பாஜியின் சித்திரவதை கேட்டதும், மகாராஷ்டிரமே திரண்டு மண்டி எழுந்தது. மகாராஷ்டிர வீரர் பழிக்குப்பழி வாங்குவதாகச் சபதம் பூண்டனர். சாம்பாஜியின் மைந்தன் ஸாகு என்பான் மொகலாயரிடம் சிறைப் பட்டுக் கிடந்ததனால் சிவாஜியின் இரண்டாவது பிள்ளை ராஜா ராம் என்பவனை அரசனாகக் கொண்டு, மகாராஷ்டிரர் நாற்றிசையிலும் புறப்பட்டுச் சென்று மொகலாய வீரரைச் சின்னபின்னஞ் செய்து, எங்கும் ஆண்மைக் கொடி தூக்கினர்.

தந்தைக்கேற்ற தனயனாதலின், ராஜா ராம் தனது கோட்டைகளை யெல்லாம் பழுது பார்த்துச் சேனையையும் சீர்படுத்தினான். இதற்குள் மொகலாயச் சேனைகள் திரண்டு வந்து மலைக்கோட்டைகளைக் கைப்பற்ற முயன்றன. பெருஞ்சேனையின் தாக்குதலைத் தாங்க இயலாமல் பல கோட்டைகள் முதலில் மொகலாயரிடம் சிக்கிக் கொண்டன. எனினும் சின்னாளைக்கெல்லாம் ஒவ்வொரு கோட்டையாக மகாராஷ்டிரர் மீட்டுக் கொண்டனர்; அத்துடன் மொகலாயச் சேனையைப் பல இடங்களிலும் திடீர் திடீரென்று தாக்கித் துன்புறுத்தினர். இவ்விதம் மொகலாயரைத் துன்புறுத்தி வீரம் விளைப்பதிலேயே காலத்தைக் கழித்து உயிர் விடுத்தான் ராஜா ராம்.

24. பேஷ்வாக்கள் (1708—1761)

ராஜாராம் இறந்ததும் அவன் மனைவி தாராபாய் தனது மகனே பட்டத்திற்கு உரியவனென்று வாதாடி அரசை நடத்திவரலானாள். இதற்கு இடையில் ஔரங்க சீப் காலமாகவே, அவன் மைந்தன் பகதூர் ஷா பட்டத் துக்கு வந்தான்; வந்ததும் மகாராஷ்டிரரின் நட்பை நாடி ஸாம்பாஜியின் புதல்வனான ஸாகுவைச் சிறைவிடுத்தான். ஸாகு திரும்பிவர, இவனே பட்டத்திற்கு உரியவன் என்று பலர் வாதாடினர்.

அது காரணமாக மகாராஷ்டிரருக்குள்ளே கட்சிப் பிரதிகட்சிகள் தோன்றின. சிலர் தாராபாயைச் சார்ந்து நின்றனர்; வேறு சிலர் ஸாகுவை ஆதரித்து நின்றனர். உடனே உள்நாட்டுக் கலகம் கொழுந்து விட்டது. அப்போது மகாராஷ்டிரத்தின் முதல் மந்திரி அல்லது பேஷ்வா எனும் பதவி வகித்தவன் பாலாஜி விசுவநாதன் எனும் வேதிய வீரன். சிவாஜி கண்ட பேரரசு சீர்குலைவது கண்டு அப் பாலாஜி சகிக்கவில்லை.

பரம திறமைசாலியான பாலாஜி பெருஞ் சேனை யுடன் எழுந்து, தாராபாயை மடக்கி, அவளுக்கு உதவி யாக நின்ற பிரபுக்களையும் அடக்கி, நாட்டைச் சீராக்கி, அரசியலை ஓர் ஒழுங்கு செய்தான். அதனால் ஸாகுவுக்கு அவ்வேதிய வீரனிடம் திட நம்பிக்கையும் விசுவாசமும் மிகுந்தன. பேஷ்வாவின் ஆலோசனைப்படியே ஸாகு நடந்து வந்தான். மகாராஷ்டிரத்தில் மீண்டும் ஒரு பெரு வீரன் பாலாஜி என்பவன் தோன்றியது கண்டு, டில்லி யிலே சர்வாதிகாரம் வகித்திருந்த ஸயீத் சோதரர் இருவருக்கும் அச்சம் உண்டாயிற்று.

மகாராஷ்டிரரின் நட்பை நாடாவிடின், ஏற்கெனவே சீர்குலைந்த மொகலாய ராஜ்யம் இன்னும் சின்னபின்ன

மாகிவிடுமென அந்த ஸயீத் சோதரர் கருதி, 'ஸாகுவே மகாராஷ்டிர மன்னவன்; சிவாஜியின் காலத்திலே மொகலாயப் பிரதேசங்களிலே பற்பல இடங்களில் சௌத் எனும் வரியை மகாராஷ்டிரர் வசூலித்து வந்ததுபோலவே இனியும் வசூல் செய்துகொள்ளலாம்,' என்று அதிகார பூர்வமாக உரைத்தனர். இதற்கு ஈடாக டில்லியரசுக்கு உதவிபுரிய முதல்மந்திரி பாலாஜி விசுவநாதன் ஒப்புக்கொண்டான். டில்லியரசுடன் அவ்விதம் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டவுடனே மகாராஷ்டிரரின் பெருமை இத்தேசமெங்கும் உயரலாயிற்று.

பாலாஜி காலமான பின்பு அவன் மைந்தன் பாஜி ராவ் பேஷ்வா ஆயினன். புதிய பேஷ்வாவின் குண விசேஷங்களை உணர்ந்த ஸாகு அவனிடமே அரசியலை ஒப்படைத்தனன்; அரசியலில் தான் தலையிடவில்லை. மொகலாய ராஜ்யத்தின் சீரழிவு கண்டு, அதன் பல பாகங்களைப் பாஜிராவ் வசஞ்செய்து கொண்டான்; டில்லியிலே இந்துராஜ்யத்தை மீண்டும் நிலைநாட்டவும் நினைத்தான்; மாளவம், கூர்ஜரம் முதலிய பற்பல நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டான்; அந்நாடுகளில் திறமையான வீரர்களைத் தலைவர்களாகவும் நியமித்தான்.

சதாரா நகரில் ஸாகு வசித்துவர, பாஜி ராவோ பூனா நகரில் தங்கி, இந்நகரைப் பலவகையிலும் வளம்படுத்தினன். உண்மையில் அரசனாக இருந்தவன் பாஜி ராவே. பேருக்குத்தான் ஸாகு அரசன். ஆயினும் பாஜி ராவிடம் படாடோபம் கிடையாது. சாதாரணமான போர் வீரனைப் போலவே அவன் உண்டு உடுத்து நடந்துவந்தான். அதனால் மகாராஷ்டிரருக்கும் மன்னவனுக்கும் அவனிடம் பக்தி விசுவாசம் மிகுந்தன. அவன் குணாதிசயங்களைக் கேள்வியுற்று அவனிடம் நட்புரிமை பூண்டான் டில்லி பாதுஷாவான முகம்மது ஷா.

பாஜி ராவ் காலமானதும் அவன் மைந்தன் பாலாஜி பாஜி ராவ் முதல் மந்திரியாக வந்தான். அப்பொழுது அவனுக்கு வயது பத்தொன்பதே. ஆயினும் அரசை நடத்துவதற்குரிய ஆண்மையும் திண்மையும் தகுதியும் திறமையும் அவனிடம் நிரம்பியிருந்தன. அவன் காலத்தில் மகாராஷ்டிரரின் கீர்த்திப் பிரதாபம் நான்கு திக்கிலும் பரவிற்று. இந்தியாவின் பெரும்பாகத்தில் மகாராஷ்டிரரின் செல்வாக்கே ஓங்கி நின்றது. டில்லியரசும் மனத்துடே மகாராஷ்டிரருக்கு அஞ்சிக் கிடந்தது.

வடக்கே இமயம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள பிரதேசங்கள் எல்லாம் ஒன்று மகாராஷ்டிரரின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும்; அல்லது நாலிலொரு பங்கு அவர்களுக்கு அரசிறை (சௌத்) செலுத்தி அடங்கி வாழ்ந்துவரும். மகாராஷ்டிரரின் பெருமிதமான நிலை கண்டதும், டில்லிமா நகரிலே முன்போல் இந்து ராஜ்யம் ஏற்பட்டுவிடும் என்றே பலரும் எண்ணியிருந்தனர். அந்நிலை கண்டு, வடஇந்தியாவிலுள்ள முகம்மதியப் பெருமக்கள் சதியாலோசனை செய்யலாயினர். அதன் விளைவாக அஹ்மத் ஷா என்பவன் ஆப்கானிஸ்தானத்திலிருந்து படை கொண்டு இங்கு வந்தான்.

அது கண்டதும் மகாராஷ்டிரர் கொதித்தெழுந்து, டில்லிமா நகரினுள் புகுந்து கோட்டையைக் கைப்பற்றி, நகரைக் கொள்ளையாடி, முகம்மதியரை எதிர்க்கப் புறப்பட்டனர். பாணிபத் எனும் நகரிலே முகம்மதியர் அனைவரும் ஒரு புறம் திரண்டு நிற்க, மற்றொரு புறம் மகாராஷ்டிர சமூகம் முனைந்து நின்றது. மகாராஷ்டிர சேனாபதியான சதாசிவ ராவ் என்பவன் தன் படையினரை அணி வகுத்ததும் போர் தொடங்கவில்லை; முகம்மதியர் திரளுவதையும் தடுக்கவில்லை. இதற்குள் மழை வந்துவிட்டது. உடனே போர் தொடங்கினான் சதாசிவ ராவ். காலை முதல் பகல் வரையில் கடும்போர் நிகழ்ந்தது. அதில்

முகம்மதியரின் முன்னணிகள் முறிந்து போயின. அது கண்டு முகம்மதியர் கவலையும் திகிலுங் கொண்டனர்.

மாலையிலே போர் நடக்கையில், பேஷ்வாவின் மைந்தன் படுகாயமுண்டு கீழே விழுந்தான். சதாசிவ ராவும் கொல்லப்பட்டுப் போனான். அது கண்டு ஏனைய தளகர்த்தர் அறிவழிந்து அஞ்சியோடினர். நாதனற்றுப் போன மகாராஷ்டிரச் சேனை ஓட்டம் பிடிக்கலாயிற்று. முகம்மதியர் வெற்றி வெறி மிகுந்து, இரண்டு லட்சம் மகாராஷ்டிரைக் கொன்று குவித்தனர். அஹ்மத் ஷாவும் அவன் கூட்டாளிகளும் டில்லியில் புகுந்து, கையில் கிடைத்த பொருள்களைச் சுருட்டிக்கொண்டு, ஆப்கானிஸ்தானம் போய்ச் சேர்ந்தனர்.

---

25. இதர பேஷ்வாக்கள்

பாணிபத் யுத்தத்தில் படுதோல்வி யடைந்தாலும் மகாராஷ்டிர சமூகம் மங்கிவிடவில்லை. வாழையடி வாழைபோல் பேஷ்வாக்களும் பிறதலைவர்களும் கிளம்பி, மகாராஷ்டிரரின் ஆதிக்கத்தைப் பாதுகாக்க முயன்றனர். சௌத் வரி வசூலிக்கும் உரிமை மகாராஷ்டிரருக்குக் கிடைத்ததல்லவா? ஆங்காங்கே அந்த வரியைத் தண்ட ஒரு சிலர் நியமனமாயினர். அவ்விதம் நியமனமானவர்களோ பேஷ்வாவான இரண்டாம் பாஜி ராவின் காலத்தில் குட்டியரசர்போ லாயினர்.

அங்ஙனம் அரசானவர்களில் பான்ஸ்லே, ஹோல்கார், ஸிந்தியா, கெயிக்வார் இவர்களையே குறிப்பிட வேண்டும். அவர்களின் ராஜதானி முறையே நாகபுரி, குவாலியர், இந்தூர், பரோடா எனப்படும். தனியரசுக் கொண்டபோதிலும், பேஷ்வாவுக்கு உட்பட்டே அன்னார் நடந்துவந்தனர். நாகபுரியைத் தவிர மற்ற மூன்று இடங்

களிலும் அன்னவரின் பரம்பரையார் இந்நாளிலும் சமஸ்தான மன்னர்களாக விளங்கிவருகின்றனர்.

பாணிபத் யுத்தத்திற்குப் பின்பு பாலாஜியின் குமாரன் மாதவ ராவ் (1761-1772) பேஷ்வா ஆனான். அப்போது அவனுக்கு வயது பதினேழுதான். சிற்றப்பனான ரகூபா ராஜரீகம் நடத்திவர நியமனமானான். இவன் நாளடைவில் மைசூர் சுல்தானான ஹைதர் அலியை எதிர்த்து வென்று, முப்பத்திரண்டு லட்சம் ரூபா காணிக்கை பெற்றான். தெற்கே அங்ஙனம் வெற்றிபெற்ற பின்பு, வடக்கிலும் வெற்றிகொள்ள ஒரு தளகர்த்தனை அனுப்பினான் மாதவ ராவ். ஹோல்காரும் ஸிந்தியாவும் துணையாக நின்றார்கள். வடக்கிலும் மிக்க வெற்றி கிட்டியது. அதன்மேல், ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்த டில்லி பாதுஷா மகாராஷ்டிரரின் நட்பை நாடலானான்.

மாதவராவ் மரித்தபின்பு, அவனது இளைய சோதரன் நாராயண ராவ் பேஷ்வா ஆனான். இவனுக்கும் ரகூபா உதவியாக இருந்து அரசியலைக் கவனித்து வந்தான். சின்னாள் சென்றதும் நாராயண ராவைக் கொன்றுவிட்டுப் பேஷ்வா பதவிபெற முயன்றான் ரகூபா. நானாபட்னாவிஸ் போன்ற மந்திரிகள் அதற்கு ஒப்பவில்லை. அதன்மேல் நாராயண ராவின் பிள்ளையான மாதவ ராவ் நாராயணனையே மகாராஷ்டிரர் பேஷ்வா எனக் கொண்டனர்.

நானா பட்னாவிஸ்

உடனே ரகூபா பம்பாய் நகரஞ்சென்று, அங்கே வர்த்தகம் செய்துகொண்டிருந்த ஆங்கிலேயரின் படைத் துணையை நாடிநின்றான்.

அவ்விதமே ரகூபாவுக்கு உதவிபுரிய ஆங்கிலேயர் ஒரு சேனையுடன் கிளம்பினர். இதன் விளைவாக ஒருபக்கம் ஆங்கிலேயரும் ரகூபாவும், ஒரு பக்கம் மகாராஷ்டிரரும் வைரிகளாக நின்று போர் புரிந்தனர். இதற்கு முதல் மகாராஷ்டிர யுத்தம் (1775ஹு) என்று பெயர். இந்த யுத்தத்திற்குப் பின்பும், மகாராஷ்டிரரிடையே கட்சிப் பிரதிகட்சிகள் இருந்தன. ஒரு கட்சிக்கு நானாபட்னாவிஸ் என்பவன் முதல்வனாக இருந்தான். மற்றொரு கட்சிக்கோ ஹோல்கார் பிரதான புருஷனாக விளங்கினான்.

முதல் மகாராஷ்டிர யுத்தம் தொடர்ந்து நடந்தது. முதலில் ஆங்கிலேயர் தோற்றுப்போயினர். அப்பாலோ ஆங்கிலேயருக்கு வெற்றிகிட்டியது. 1782ஹு யுத்த முடிவில் மாதவராவ் நாராயணனே பேஷ்வா என உறுதியாயிற்று. ரகூபாவுக்கோ ஆண்டு தோறும் மூன்று லட்சம் ரூபா கொடுப்பதாக ஏற்பாடாயிற்று. மாதவராவ் நாராயணன் பேஷ்வாவாக இருக்க, சர்வாதிகாரமும் நானாவே வகித்து வந்தான்.

இரண்டாவது பாஜி ராவ்

மாதவராவ் நாராயணன் மரித்த பின்பு, ரகூபாவின் குமாரன் இரண்டாவது பாஜி ராவ் பேஷ்வா ஆயினான். நானாபட்னாவிஸே அரசியலை நடத்திவந்தனன். வர்த்தகம் புரியவந்த ஆங்கிலேயர் இந்தியாவில் கொஞ்சம் கொஞ்சமாக நாடுகளைச்

சேர்த்துக்கொண்டு வந்தனர். முடிவில் ஆங்கிலேயரே தேசாதிபதிகளாக ஆய்விடுவரோ என்று நாணுவுக்கு அச்சம் உதித்தது. தவிர, ரகூபாவுக்கு உதவியாக அவர்கள் படைகொண்டு வந்தது கண்டும், நாணுவுக்குப் பிடிக்கவில்லை. ஆதலின் ஆங்கிலேயரின்மீது அவன் வெறுப்புக் கொண்டிருந்தான்; மேலும் மகாராஷ்டிரரின் ஆதிக்கத்தை இத் தேசமெங்கும் நிலைநாட்டவும் எண்ணி நின்றான். அங்ஙன மிருக்கையில் மகாராஷ்டிரரின் துரதிருஷ்டவசமாக 1800ஆ அவன் பரகதி போயினன்.

பேஷ்வாவைப் போன்ற செல்வாக்குப் பெறவேண்டுமென்று ஸிந்தியா, ஹோல்கார் இவ்விருவருக்கும் ஆசை உண்டாயிற்று. நாணு இறந்தபின் ஸிந்தியா என்பான் முதன்மை பெற்று, எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொண்டு, பேஷ்வாவைத் தன் கைப்பொம்மைபோல் நடத்திவந்தான். இது கண்டு ஹோல்காருக்குப் பிடிக்கவில்லை. உடனே ஹோல்கார் மேலே சொன்ன பாஜி ராவை நீக்கிவிட்டு, ரகூபாவின் பேரரில் ஒருவனுன அமிருத ராவை பேஷ்வா பதவியில் அமர்த்தினுன்.

அது காரணமாக ஸிந்தியாவுக்கும் ஹோல்காருக்கும் சச்சரவு உண்டாயிற்று. துணைபுரியுமாறு ஆங்கிலேயரை அழைத்தான் ஸிந்தியா. அவ்விதமே ஆங்கிலேயர் படைகொண்டு வந்தனர். உடனே சண்டை மூண்டது. இச்சண்டையே இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம் என்னப்படும். இதன் முடிவாக பாஜி ராவே பேஷ்வா பதவி வகிக்கவேண்டும் என்றும், அமிருத ராவுக்கு வருஷவாரி எட்டு லட்சம் ரூபா கொடுக்கவேண்டுமென்றும், ஆங்கிலேயர் முடிவு செய்தனர்.

மகாராஷ்டிரரின் குடும்பக் கலகங்களில் ஆங்கிலேயர் தலையிடுவது கண்டு, மகாராஷ்டிரரிலே சிலருக்குப் பிடிக்கவில்லை. இந்நிலையில் பேஷ்வா பாஜி ராவ் ஆங்கிலேயருக்கு விரோதமாகச் சதிசெய்து வருவதாக ஆங்கில அதிகாரிகள்

கருதினார்கள். அதனால் அந்த இரண்டாம் பாஜி ராவின் அதிகாரம் ஓங்காதிருக்க ஆங்கிலேயர் முயற்சி செய்தனர். அதுகண்டு மகாராஷ்டிரர் கோபங்கொண்டு எழுந்தனர். ஸிந்தியா, ஹோல்கார் முதலிய அனைவரும் பாஜி ராவுக்குப் பக்கபலமாக நின்றார்கள். அதன் விளைவாக 1817ஆம் மூன்றாவது மகாராஷ்டிர யுத்தம் மூண்டது. அதில் மகாராஷ்டிரர் தோல்வி யுண்டனர்.

உடனே ஆங்கிலேயர் பாஜி ராவின் ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு, அவனுக்கு வருஷவாரியில் எட்டு லட்சம் ரூபா திரவிய சகாயம் கொடுத்து அனுப்பி விட்டனர். பான்ஸ்லே, ஸிந்தியா, ஹோல்கார், கெயிக்வார் இவர்களுடைய ராஜ்யங்கள் அழியாமல் இருந்தன. ஆயினும் அந்த யுத்தத்துக்குப் பின், அவர்களின் வலிமை பெரிதும் குன்றிவிட்டது.

பான்ஸ்லே வமிசத்து நாகபுரி வேந்தன் 1853ஆம் சந்ததி இல்லாமல் இறந்துபோனான். அந்த ராஜ்யத்தை உடனே ஆங்கிலேயர் எடுத்துக்கொண்டனர். கெயிக்வார், ஹோல்கார், ஸிந்தியா ஆகிய மூவரும் ஆங்கிலேயருடன் நட்புக்கொண்டு, அவர்களுக்கு அடங்கி வாழ ஒருப்பட்டனர். ஆதலினால் இன்றும் அம்மூன்று அரசர்களும் முறையே பரோடா, குவாலியர், இந்தூர் இந்த இடங்களில் இருந்து வருகின்றனர். வீர சிவாஜி தோன்றி, அரும்பாடு பட்டு வளர்த்த மகாராஷ்டிர ஸாம்ராஜ்யத்தை இந்தியா வெங்கும் நிலைநாட்ட வேண்டுமென்று பற்பல முயற்சிகள் நடந்தும் அது முடிவிலே இவ்விதம் சிதறுண்டது.

---

26. சீக்கியர்

மொகலாய வல்லரசுக்குக் கடைநாளிலே வைரிகள் ஆனோரில் ஒரு சாரார் சீக்கியர். அம்மக்கள் பஞ்சநதப் பிரதேசத்தில் மிக அதிகம். தற்காலம் இந்தி

யச் சேனையின் திலகம்போல்வாரும் அன்னவரே. சீக்கியர் என்றால் சிஷ்யர் என்று பொருள். அன்னவரின் மதம் சீக்கிய மதம் எனப்படும். அம்மதத்தை முதன் முதல் கண்டவர் குரு நானக் என்பவர்.

முகம்மதிய மதம் பொங்கி எழுந்ததையும், முகம்மதியரில் சிலர் இந்துக்களைத் துன்புறுத்தியதையும் கண்டு நானக் சகிக்கவில்லை. இந்தியாவிலே முகம்மதிய அரசு நிலைநிற்பதை நோக்கியதும், இரு மதத்தின் உயர்ந்த தத்துவங்களைத் தொகுத்துப் புகட்டிச் சமரஸம் உண்டு பண்ணவே அப்பெரியார் சீக்கிய மதத்தை ஸ்தாபித்தார். 'இந்துக்களும் முகம்மதியரும் வணங்கும் தெய்வத்தின் பெயர் வெவ்வேறாயினும் அனைவருக்கும் தெய்வம் ஒன்றே,' என்பது அவர் கொள்கை.

குரு நானக் 1469 ஆல் லாகூருக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். பிறவியிலேயே அவரிடம் தெய்வ பக்தியும், மனித சமுகத்தினிடம் வாஞ்சையும் மிகுந்திருந்தன. ஒரு தினம் அவர் தந்தை இருபது வெள்ளிக்காசு கொடுத்து நல்வழியில் செலவழி என்றார். குரு நானக் அக்காசனைத்தையும் ஏழைகளுக்கு ஈந்து களித்தார். நாளாக ஆக அவரிடம் ஞானம் தலைப்படவே, சமரஸமான சீக்கிய மதத்தை அவர் காணலானார்.

அவர் காலத்திலே பாபர் என்பான் இங்கே மொகலாய வரசை ஏற்படுத்தினான். அப்போது இந்துக்களுக்குப் பற்பல தீமைகள் நேர்ந்தன. அது கண்டு குரு நானக் சகிக்கவில்லை. மக்களின் துன்பத்தைப் போக்காத அரசு நிலைக்குமா என்று அவர் பெரிதும் வருந்திப் பேசினார். குரு நானக் பற்பல இடங்களுக்கும் சென்று, அரிய போதம் புகட்டிவர இந்துக்கள், முகம்மதியர் ஆகிய இரு வகுப்பினரிலும் பலர் அவருக்குச் சீடராயினர்.

அவருக்குப்பின்பு அங்கதர் என்பவர் குருவாக வந்தார். இவருக்கும் பலர் சிஷ்ய ராயினர். இவருக்குப்

பின் வந்த இரு குருமார்களும் சமரஸமே போதித்து வந்தனர். அதனுல் பலர் அப்புதிய மதத்தில் சேர்ந்து சிறக்கலாயினர். ஐந்தாவது குருவாக வந்தவர் அர்ஜுனர் எனப்படுவார். அமிருதஸரஸ் என்னும் நகரிலே சீக்கியருக்குப் பொன் கோயில் கட்டுவித்தவர் இவரே. அந்த ஆலயத்துக்கு இனமாக இடம் தந்தது அக்பர் சக்கரவர்த்தி. தன் செலவில் ஆலயத்தைக் கட்டித் தருவதாக அக்பர் வாக்களித்தான். ஆண்டவனுக்கு உரிய ஆலயம் அவனது பக்தர்களின் பிரயாசையினுல் கிளம்ப வேண்டுமே யல்லாமல் அரசனது தயவினுல் எழும்பக் கூடாது என்ருர் குரு அர்ச்சுனர்.

அக்பருக்குப்பின் அவன் மைந்தன் ஜஹாங்கீர் அரசன் ஆனுன். ஜஹாங்கீரின் மைந்தனுருவன் கலகமாகக் கிளம்பித் தோல்வியுண்டு, ஓடி உழன்ருன். அங்ஙனம் உழலுகையில் கருணை பூத்த அர்ஜுனர் அம்மைந்தனை அன்புடன் வரவேற்று உபசரித்தார். ஜஹாங்கீர் அது கண்டு கோபங்கொண்டு, அவருக்கு லட்சம் ரூபா அபராதம் போட்டான். அதற்கு அவர், ‘என் பணம் ஏழை எளியவர்க்கே உரியது. உனக்குப் பொருள் வேண்டுமாயின், வேண்டுமளவு தருவேன். ஆனுல் அபராதமாக ஒரு காசும் கொடேன். பசியால் வாடிவருவோனுக்கு அன்னமளித்தல் ஒரு குற்றமாமோ?’ என்ருர்.

வேந்தன் அவ்வார்த்தை கேட்டுச் சீறவே, மொகலாயரிடம் குரு அர்ச்சுனர் சிறையாகிப் பற்பல துன்பங்களடைந்து முடிவில் கொலையுண்டார். முன்னிருந்த குருமார்களின் உபதேசங்களையும் இந்து முகம்மதிய மதங்களின் உயர்ந்த வாக்கியங்களையும் தொகுத்து ஆதிக்கிரந்தம் என்று சீக்கியருக்கு வேதநூல் அமைத்துத் தந்தவர் இவரே. சீக்கியரின் ஆலயங்களில் அந்த ஆதிக்கிரந்தம் இன்றும் ஓதப்படும். குரு அர்ச்சுனர் கொலையுண்டமை கண்டு சீக்கியர் கொதித்து நின்றனர்.

அப்போது ஹரிகோவிந்தர் என்பவர் குருவாக வந்தார். இவர் சீக்கிய சேனை யொன்று திரட்டிப் பழிக்குப் பழியாக மொகலாயரை வாட்டலானுர். மொகலாய வீரரில் பலர் உயிர் துறந்தனர். அதன்மேல் ஜஹாங்கீர் இவரைப் பன்னிரண்டு வருஷகாலம் சிறையில் போட்டு வைத்தான். ஷாஜஹான் அரியணையில் அமர்ந்தபொழுது பஞ்சாபிலிருந்த மொகலாய அதிகாரிகளில் சிலர் சீக்கியருக்குத் தொல்லை இழைத்தனர். இரு திறத்தாருக்கும் இடையே பகை முற்றியது. மத வைராக்கியம் மிகுந்த ஔரங்கசீபின் காலத்தில் ஒன்பதாவது குருவாகிய தேஜ் பகதூர் கொல்லப்பட்டுப் போனுர்.

சீக்கியருக்கும் மொகலாயருக்கும் இடையே இன்னும் பகை முற்றியது. இந் நிலையில் தேஜ் பகதூரின் மைந்தனுன குரு கோவிந்தர் என்பவர் பத்தாவது குருவானுர். சீக்கிய மதத்தை மிகவும் பரவச் செய்தவர் இவரே. பெரிய சேனை திரட்டி மொகலாயரைப் பழி வாங்க எண்ணினுர். மொகலாய ராஜ்யத்தைச் சீர்குலைத்து ஸீக்கிய ராஜ்யமொன்று காணவேண்டு மென்பதும் இவர் அவா. 'ஆருயிரைப் பறிகொடுத்தேனும் மதத்தைப் பரப்பவேண்டும், இதுவே சிறந்த தர்மம், போரில் உயிர் துறப்பின் முத்தி கிட்டும்,' என்பன இவர் போதனைகளாம்.

சிங்கம் போல் பராக்கிரமம் காட்டவேண்டு மென்று சீக்கியருக்கு இவர் சிங் அதாவது சிம்மம் என்று பட்டப் பெயர் சூட்டினுர்; சீக்கியரின் கூட்டத்திற்குக் கால்ஸா என்று பெயரிட்டார். இவர் காலத்தில் சீக்கியர் வீறு கொண்டெழுந்து, வெகு வீரம் விளைத்தனர். சீக்கியருக்கும் மொகலாயருக்கும் பற்பல சண்டைகள் நேர்ந்தன. முடிவில் சீக்கியர் பல கோட்டை கொத்தளங்கள் கட்டி, ஓயாப் போர் புரிந்து, பஞ்சாபில் தனியரசும் கொண்டனர்.

---

27. இந்தியாவும் ஐரோப்பாவும்

ஆதிமுதல் ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கு மிடையே மிகுந்த வியாபாரம் நடந்து வந்தது. நம் இந்தியாவிலிருந்து வாசனைத் திரவியங்கள், நீலச் சாயம், பருத்தியாடை, யானைத்தந்தம், தோகைமயில், நன்முத்து, செம்பொன் இவை ஏராளமாகப் போகும். ஐரோப்பிய நாடுகளிலிருந்தோ கண்ணாடி, தாமிரம், சாராயம், பாதரசம் முதலியன நம் தேசத்துக்கு வந்துசேரும். அவ்வியாபாரம் மூன்று மார்க்கங்களின் வழியே முன்பு நடைபெற்று வந்தது.

வர்த்தகர் நமது தேசத்தின் வடமேற்கிலுள்ள கணவாய்களைக் கடந்து, ஆப்கானிஸ்தானம், துருக்கிஸ்தானம் என்னும் நாடுகளின் வழியே காஸ்பியன் கடல்கரை சேர்வர் ; அங்கிருந்து கருங்கடல் வழியே கான்ஸ்டாண்டிநோபிள் எனும் நகரை யடைந்து, ஆங்கிருந்து வேனிஸ், ஜினிவா முதலிய நகரங்களுக்குக் கொண்டு செல்வர். இது ஒரு மார்க்கமாகும்.

நம் இந்தியாவின் மேலைக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களினின்று புறப்பட்டு, அரபிக் கடலைக் கடந்து, பாரசிக வளைகுடாவினுட் புகுந்து, மெஸபொடேமியா மார்க்கமாக ஸிரியா எனும் நாட்டின் துறைமுகங்கள் சேர்வர். பின்பு அங்கிருந்து மத்தியதரைக் கடலின் வழியே பற்பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சரக்குகளைக் கொண்டு செல்லுவது மற்றொரு மார்க்கமாம்.

இனி, மேலைக் கடல்கரையிலுள்ள துறைமுகங்களினின்று பயணமாகி, நேர்மேற்கேயுள்ள ஏடன் துறைமுக வழியே செங்கடலில் புகுந்து, எகிப்து நாடு சேர்ந்து, ஆங்குள்ள அலெக்ஸாண்டிரியா நகரினின்று மத்தியதரைக்

கடலைத் தாண்டி, வேனிஸ், ஜினீவா நகரங்கள் செல்வது மூன்றாவது மார்க்கமாம். மத்தியதரைக் கடலை யடுத்திருந்த நகரங்கள் அப்பொழுது வர்த்தகத்தில் பெருத்து, செல்வத்தில் சிறந்து, பிரசித்திபெற்று விளங்கின.

அம்மூன்று மார்க்கங்களின் வழியே வியாபாரம் நடக்கையில், ஐரோப்பாவிலே ரோமரும், ஆசியாவிலே அரபியரும் தரகராய் நின்று வெகு திரவியம் சேர்த்து வந்தனர். அம்மார்க்கங்களிலுள்ள தேசங்களில் அரபியர் அரசுகொண்டு செல்வாக்கடைந்திருந்ததனால், அரபியரின் மூலமாகவே அச்சரக்குகள் ஐரோப்பா போகவேண்டியிருந்தது. நாளடைவில் இஸ்லாமியரான அரபியருக்கும் கிறிஸ்தவரான ஐரோப்பியருக்கும் பல காரணங்களால் நீண்டகாலம் கடுஞ்சண்டை நடந்துவந்தது.

அச்சண்டை காரணமாக, ஐரோப்பாவிலே இந்தியச் சரக்குகள் முன்போல் கிடைக்காமல் போயின. கிடைத்தாலும் கொள்ளை விலை கொடுத்து வாங்க நேர்ந்தது. ஆதலின் நேரே கப்பல் மூலம் இந்தியாவுக்குச் செல்லும் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஐரோப்பிய நாடுகளிலே ஒரு துடிப்பு மிகுந்தது. அதனால் வர்த்தகங் கருதியும் திரவியந் திரட்ட நினைத்தும் ஐரோப்பிய நாட்டினர் பலர் இந்தியாவுக்கு வரலாயினர். அவ்விதம் வந்தவர்களில் போர்த்துகேசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், இங்கிலீஷ்காரர் இவர்கள் முக்கியமாவர்.

---

28. போர்த்துகேசியர்

வர்த்தக நிமித்தம் முதன் முதலாக இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர் போர்த்துகேசியரே. கடல்மூலம் இந்தியாவுக்குப் போகும் பாதையைக் கண்டுபிடிக்குமாறு போர்த்துகல் தேச அரசன் 1549ஆ கோலம்பஸ் என்ப

வனை அனுப்பினுன். இந்தியாவுக்கு வழிகாணப் புறப் பட்டவன் அமெரிக்காவைக் கண்டுபிடித்துத் திரும்பினுன்.

அப்பால் ஐந்து வருஷமானதும் போர்த்துகல் வாசியான வாஸ்கோ டி காமா என்பவன் புறப்பட்டு, ஆபிரிக்கா கண்டத்தைச் சுற்றிக்கொண்டு, இந்தியாவின் மேலைக்கரையிலுள்ள கள்ளிக்கோட்டை வந்துசேர்ந்தான். உடனே போர்த்துகேசியர் கள்ளிக்கோட்டையில் தங்கி, வர்த்தகம் புரிய முனைந்தனர். அதற்கு நெடுங்காலம் முன்னதாகவே அந்நகரில் தங்கி வியாபாரம் நடத்திவந்த அரபியர் அதற்கு இடந்தராது முட்டுக்கட்டை போட்டனர்.

ஆதலினுல் அரபியருக்கும் போர்த்துகேசியருக்கும் கடுஞ்சண்டைமூண்டது. அப்போது கப்பல் சண்டையில் கைதேர்ந்திருந்த போர்த்துகேசியர் வெற்றியடைந்தனர். அதனுல் அரபியரின் வியாபாரம் மங்கவே, போர்த்துகேசியர் ஆதிக்கங் கொண்டு, கொச்சி, கண்ணனூர், கள்ளிக்கோட்டை முதலிய இடங்களில் பண்டசாலை கட்டிக் கொண்டனர். நாளடைவில் அவர்களின் வாணிபம் அமோகமாகப் பெருகலாயிற்று.

வியாபாரம் பெருகவே, பண்டசாலைகள் உள்ள இடங்களில் கோட்டை கொத்தளங்களும் போர்த்துகேசியர் எழுப்பினர்; காவல்புரியப் போர்வீரரையும் நியமித்துக்கொண்டனர். வியாபாரக் கப்பல்களைப் பாதுகாக்கச் சண்டைக் கப்பல்களும் அவர்களிடம் பெருகின. நாளடைவிலே மேலைக் கடற்கரையில் ஸுரத், பம்பாய், கோவா, டையு, தாமன் இந்த இடங்களிலும் கிழக்குக் கடற்கரையில் வடக்கே ஹுக்ளி நகரிலும், தெற்கே மயிலாப்பூரிலும் அவர்களின் பண்டசாலைகள் தோன்றின.

பின்னர், இலங்கைத் தீவு, மலாய்த் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களிலும் அவர்களுக்குப் பண்டசாலைகள் பல ஏற்பட்டன. இந்தியாவுக்கு வந்த ஒரு நூறு வருஷத்துக்குள்ளே கீழ்த்தேசங்களிலெல்லாம்

அவர்களின் வியாபாரமே ஓங்கி நின்றது. கடலோரத்திலே பன்னீராயிரம் மைல்தூரம் அவர்களின் கப்பல்களே சஞ்சரித்தன. அவர்களின் உத்தரவில்லாமல் மற்றையோரின் கப்பல்கள் கீழ்த்தேசங்களில் வரமுடியவில்லை. ஆதலினால் கீழ்த்தேசங்களிலே கடலரசராகவும் வியாபார வேந்தராகவும் அவர்களே விளங்கி வந்தார்கள்.

மலாய்த் தீவுகள் அவர்களின் குடியேற்ற நாடுபோலாயிற்று. இந்தியாவையும் அவ்விதமே கொள்ள அன்னவர் ஆசைகொண்டனர். கீழ்த்தேசங்களில் அவர்களுக்குச் சொந்தமான இடங்களைக் கட்டியாள ஒரு கவர்னரும் ஏற்பட்டார். விஜயநகர வேந்தன், மலையாள மன்னவன் ஆகிய இவர்களின் சபையில் அவர்களின் தூதர் பிரசன்னமாயிருந்து பெருமைபெற்று வந்தனர்.

வியாபாரத்துடன் அவர்கள் நில்லாமல் இந்திய மக்களை மதமாற்றவும் அவர்கள் முயன்றார்கள். அவர்களின் அதிகாரிகளும் சேவகரும் இந்தியரிடம் அன்பும் அபிமானமும் கொள்ளாமல், மிடுக்கும் பதட்டமும் காட்டி வந்தனர். இங்கிலையில் அவர்களுக்குப் போட்டியாக மற்றோர் ஐரோப்பியக் கூட்டத்தார் இங்கே வரலாயினர்.

---

29. டச்சுக்காரரர்

இந்தியாவிலே போர்த்துகேசியர் மிகுந்த திரவியம் திரட்டுவதைக் கேள்வியுற்று, ஹாலண்டு தேசத்தின் வாசிகளான டச்சுக்காரர் என்போருக்கு ஆவல் பிறந்தது. அப்போது டச்சுக்காரரிடம் உயர்ந்த கப்பல்களும் தேர்ந்த கப்பல் படையும் இருந்தன. அவர்கள் நேரே இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாய் வந்தார்கள்.

அவர்களின் வருகை கண்டு, போர்த்துகேசியருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அதனால், இருவருக்கும் பகை

மூண்டு சண்டையும் நடந்தது. அச்சண்டையிலே போர்த்துகேசியர் தோற்றுப் போகவே, மலாய்த் தீவுகள் டச்சுக்காரரின் வசமாயின. அத் தீவுகளிலே நிலைத்தபிறகு இந்தியாவிலும் டச்சுக்காரர் தோன்றி வியாபாரஞ்செய்யத் தலைப்பட்டனர். போர்த்துகேசியரின் வியாபாரம் ஒடுங்க ஒடுங்க, டச்சுக்காரரின் வியாபாரம் வரவரப் பெருகி வந்தது; தவிர வாசனைத் திரவியங்களின் வர்த்தகம் முழுதும் டச்சுக்காரரின் வசமாகி ஒரு நூறு வருஷகாலம் அவர்களின் கைக்குள்ளேயே இருந்து வந்தது.

கொச்சி, இலங்கைத் தீவு, மலாய்த் தீவுகள் இவற்றில் டச்சுக்காரருக்குப் பற்பல பண்டசாலைகள் ஏற்பட்டன. கொஞ்சம் கொஞ்சமாகப் போர்த்துகேசியரின் வியாபாரத்தை அவர்கள் இங்கும் ஒடுக்கிக்கொண்டே வந்தனர். இந்தியாவிலே அதற்கு முன்னம் முப்பது நகரங்கள் போர்த்துகேசியருக்குச் சொந்தமாயிருந்தும் இப்போது உள்ளவை மூன்றேயாம். அவை கோவா, டையு, தாமன் என்பன. இந்தியாவில் போர்த்துகேசியர் கொண்ட மண்ணாசையும் கனவாக முடிந்தது. டச்சுக்காரருக்கோ இந்தியாவிலே தற்போது ஒரு குழி நிலங்கூடக் கிடையாது.

டச்சுக்காரரும் போர்த்துகேசியரும் இந்தியாவுடன் வியாபாரஞ்செய்து ஏராளமான லாபம் சம்பாதிப்பது கண்டு, பிரான்ஸ் தேசவாசிகளான பிரஞ்சுக்காரரும் இங்கே வரலாயினர்.

---

30. பிரஞ்சுக்காரர்

பிரான்ஸ் தேசத்திலே பிரஞ்சுக்காரர் சிலர் சேர்ந்து 1664-ஆம் பிரஞ்சு கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம் என்று ஒரு சங்கம் கொண்டனர். உடனே அவர்கள் இந்தியாவுக்கு வந்து, முதலில் சூரத்திலும், பின்பு மசூலிப்பட்டணத்திலும் பண்டசாலை கொண்டார்கள்.

அப்போது டச்சுக்காரரோ இலங்கையில் பல பண்ட சாலைகளும் அவற்றின் பாதுகாவலுக்கான கோட்டை களும் கொண்டு, வர்த்தகத்திலே வெகு சிறப்புற்றிருந் தனர். அவற்றைக் கைப்பற்றிக் கொள்ளவும், அங்கே வியாபாரஞ் செய்யவும், பிரஞ்சுக்காரருக்கு ஆர்வம் பிறந் தது. அதற்காகச் சண்டை நடக்க, அதில் பிரஞ்சுக்காரர் தோற்றுப் போயினர்.

பின்பு பிரஞ்சுக்காரர் சென்னப்பட்டணம் சேர்ந்து, போர்த்துகேசியரின் வசத்திலிருந்த ஸான்தோம் எனும் தலத்தைப் பிடுங்கிக் கொண்டனர்; அப்பால் 1674-ஆ புதுச்சேரி நகரைப் பெற்று, அங்கே பண்டசாலை அமைத் துக்கொண்டனர். அது சமயம் பழவேற்காடு, நாகப்பட் டணம், கொச்சி முதலிய இடங்களில் மேம்பாட்டுடன் விளங்கிய டச்சுக்காரரோ அவர்களை மசூலிப்பட்டணம், ஸான்தோம் ஆகிய இரண்டிடங்களிலிருந்து விரட்டி விட்ட னர். அதனால் புதுச்சேரியையே பிரஞ்சுக்காரர் முக்கிய ஸ்தலமாகக் கொண்டு, அதனைப் பல வகையிலும் பலப்படுத்திக்கொள்ள நேர்ந்தது. நாளடைவில், கர்நாடகம் முழுதிலும் வியாபாரஞ் செய்யும் உரிமை அவர்களுக்குக் கிடைக்கலாயிற்று.

டூப்ளே

1688-ஆ பிரஞ்சுக்காரர் வங்காளத்திலே சந்திரநாகூர் எனும் நகரை யடைந்தனர். 1739-ஆ காரைக்கால் துறைமுகமும் அவர்களுக்குக் கிட்டியது. 1742-ஆ டூப்ளே என்பவர் புதுச்சேரியின் தலைவராக வந்தார். இவர் காலத்தில் பிரஞ்சுக்காரர் மிக உன்

னத நிலைமை அடைந்தனர். அவர்களின் வியாபாரம், இலாபம், செல்வாக்கு எல்லாம் பெருகி நின்றன. வியாபாரஞ் செய்வதுடன் நில்லாமல், இந்தியாவில் நாடு பிடிக்கவும் இவர் ஆசை கொண்டார்; இங்கே அப்போது வர்த்தகம் புரிய வந்திருந்த ஆங்கிலேயரை விரட்டிவிடவும் பற்பல முயற்சி செய்தார். அதன் விளைவாக ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டைகள் நடந்துவந்தன.

---

31. ஆங்கில கிழிந்திய வர்த்தகச் சங்கம்

இந்தியாவுக்கு வந்து, வர்த்தகம் புரிந்து, திரவியம் திரட்ட வேண்டுமென்று ஆங்கிலேயருக்கும் ஆவல் பிறந்தது. பிறக்கவே அவர்களில் நூறுபேர் ஒன்று சேர்ந்து, கிழிந்தியா கம்பனி என்று ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்போது எலிஜபத் ராணி இங்கிலாந்தை ஆண்டு வந்தாள். இந்தியாவுடனும் அதற்கு அருகிலுள்ள நாடுகளுடனும் வாணிபஞ் செய்யும் உரிமை தங்களுக்கு மட்டுமே இருக்கவேண்டுமென அச்சங்கத்தார் வேண்டிக்கொண்டனர்.

எலிஜபத் ராணியும் 1600ஸு அவ்வாறே சாஸனமொன்று அளித்தனள். உடனே அச் சங்கத்தார் கிழிந்தியத் தீவுகளில் வர்த்தகம் புரியத் தொடங்கினர். டச்சுக்காரர் அதுகண்டு சகியாமல், அவர்களுக்கு இடையூறு பலவும செய்தனர். அதனல் ஆங்கில வர்த்தகச் சங்கத்தாருக்கு நஷ்டமும் கஷ்டமும் உண்டாயின. அதன்மேல் அச் சங்கத்தார் கிழிந்தியத் தீவுகளை விடுத்து, இந்தியாவின் மேலைக் கரையிலுள்ள ஸூரத் நகரில் ஒரு பண்டசாலை கட்டிக்கொண்டு வியாபாரஞ் செய்யலாயினர்.

ஆங்கிலேயரின் வர்த்தகம் பெருகுவதைக் கண்டு, போர்த்துகல்காரருக்கும் பொறாமை மிகுந்தது. மிகவே

அவர்களின் கப்பல்களைத் தாக்கி, வர்த்தகத்தை அழிக்கத் தொடங்கினர் போர்த்துகல்காரர். அச்சண்டையில் போர்த்துகல்காரர் தோற்றுப் போகவே, ஆங்கிலேயரின் வியாபாரம் வலுக்கலாயிற்று. இங்கிலாந்திலுள்ள இதர வியாபாரிகளும் அஃதறிந்து, பொருமை மிகுந்து, இங்கே வியாபாரஞ் செய்ய வந்தார்கள். அதனுல் ஆங்கிலேயருக்குள்ளேயே போட்டியும் சச்சரவும் கிளம்பின. கீழிந்திய வர்த்தகச் சங்கத்தார் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

பிறகு அந்த ஆங்கிலேயர் அனைவரும் ஒரு மனங்கொண்டு, அச்சங்கத்தில் சேர்ந்து கொள்ளவே, கீழிந்தியா கம்பனி, ஐக்கிய கீழிந்தியா கம்பனி என்ருயிற்று. பின்பு சென்னை, பம்பாய், கல்கத்தா இந்த இடங்களில் அவர்களின் பண்டசாலைகள் கிளம்பின.

சென்னை: விஜயநகர ஸாம்ராஜ்யம் சிதறியபின்பு அந்த ராஜவமிசத்தைச் சேர்ந்த ஒருவன் சந்திரகிரியில் அமர்ந்து அரசாண்டு வந்தான். 1639-ல் அவனிடமிருந்து ஆங்கில வர்த்தகச் சங்கத்தார் சென்னையை விலைக்கு வாங்கினர். அப்போது சென்னை ஒரு சிறு குப்பமாகவே இருந்தது. அங்கே ஆங்கிலேயர் ஒரு பண்டசாலை கட்டிக்கொண்டனர். அப்போது கர்நாடகத்தில் நிலையான அரசு இல்லை. குழப்பமும் சச்சரவும் மலிந்து கிடந்தன. திடீரென்று ஆபத்து நேருமெனக் கண்ட ஆங்கிலேயர் அச்சென்னையிலே ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை என ஒரு கோட்டையும் கட்டிக்கொண்டனர். அக்கோட்டைக்கு வெளியே இந்தியர் பலர் வர்த்தக நிமித்தம் வந்து குடியேறினர். அப்போது இந்தியர் வசித்த இடத்திற்கு பிளாக் டவுன் என்று பெயர் ஏற்பட்டது. இப்போது அதனை ஜார்ஜ் டவுன் என்பர்.

பம்பாய்: அந்நாளில் பமபாய் நகரம் போர்த்துகல்காரருக்குச் சொந்தமாக இருந்தது. 1660-ல் ஆங்கில அரசனுன இரண்டாம் சார்லஸ், போர்த்துகல் தேச ராஜ

குமாரியை மணந்து கொண்டான். அப்போது சீதன மாக அந்த நகரம் அவனுக்குக் கிடைத்தது. ஆறு வருஷ மானதும் அந்நகரை ஆங்கில வர்த்தகச் சங்கத்தாருக்கு அவன் விற்றுவிட்டான். உடனே பம்பாயிலும் அவ்வர்த் தகச்சங்கத்தார் ஒரு பண்டசாலை வைத்துக்கொண்டனர். வர்த்தகங்கருதி இந்தியரில் பலர் பம்பாயில் குடியேறி னர். நாளடைவில் அது பெரிய நகரமாயிற்று. அப்பால் வர்த்தகச் சங்கத்தார் சூரத் நகரிலிருந்த பண்டசாலையை அந்நகருக்கு மாற்றிக்கொண்டனர்.

கல்கத்தா : ஷாஜஹான் சக்கரவர்த்தி இந்தியாவை ஆண்டுவந்தபொழுது ஒரு சமயம் அவன் மகளுக்குக் கொடிய நோயொன்று கண்டது. அப்போது சூரத் நகரி லிருந்து ஓர் ஆங்கில வைத்தியரை அவன் வரவழைத்தான். அவ்வைத்தியன் வந்து சிகிச்சை செய்யவே, சக்கரவர்த்தி யின் குமாரி குணமடைந்தாள். ஷாஜஹான் சந்தோஷ மடைந்து, அவ்வைத்தியனுக்கு வெகுமதியளிக்க விரும்பி னான். வைத்தியனோ தேசாபிமானமே மிகுந்து, வங்கா ளத்திலே தனது இனத்தார் வர்த்தகம்புரிய அனுமதி வேண்டினான். அவ்விதமே அனுமதி கிடைத்தது. அது முதல் ஆங்கில வர்த்தகர் வங்காளத்தில் வாணிபஞ் செய்யத் தொடங்கினர்.

சிறிதுகாலஞ் சென்றதும், வங்காள நவாபுக்கும் ஆங்கில வர்த்தகருக்கும் பிணக்கு ஏற்பட்டது. மொக லாயரின் கப்பல்களில் சிலவற்றை ஆங்கிலேயர் கொளுத்தி விட்டனர். அதுகேட்டதும் மொகலாய சக்கரவர்த்தி யான ஔரங்கசீப் கோபங்கொண்டு, வங்காளத்திலே ஆங் கிலேயர் கொண்டிருந்த பண்டசாலைகளை யெல்லாம் தாக் கிப் பிடிக்கும்படி ஆணையிட்டான். ஆங்கிலேயர் வேறு வகையில்லாமல் சமாதானம் வேண்டினர். ஔரங்கசீப் பெரியமனது கொண்டு, முன்போல் வர்த்தகஞ் செய்து வருமாறு அனுமதி தந்தான்.

ஆங்கிலேயர் நாளடைவில் கங்கையின் முகத்துவாரத்திலே மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கி, அங்கே ஒரு



இந்தியாவில் ஐரோப்பிய வர்த்தக ஸ்தலங்கள்

நகரம் கட்டிக்கொண்டனர். அந் நகரமே காளிகட்டம் எனப்படும். அதனை ஆங்கிலத்தில் கல்கத்தா என்பர்.

டில்லி பாதுஷாவின் உத்தரவைக் கொண்டு, அங்கே போர்ட் வில்லியம் என்னும் கோட்டை யொன்றும் நிர்மாணித்துக் கொண்டார்கள். நாளடைவில் கல்கத்தா பெரிய நகரமாயிற்று.

—

32. ஆங்கில - பிரஞ்சு வியாபாரப் போட்டி

இந்தியாவிலே ஆங்கிலேயரின் வர்த்தகப் பெருக்கினைக் கண்டு மிக்க அழுக்காறு கொண்ட டச்சுக்காரரும் போர்த்துகல்காரரும் தலைசாய்ந்துபோயினர். பின்பு, ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் வியாபாரத்திலே கடும் போட்டி மூண்டது.

அங்கிலேயில் ஐரோப்பாவிலே ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் 1744௵ சண்டை தொடங்கியது. உடனே இந்தியாவிலும் அவ்விரு ஜாதியாரும் தமக்குள்ளே சண்டைக்கு ஆயத்தமாயினர். 1746௵ லாபோர்டானே எனும் பிரஞ்சு வீரன் ஒரு கப்பல் படையுடன் டூப்ளேக்கு உதவி செய்ய இங்கு வந்தான்.

உடனே பிரஞ்சுக்காரர் சென்னை நகரின்மீது பாய்ந்து அதனைப் பிடித்துக் கொண்டனர். அப்போது சென்னைக் கவர்னரும் மற்றும் பல ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரிடம் சிறைப்பட்டனர். அவர்களில் கிளைவ் என்பான் ஒருவன். அவன் முகம்மதியனைப்போல் வேடம் பூண்டு, சில சகாக்களுடன் தந்திரமாகத் தப்பி, கூடலூரிலுள்ள ஸெயிண்ட் டேவிட் கோட்டை சேர்ந்தான்.

அப்போது கர்நாடகத்திலே அன்வருதீன் என்பவன் ஆற்காட் நவாபாக இருந்தான். ஆங்கில வர்த்தகர் அந்நவாபிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். கொள்ளவே, சென்னையை ஆங்கிலேயருக்குக் கொடுத்து விடும்படி அவன் பிரஞ்சுக்காரருக்கு உத்தரவிட்டான்.

டூப்ளே அதனை மதிக்கவில்லை. அதன்மேல் நவாப் தன் குமாரரினிடம் ஒரு சேனையைக் கொடுத்தனுப்பினான். அச்சேனை சென்னையிலுள்ள மயிலாப்பூருக்கு அருகே பிரஞ்சுக்காரரிடம் தோல்வி கொண்டது. ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் நடந்த முதல் சண்டை இது.

அவ் வெற்றியுடன் டூப்ளே நிற்கவில்லை; கூடலூரிலே ஆங்கிலேயருக்குச் சொந்தமான ஸெயிண்ட் டேவிட் கோட்டையையும் பிடிக்க முயன்றான். பிரான்ஸிலிருந்து கப்பல் படையுடன் வந்த லாபோர்டானே ஆங்கிலேயரிடமிருந்து கைக்கூலி வாங்கிக் கொண்டு, ஊருக்குப் போய்விட்டான். என்றாலும் தனியே நின்று அக் கோட்டையைக் கைப்பற்ற முயன்றான் டூப்ளே. இதற்குள் ஆங்கிலேயருக்கு இங்கிலாந்திலிருந்து ஒரு துணைப்படை வந்ததனால், டூப்ளேயின் முயற்சி கைகூடவில்லை.

இனி எட்டிக்குப் போட்டியாக, ஆங்கிலேயரோ பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான புதுச்சேரியைப் பிடித்துக்கொள்ள முயற்சி செய்தனர். டூப்ளேயின் பெருவீரமும் மதிவன்மையும் ஓங்கி நிற்கவே, ஆங்கிலேயரின் முயற்சி பலிக்கவில்லை. இதற்கிடையில், ஐரோப்பாவிலே அவ்விரு திறத்தாருக்கும் சமாதானம் உண்டாயிற்று. உடனே இந்தியாவிலும் அவர்கள் சமரஸம் கொண்டனர். இதன் பலனாக ஆங்கிலேயர் மீண்டும் சென்னையை அடைந்தனர்.

---

33. கர்நாடகத்தில் குழப்பம்

இந்தியாவிலே 1784-ஆம் மகத்தான பல சம்பவங்கள் ஏற்பட்டன. டில்லி பாதுஷாவாக இருந்த முகம்மது ஷா இறந்து போனான்; இந்தியாவிலே ஏக சக்ராதிபத்தியம் கொள்ளக் கருதிய மகாராஷ்டிரரின் மன்னவ

ஞன ஸாஹு சதாரா நகரில் காலகதியானுன்; டில்லி மொகலாய வரசின் அவலங்கண்டு தட்சணத்தின் பிரதி நிதியாக விருந்து அப்பால் ஹைதராபாத்தில் தனியரசு கொண்ட நிஜாம் உயிர் நீத்தான்.

தட்சணத்திலே நிஜாம் தனியரசு கொண்டதும், தென்னிந்தியாவின் மேலதிகாரியான கர்நாடக நவாப் அந்த நிஜாமுக்கு உட்பட்டு நடக்கலானுன். நிஜாம் இறந்தவுடனே அவனது இரண்டாவது குமாரன் நாஸர் ஜங் என்பவன் பட்டத்துக்கு வந்தான். இது கண்டு, நிஜாமின் பேரன் முஸபர் ஜங் என்பான் தானே பட்டத் திற்கு உரியவன் என்று கலகஞ் செய்யலானுன்.

நிஜாமின் காலத்தில் கர்நாடக நவாபாக ஆற்காட் டில் விளங்கியவன் அன்வருதீன். நிஜாம் மரித்துவிடவே அன்வருதீன் துணையிழந்து நிற்க நேர்ந்தது. அப்போது பழைய கர்நாடக வமிசத்தைச் சேர்ந்த சந்தா சாகிப் என்பவன் கர்நாடக நவாப் பதவி தனக்கே உரியதென வாதாடினுன். இவ்விதம் நிஜாமின் பதவிக்கும் கர்நாடக நவாபின் பதவிக்கும் போட்டி ஏற்படலாயிற்று.

முஸபர் ஜங்கும் சந்தா சாகிபும் சேர்ந்துகொண்டு பிரஞ்சுக்காரரின் உதவியை நாடினர். தென்னிந்தியாவில் சர்வாதிகாரம் கொள்ளக் காத்திருந்த டூப்ளே அவ்விரு வருக்கும் துணை போக முற்பட்டான். முஸபர் ஜங்கை நிஜாமாகவும், சந்தா சாகிபை நவாபாகவும் நியமித்துவிட் டால், தன் எண்ணம் எளிதில் கைகூடும் என்பதே டூப்ளேயின் நினைப்பாகும்.

முஸபர் ஜங்கும் சந்தா சாகிபும் ஒரு பெரும் படை யுடன் சென்று, அன்வருதீனை எதிர்த்தனர். இரு திறத் துச் சேனைகளும் ஆம்பூரிலே சந்தித்துச் சண்டை யிட் டன. அதில் அன்வருதீன் சேனை முறிபட்டது; அன் வருதீனும் படுகளத்தில் மாண்டுபோனுன். உடனே அவன் மைந்தன் முகம்மதலி அச்சங்கொண்டு, திருச்சி

ளுப்பள்ளிக்கு ஓடி ஒளிந்து கொண்டான். அப்பொழுது சந்தா சாகிப் ஆற்காட்டிலே கர்நாடக நவாபாகச் சிம்மாசனம் ஏறினன். நவாபுக்குத் துணையாக அங்கே சின்னுள் தங்கியிருந்தான் முஸபர் ஜங்.

பகைவரின் வெற்றி கேட்ட நாஸர் ஜங் ஆங்கிலேயரின் துணைகொண்டு, ஆற்காட்டின்மீது படையெடுத்துச் சென்ருன். உடனே முஸபர் ஜங்குக்குத் துணையாக டூப்ளே ஒரு சேனையை அனுப்பலானுன். அனுப்பியும் நாஸர் ஜங்கிடம் முஸபர் ஜங் சிறைப்பட நேர்ந்தது. அதன்மேல் சந்தா சாகிப் பயங்கொண்டு, புதுச்சேரிக்குச் சென்று, டூப்ளேயிடம் சரண் புகுந்தான். சூழ்ச்சியில் வல்ல டூப்ளே நாஸர் ஜங்கின் சேனுவீரரில் சிலரைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டனன்.

அச்சமயம் புஸ்ஸி என்னும் பிரஞ்சு வீரன் ஒரு படையுடன் சென்று, செஞ்சிக் கோட்டையை வசஞ் செய்து கொண்டான். புஸ்ஸியை நாஸர் ஜங் எதிர்த்துப் போர்புரிய முயன்றனன். அதில் நாஸர் ஜங் உயிரிழக்க நேர்ந்தது. உடனே முஸபர் ஜங்கை நிஜாமாக்கினுன் டூப்ளே. புதிய நிஜாம் புதுச்சேரியிலிருந்து, ஹைதராபாத்துக்குப் போகையில், வழியிலே வஞ்சனையால் கொலையுண்டு போனுன்.

உடனே புஸ்ஸி என்பான் நாஸர் ஜங்கின் சோதரனுன ஸலபத் ஜங் என்பானை நிஜாமாக்கினுன். இதற்கு ஈடாக மசூலிப்பட்டணம் பிரஞ்சுக்காரருக்குக் கிடைத்தது; மேலும் கஞ்சம் முதல் குண்டூர் வரை வியாபித்துள்ள வட சர்க்கார் எனும் பிரதேசமும் கிட்டியது; தவிர, கர்நாடகத்தின் கவர்னராயிருக்கும் பெருமையும் டூப்ளேக்கு வாய்த்தது. அதனுல் தென்னிந்தியா வெங்கும் பிரஞ்சுக்காரருக்கு அந்தஸ்தும் ஆதிக்கமும் பெருகலாயின.

ஆம்பூர்ச் சண்டையில் அன்வருதீன் மாண்டுபோக, அவன் மைந்தன் முகம்மதலி திருச்சிக்கு ஓடினுனல்லவா?

பிரஞ்சுக்காரரின் உதவிகொண்டு அம் முகம்மதலியை அங்கே முற்றுகையிட்டான் சந்தா சாகிபு. முகம்மதலியும் அவனுக்குத் துணையாக வந்த ஆங்கிலேயரும் கோட்டைக் குள்ளே சிக்கிக்கொண்டார்கள். பிரஞ்சுக்காரரை எதிர்த்து வெற்றிபெற முடியாதெனக் கண்ட முகம்மதலி அவர்களு டன் சமாதானங்கொள்ள எண்ணினன்.

முகம்மதலி நினைத்த வண்ணம் காரியம் நடந்து விட் டால், இங்கே ஆங்கில வர்த்தகரின் நிலைமை படுமோச மாகிவிடும். யாது செய்வதென ஆங்கிலேயர் திகைத்தனர்.

---

34. கிளைவின் எழுச்சி

திருச்சிக் கோட்டைக்குள் திகைத்துக் கிடந்த முகம்ம தலிக்கு உதவிபுரியின், பிரஞ்சுக்காரரை ஆங்கிலே யர் மிஞ்சிவிடலாம்; நிம்மதியாக வர்த்தகமும் புரியலாம்; பிரதேசங்களும் இனமாகக் கிடைக்கும் என்று ஆங்கி லேயர் எண்ணி நின்றனர். எனினும் அதற்கான உபாய மும் துணிவும் அவர்களுக்குத் தோன்றவில்லை. அச்சம யம் கிளைவ் சொன்ன யோசனை இது :—

'பிரஞ்சுக்காரரும் சந்தா சாகிபும் திருச்சிக் கோட் டையை முற்றுகையிட்டு நிற்கின்றனர். பிரஞ்சுக்கார ரின் சேனையிலே ஒரு பகுதி திருச்சியிலும், ஒரு பகுதி புதுச்சேரியிலும், மற்றொரு பகுதி ஹைதராபாத்திலும் உள்ளன. இப்படி அவர்கள் சேனை சிதறிக் கிடக்கையில், நவாபின் தலைநகரான ஆறுகாட்டை நாம் துணிந்து தாக்கி னல், சந்தாசாகிப் திருச்சியைவிட்டு ஆறுகாட்டுக்கு விரைய நேரும். அப்போது திருச்சியை முற்றுகையிடும் பகைவரின் பலம் குறையும்; முகம்மதலியின் ஆபத்தும் தளரும்.'

கிளைவ் கூறிய உபாயங் கேட்டு கவர்னர் மிகவும் மெச்சி அவனிடமே ஒரு படையைக் கொடுத்து ஆறு

காட்டுக்கு அனுப்பினன். கிளைவும் மிக்க தைரியத்துடன் ஆறுகாட்டை நோக்கி நடந்தான். கிளைவின் வருகையை அறிந்ததும், ஆறுகாட்டிலிருந்த வீரர் அஞ்சியோடி விட்டனர். கிளைவ் அந்நகரை எளிதில் வசஞ்செய்து, பகைவரை எதிர்நோக்கிக் கோட்டையுடன் கொத்தளங்களையும் பழுது பார்க்கலானன்.

ஆறுகாட்டின் கதியை அறிந்தவுடனே, சந்தா சாகிப் தன் மைந்தன் ராஜா சாகிபின் வசம் பதினயிரம் வீரரையும் பிரஞ்சுக்காரரையும் அனுப்பினன். அப்பெரிய சேனை ஆறுகாட்டை

கிளைவ்

யடைந்து, ஐம்பது நாள் முற்றுகையிட்டும் நகரை மீட்க முடியவில்லை. சந்தா சாகிபின் மைந்தன் தோற்றோடி விட்டான். அது கேட்டதும் சந்தா சாகிப் பயந்து ஆறுகாட்டை நோக்கி வந்தான்.

இதற்கிடையில் முராரி ராவ் எனும் மகாராஷ்டிரத் தலைவனும், ஸெயிண்ட் டேவிட் கோட்டையிலிருந்து ஒரு படையும் கிளைவுக்குத் துணையாக வந்து சேர்ந்தனர். இரண்டு பக்கத்துப் படைகளும் காவேரிப்பாக்கம் எனுமிடத்தில் சந்தித்துப் போர்புரிந்தன. அதில் சந்தா சாகிப் தோற்றுப் போனன். பிறகு கிளைவும் மேஜர் லாரன்ஸ் எனும் ஆங்கில தளகர்த்தனும் திருச்சியை நோக்கிச் சென்றனர். அங்கும் சந்தா சாகிப் தோல்வியே கொண்டான்.

பின்பு, பிரஞ்சுக்காரரும் சந்தா சாகிபும் ஸ்ரீரங்கம் சென்று அங்கே ஒளிந்துகொண்டனர். உடனே ஆங்கி

லேயர் ஸ்ரீரங்கத்தைச் சூழ்ந்துகொள்ள அப்பகைவரோ கூண்டில் சிக்கிய புலி போலாயினர். சந்தா சாகிப் உயிர்

கர்நாடகப் பிரதேசங்கள்

தப்ப எண்ணித் தஞ்சை அரசனிடம் சரண் புகுந்தான். ஆனால் அவன் வஞ்சனையாகக் கொலையுண்டு மடிய நேர்ந்

தது. பிரஞ்சுக்காரரும் விதியின்றி ஸ்ரீரங்கத்தைக் கை விட்டு, ஆங்கிலேயரிடம் தஞ்சமாயினர்.

அதனால் ஆங்கிலேயரின் மதிப்பு கர்நாடகமெங்கும் ஓங்கி உயர்ந்தது. பிரஞ்சுக்காரரின் எண்ணமும் மதிப்பும் மண்ணாயின. முகம்மதலி யாதொரு போட்டியுமில்லாமல் கர்நாடக நவாப் ஆயினன். அதனால், ஆங்கிலேயருக்கு வர்த்தக உரிமைகளும் சலுகைகளும் அபரிமிதமாகக் கிட்டின. டூப்ளேயின் முயற்சி காரணமாக நஷ்டமும் கஷ்டமுமே பிரஞ்சுக்காரர் அடைய, அவன் கவர்னர் பதவியை இழந்து, மனமொடிந்து பிரான்ஸுக்குத் திரும்பவேண்டி வந்தது. சுதேச அரசரின் சண்டைகளில் இனிமேல் தலையிடுவதில்லையென ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் 1755ல் ஓர் உடன்படிக்கை உண்டாயிற்று.

கர்நாடகத்திலே ஆங்கிலேயரின் மதிப்பு உயர்ந்ததற்கு ராபர்ட் கிளைவின் மதிவன்மையே காரணம். ஆதலின் அவன் ஆறுகாட்டு வீரன் என்னும் பட்டம் பெற்றான்; படைத் தலைவன் எனும் பதவியும் எய்தினான்; பட்டாக்கத்தியும் பரிசாக அடைந்தான். இவ்வளவு ஏற்றம் படைத்த கிளைவ் சின்ன வயதிலே மகா துஷ்டப் பிள்ளையாக இருந்தான். சுட்டிப் பிள்ளையைக் கண்டு கலங்கிய பெற்றோர் அவனைப் பாடசாலைக்கு அனுப்பினர். அங்கும் அவன் அடங்காப்பிடாரியாகவே இருந்தான். ஊராரும் உறவினரும் அவனைக் கண்டு வெறுத்தனர்.

துடுக்குப் பிள்ளை தொலைந்தால் போதுமென்றெண்ணி, அவனை இந்தியாவிலே ஆங்கிலக் கம்பனியில் வேலை பார்க்க அனுப்பினர். குமாஸ்தா வேலையில் மனஞ் செல்லாத அவ்வாலிபன் தற்கொலை செய்து கொள்ள முயன்றான்; பன்முறை முயன்றும் பலிக்கவில்லை. எனவே 'ஏதோ பெருமை கிட்டும், அதனால்தான் உயிர் போகவில்லை,' என்று அவன் கருதினான்; பின்பு படையில்

சேர்ந்து சேவித்து வரலானுன். பொல்லாத பிள்ளை யென்று பேர் வாங்கியவன் பின்னுளில் பூஜிக்கப் பெற்ற தற்கு அவன் மதிவன்மையே ஆதாரமாம். இது நிற்க,

1756ஞ ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டை மூண்டது. உடனே வழக்கம் போல் இந்தியாவிலும் அவ்விரு திறத்தினரும் போரில் இறங்கலாயினர். இதற்கு முன்னதாகவே, வங்காளத்திலுள்ள நவாபை ஆங்கிலேயர் தள்ளிவிட்டு வேருெருவனை நவாபாக்கி, அங்கே அதிகாரஞ்செலுத்திவந்தனர். ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் போர் தொடங்கியவுடனே, வங்காளத்திலிருந்த கிளைவ் அங்கே பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமா யிருந்த சந்திரநாகூர் எனும் நகரைப் பிடித்துக்கொண்டான்.

கௌண்ட் டி லாலி எனும் பிரஞ்சு தளகர்த்தன் 1758ஞ ஒரு பெரும் படையுடன் கிளம்பி ஸெயிண்ட் டேவிட் கோட்டை, ஆறுகாடு இவற்றைப் பிடித்துக் கொண்டு சென்னையையும் தாக்கலானுன்; அப்போது ஹைதராபாத்திலிருந்த புஸ்ஸி என்னும் தளகர்த்தனைத் துணை வரும்படியும் வேண்டினுன்.

கிளைவ் அஃதறிந்து வட சர்க்காரை எதிர்க்குமாறு கர்னல் போர்ட் என்பவனை ஏவினுன். போர்டும் அவ்வாறே வட சர்க்காரை வசஞ்செய்து கொண்டனன். ஹைதராபாத்தைவிட்டு புஸ்ஸி புறப்பட்டதும் நிஜாம் என்பானும் பிரஞ்சுக்காரரின் உதவியை நீத்து, ஆங்கிலேயருடன் நட்புக்கொண்டான்.

லாலி சென்னையை முற்றுகையிட, மேஜர் லாரன்ஸ் என்பவன் அதனைக் காத்து நின்றனன். அது சமயம் லாலியிடம் போதுமான கப்பல்படை யில்லை; அன்றியும் இங்கிருந்த பிரஞ்சு அதிகாரிகள் தம்முள் வேற்றுமை கொண்டு கிடந்தனர். இவ்வாருன காரணங்களினுல், லாலி புறங்காட்டி ஓட நேர்ந்தது.

அப்போது கர்னல் கூட் என்பவன் லாலியைத் துரத்திச் சென்று, வந்தவாசி என்னுமிடத்தில் 1760 ஆ சண்டை போட்டு, அங்கே புஸ்ஸியைச் சிறைபிடித்தான். லாலியோ தப்பியோடிப் புதுச்சேரி சேர்ந்தான். கர்னல் கூட் என்பவன் புதுச்சேரிக்குச் சென்று, அங்குள்ள கோட்டை கொத்தளங்களை யெல்லாம் இடித்துத் தள்ளித் தரை மட்டமாக்கினன்.

புதுச்சேரி ஆங்கிலேயரின் வசமாகிவிடவே பிரஞ்சுக்காரரின் பெருமை முழுதும் மங்கிவிட்டது. ஹைதராபாத்திலும் கர்நாடகத்திலும் ஆங்கிலேயருக்குச் செல்வாக்கு இன்னும் உயர்ந்தது. வட சர்க்காரும் அவர்களுக்குக் கிட்டியது. உடனே இந்திய சுதேச அரசர் ஆங்கிலேயரிடம் மிகுந்த மதிப்பு வைக்கலாயினர்.

அப்பால் 1763ஆ ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருச்கும் சமாதானம் உண்டாகவே இந்தியாவிலும் அவ் வினத்தார்கள் தம்முள் சண்டையை ஒழித்துச் சமாதானம் செய்து கொண்டார்கள். அப்போது புதுச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் ஆகிய இடங்களை பிரஞ்சுக்காரருக்கு ஆங்கிலேயர் திருப்பிக் கொடுத்தனர். இப்போதும் அவ்விடங்கள் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாயுள.

---

35. வங்கத்தில் ஆங்கில ஆதிக்கம்

தென்னிந்தியாவில் அவ்விதம் ஆங்கிலேயரின் செல்வாக்கு வளர்ந்துவர, வங்காளத்திலும் அவர்களது ஆதிக்கம் ஓங்குவதற்கான சந்தர்ப்பங்கள் வாய்த்தன. மொகலாய ஸாம்ராஜ்யம் ஆடத் தலைப்பட்டதும், மாகாணப் பிரதிநிதிகளான நவாபுகள் என்போர் தனியரசு கொள்ளலாயினர். அவ்விதம் வங்காளத்திலே அலிவர்தி கான் என்பவன் நவாபாக விளங்கி வந்தான்.

தெற்கிலே ஆங்கில ஆதிக்கம் ஓங்குதல்கண்டு, நாளடைவில் இந்தியாவெங்கும் அவர்களுக்கு ஆதிக்கம் பரவுமென அவன் மதித்துணர்ந்தனன். தள்ளாத வயது கொண்டவனுதலால், ஆங்கிலேயருடன் மல்லுக்கு நிற்க அவன் விரும்பவில்லை. அவன் காலத்தில் மூர்ஷிதாபாத் வங்காளத்தின் தலைநகராக விளங்கிற்று. அவன் கண் மூடியதும் அவன் பேரன் ஸிராஜ் உத் தௌலா என்பவன் நவாப் ஆனுன். ஆங்கிலேயரின் விஷயத்தில் ஸர்வ ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டுமென்று தன் பேரனுக்கு அவன் புத்தி சொல்லிப்போனுன்.

பட்டத்துக்கு வந்தகாலையில் ஸிராஜ் உத் தௌலனுக்கு வயது இருபத்தைந்து. அவன் எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து வந்தான். மொகலாய சக்கரவர்த்திகளின் காலத்திலேயே வங்காளத்தில் வரியின்றி வர்த்தகம்புரிய ஆங்கிலேயர் அனுமதி பெற்றிருந்தனர். ஆங்கிலேயரின் வர்த்தகமும் வாழ்வும் பெருகுதல் கண்டு அவன் சினந்தான். அது கேட்டு ஆங்கில வர்த்தகரில் சிலருக்குப் பிடிக்கவில்லை. இங்கிலையில் கல்கத்தாவிலுள்ள போர்ட் வில்லியம என்னும் கோட்டையை அவர்கள் பழுதுபார்த்து நன்கமைத்தனர். அது குறித்து இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. அதன்மேல் 1756ஆ ஸிராஜ் உத் தௌலன் ஒரு பெரும் படையுடன் சென்று, கல்கத்தாவைப் பிடித்துக்கொண்டான். அப்போது ஆங்கிலேயரில் சிலர் தம் மனைவி மக்களுடன் படகுகளிலேறித் தப்பியோடினர்; சிலர் சிறைப்பட்டனர். இச்செய்தி சென்னைக்கு எட்ட,

ஸிராஜ் உத் தௌலா

கிளைவ் ஒரு சேனையுடன் கல்கத்தாவை நோக்கி விரைந்தான். அட்மிரல் வாட்ஸன் என்பவனும் ஒரு கப்பல் படையுடன் அவனுக்குத் துணையாகச் சென்றான்.

அவ்விருவரும் போர்ட் வில்லியத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டார்கள்; நவாபுக்குச் சொந்தமான ஹூக்ளி நகரையும் கொள்ளையிட்டார்கள்; போர்முனையிலே ஸிராஜ் உத் தௌலனையும் தோற்கடித்தார்கள். அதன்மேல் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஆங்கிலக் கைதிகளை விடுவிக்கவும், ஆங்கிலேயருடன் நேசமாக வாழவும் நவாப் ஒப்புக்கொண்டான். முன்போல் வங்காளத்தில் வரியின்றி வர்த்தகம் புரியவும், கோட்டை கொத்தளங்களை மராமத்து செய்யவும் ஆங்கிலேயர் உரிமை பெற்றனர்.

இந்த உடன்பாடு நீடித்து நிலைக்கவில்லை. வங்காளத்திலிருந்து ஆங்கிலேயரை விரட்டிவிடவேண்டு மென்றே அவன் சதிசெய்து வந்தான். அவனுடைய புத்திப் பிசகினால், வங்காளப் பெருமக்களில் பலர் அவனுக்குப் பகைவராயினர். அம் மக்களுடன் கலந்துகொண்டு, நவாபைத் தொலைத்துவிட ராபர்ட் கிளைவ் சூழ்ச்சி புரியலானான். நவாபின் சேனைத் தலைவனான மீர் ஜாபர் என்பவனும் அச் சூழ்ச்சிக்கு உடந்தையாக நின்றான்.

நவாபும் ஆங்கிலேயரைத் தாக்குமாறு ஒரு பெரும் படையுடன் கிளம்பினான். 1757ல் பிளாஸி எனுமிடத்தில் இரு பக்கத்துப் படைகளும் சந்தித்தன. சண்டையின் நடுவே ஸிராஜ் உத் தௌலனை மீர் ஜாபர் கைவிட்டகன்றான். நவாப் தோற்றோட நேர்ந்தது. மீண்டும் படைதிரட்டிப் போருக்கெழவே நவாப் கருதினான். ஆயினும் அவனுக்குத் துணைபுரிவார் இல்லாது போயினர். முடிவில் அவன் வஞ்சனையாகப் படுகொலை யாயினன்.

நவாப் ஓடிப்போனவுடனே, மூர்ஷிதாபாத் நகருக்குச்சென்று, மீர் ஜாபரை நவாப் பதவியில் அமர்த்தினான்

ராபர்ட் கிளைவ். நவாப் பதவி கிட்டியதும், மீர் ஜாபர் ஆங்கிலேயருக்கு ஏராளமான வெகுமதி வழங்கினான்; கிளைவ் முதலிய அதிகாரிகளுக்கு வெகு பணம் அள்ளிக் கொடுத்தான்; கல்கத்தாவுக்கு அடுத்த ஜில்லாவை ஆங்கிலேயருக்கு ஜாகீராக வழங்கினான். பிளாஸி யுத்தத்தில் இங்ஙனம் அடைந்த வெற்றியே வங்காளத்தில் ஆங்கிலேய ராஜ்யம் ஏற்படுவதற்கு அடிப்படை ஆயிற்று.

மீர் ஜாபர்

கங்கை நதியும் அதன் பல கால்வாய்களும் பாய்வதால் நீர்வளம் நிலவளம் மிகுந்தது வங்காள மாகாணம். அந்நதிகளிலும் கால்வாய்களிலும் நெடுந்தூரம் படகுகள் செல்லலாம். சிறிய கப்பல்களும் நெடுந்தூரம் போய் வரக் கூடும். ராஜபாட்டைகளும் பலவுண்டு. இங்ஙனம் நீர்வளமும் நிலவளமும் போக்குவரவு சாதனமும் நிரம்பியுள்ள பிரதேசம் வர்த்தகத்திற்கு மிகவும் லாயக்கானதாகும். ஆங்கிலேயர் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி யனுப்பவும், தாங்கள் தருவிக்கும் சரக்குகளை உள்நாட்டினுக்குக் கொண்டு செல்லவும், வங்காளம் தகுதிவாய்ந்தது. மேலும் பகைவரை எதிர்க்கவும், தங்கள் பண்டசாலைகளைக் காக்கவும் கப்பல் படையைக் கொணர்வதற்கும் வங்காளம் ஏற்றதாயிற்று. அது கைத்தொழில்கள் பல நிறுவுவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலையும் வாய்ந்தது.

நவாப் பதவியில் அமர்ந்த மீர் ஜாபரோ தகவும் திறனும் கொண்டு விளங்கவில்லை; சதா ஆங்கிலேயரின் ஆதரவை நாடி நிற்கவும் நேர்ந்தது. வங்கத்திலே வகையற்ற

நவாப் ஆட்சி புரிவதையும், அங்கே ஆங்கில வர்த்தகர் சலுகை பெறுவதையும் கண்டு, மொகலாய இளவரசன் நிம்மதி கொள்ளவில்லை. அவன் அயோத்தியின் நவாபான ஷூஜா உத்தௌலாவின் துணைகொண்டு வங்கத்தின்மீது படைகொண்டு எழுந்தான்.

அவ்விருவருக்கும் வெகு பணங் கொடுத்து அனுப்பி விடலாமென மீர் ஜாபர் எண்ணி நின்றான். அச்சமயம் மீர் ஜாபருக்கு உதவியாக ஓர் ஆங்கிலப் படையை அனுப்பினான் கிளைவ். அது கண்ட அயோத்தி நவாப் ஓட்டம் பிடித்தான்; மொகலாய இளவரசனோ கிளைவிடம் சரண் புகுந்தான். கிளைவ் அக்குமாரனுக்குச் சிறிது பணங் கொடுத்து அனுப்பிவிட்டான். மீர் ஜாபருக்கு வந்த ஆபத்து ஒருவகையில் அவ்விதம் நீங்கிற்று. என்றாலும், மற்றோர் ஆபத்து தலைக்குமேல் நின்றது.

சண்டை சச்சரவு காரணமாகவும், ஏராளமான சம்மானம் வழங்கியது காரணமாகவும் மீர் ஜாபரின் பொக்கிஷம் வறண்டு போயிற்று. இந்நிலையில், துணைபுரிந்த ஆங்கிலப் படைகளின் போஷணைக்குரிய பணத்தைக் கொடுக்க அவனால் ஆகவில்லை. தனது சேனாவீரருக்குச் சம்பளங் கொடுக்கவும் வகையில்லாது அவன் விழிக்கலானான். தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக் கொண்டதாக எண்ணிய மீர் ஜாபர் டச்சுக்காரரின் துணையை நாடி ஆங்கிலேயரைத் துரத்திவிடக் கருதலாயினன்.

ஆங்கிலேயரிடம் அசூயை கொண்டு கிடந்த டச்சுக்காரர் ஜாவாத் தீவினின்று தம் கப்பல் படையை வரவழைத்தனர். கிளைவ் அதனை முன்னதாகவே உணர்ந்து, கப்பல் படை வருமுன்னரே, டச்சுக்காரருக்குச் சொந்தமான சின்ஸூரா நகரை வசஞ்செய்து கொண்டனன். அதுகண்ட மீர் ஜாபர் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்து, மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டான். பின்பு கிளைவ் 1760ஆம் இங்கிலாந்துக்குச் செல்லலானான்.

கிளைவ் போனபின்னர், இங்கே கம்பனியின் காரியங்கள் சீர்கேடடைந்தன. கம்பனியின் உத்தியோகஸ்தர்களும் சொந்தத்தில் வர்த்தகம் புரியத் தொடங்கினர்; மீர் ஜாபரை நீக்கி வேறொருவனை அப் பதவியில் அமர்த்தவும் அவர்கள் கருதினர். அத்தகைய சமயத்தில், முன்னம் வங்கத்தின்மீது படையுடன் வந்த மொகலாய இளவரசனாகிய ஷா அலம் மொகலாய சக்கரவர்த்தி ஆனான். உடனே வங்கத்தின்மீது மீண்டும் அவன் பாய்ந்தான்; அயோத்தி நவாபும் அதற்குத் துணையாக இருந்தான்.

அதுகண்டு ஆங்கிலப் படைஞர் வெகுண்டெழுந்து, அவ்விருவரையும் முறியடித்துவிட்டனர். பிறகு ஆங்கிலேயர் மீர் ஜாபரை நீக்கிவிட்டு, அவன் மருமகனான மீர் காஸிம் என்பவனை நவாபாக்கினர். தன் மாமனார் ஆங்கிலேயருக்குத் தரவேண்டிய பாக்கிப் பணத்தையெல்லாம் தரவும், சண்டைச் செலவுக்காக ஐந்து லட்சம் கொடுக்கவும், மீர் காஸிம் ஒப்புக்கொண்டான்; அத்துடன் மிதுனபுரி, பரத்வான், சிட்டகாங் ஆகிய ஜில்லாக்களையும் ஆங்கிலேயருக்கு வழங்கினான். இவ்வாறாக ஆங்கிலேயருக்கு வங்காளத்திலே நாடு பெருகிற்று.

மீர் காஸிம் திறமையும் தகுதியுங் கொண்டு, பரிபாலனம் பண்ணிவந்தான். அப்போது அவனுக்கும் ஆங்கில வர்த்தகருக்கும் தகராறு ஏற்பட்டது. அதன் விவரம் என்னவென்றால், வரி செலுத்தாமல் வங்காளத்தில் வர்த்தகம் புரிய ஆங்கிலக் கம்பனியார் அனுமதி பெற்றிருந்தார்கள் அல்லவா? கம்பனியின் உத்தியோகஸ்தர்களும் சொந்தத்தில் வாணிபஞ் செய்துவந்தனர். இவர்களும் வரி செலுத்தாமல் வர்த்தகம் புரியலாமென மீர் ஜாபர் சம்மதித்திருந்தான். இந்திய வர்த்தகர் மட்டும் வரி செலுத்தவேண்டியிருந்தது.

அங்கிலேயில் கம்பனி உத்தியோகஸ்தர்கள் இந்திய வர்த்தகரிடமிருந்து கைக்கூலி வாங்கிக்கொண்டு, அவர்

களின் சரக்குகளையும் தங்கள் சரக்கென்று கூறி, வரி கொடாது எடுத்துச் சென்று வரலாயினர். நவாபின் வரி வருமானம் வரவரக் குறைந்து பூஜ்யமாகி விட்டது. இதுகண்ட மீர் காஸிம், கம்பனி மட்டுமே வரி செலுத்தாமல் வர்த்தகம் புரியலாம், ஏனையோர் அனைவரும் வரி செலுத்தி யாகவேண்டும், என்று உத்தரவிட்டான். கம்பனி உத்தியோகஸ்தர்கள் அந்த உத்தரவை மதித்து நடக்கவில்லை. ஆதலின், இந்திய வர்த்தகரும் வரியின்றி வர்த்தகம் பண்ணலாமென அவன் ஆணையிட்டான்.

அதனால் கம்பனியின் உத்தியோகஸ்தர்களுக்கு மீர் காஸிம்மீது கடுப்பு மிகுந்தது. இதன் விளைவாக மீர் காஸிம் பதவி யிழந்தான்; மீர் ஜாபர் மீண்டும் நவாபாக வந்தான். மீர் காஸிம் சும்மா இருக்கவில்லை; ஷா அலம், அயோத்தி நவாப் ஆகிய இருவரையும் சேர்த்துக் கொண்டு, ஆங்கிலேயருக்குச் சொந்தமான பாட்னா நகரை 1763ஸ் பிடித்துக் கொண்டான். அச்சமயம் அங்கிருந்த ஆங்கிலேயர் படுகொலை ஆயினர். பின்பு அம்மூவரும் சேர்ந்து, பெருஞ் சேனையுடன் புறப்பட்டனர்.

பக்ஸார் என்னுமிடத்தில் ஆங்கிலேயரின் சேனையும் அம்மூவரின் படைகளும் சந்தித்தன. மேஜர் மன்றோ எனும் ஆங்கில தளகர்த்தன் 1764-ஸ் அம் மூவரையும் தோற்கடித்தான். எனினும் அயோத்தி நவாப் மறுபடியும் ஒரு பெரிய சேனைகொண்டு ஆங்கிலேயரை எதிர்த்தான். கோரா எனுமிடத்தில் மீண்டும் அவன் தோற்றோட நேர்ந்தது. உடனே வட இந்தியா எங்கும் ஆங்கிலேயரின் மதிப்பு ஓங்கியது. முடிவில் அயோத்தி நவாபும் டில்லிபாதுஷாவும் ஆங்கிலேயரிடம் சரண்புகுந்தனர். பின்பு மறுபடியும் மீர் ஜாபரையே வங்காள நவாபாக ஆங்கிலேயர் தூக்கி வைத்தனர்.

பாட்னாவில் நடந்த படுகொலையும், மீர் காசிமுடன் உண்டான சச்சரவும் இங்கிலாந்துக்கு எட்டின. கம்

பனியின் மேலதிகாரிகள் உடனே ஆங்கிருந்த கிளைவை வங்காள கவர்னராகவும் சேனாதிபதியாகவும் நியமித்தனுப்பினர். சர்வாதிகார புருஷனாக அவன் இங்கே வந்து சேர்ந்ததும், நேரே அலகபாத் சென்று, டில்லி பாதுஷாவையும் அயோத்தி நவாபையும் கண்டு பேசி



வங்காளம், பீஹார், அயோத்தி

னான். அதன்மேல் அவர்களுக் கிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விவரம் இது :—

(1) வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மூன்று மாகாணங்களிலும் பாதுஷாவின் பிரதிநிதியாகவிருந்து வரி வசூலிக்கும் உரிமை ஆங்கிலேயருக்குக் கிட்டியது. (2) நியாய பரிபாலன விஷயம் மட்டும் வங்காள நவாபுக்கு உட்பட்டிருக்கும். (3) கங்கைக்கும் யமுனைக்கும் இடையேயுள்ள கோரா, அலகாபாத் ஆகிய இரண்டும் பாதுஷாவிடம் இருக்கும். (4) பாதுஷாவுக்கு ஆண்டு தோறும் ஆங்கில வர்த்தகர் 26 லட்சம் ரூபாய் கொடுத்து வரவேண்டும். (5) சம்மானமாக ஆங்கிலேயருக்கு அயோத்தி

நவாப் ஐந்து கோடி ரூபாய் கொடுக்கவேண்டும். யுத்தச் செலவுக்காகவும் ஐம்பது லட்சம் அவன் தரவேண்டும்.

அவ்விதம் உடன்படிக்கை ஏற்படவே வங்காள மாகாணத்திலே பெயரளவில் ஆங்கிலக் கம்பனியார் அரசுரிமை அடையலாயினர். சின்னாளில் மீர் ஜாபர் மாண்டு போக, அவன் மகனொருவனை அன்னார் நவாபாக ஆக்கினர். அவன் திறமையற்றவனாக இருந்தான். அதனால், மாகாணத்தின் ராணுவமும் வரவு செலவும் கம்பனிக்கு உட்பட்டன; நீதிபரிபாலனம் மாத்திரம் நவாபின் கையில் இருந்தது. வரிவசூல் செய்யும் அதிகாரிகளோ ஆங்கிலேயருக்கு உட்பட்டு நடந்து வந்தனர்.

கம்பனி உத்தியோகஸ்தர்களின் அடாத நடத்தை யினாலேயே வங்காளத்தில் யுத்தம் ஏற்பட்டதல்லவா? அவர்களின் நடத்தைப் பிசகைப் போக்க ராபர்ட் கிளைவ் பல ஏற்பாடுகள் செய்தான்; அவர்களின் சம்பளத்தை உயர்த்தினான்; சொந்தத்தில் அவர்கள் வியாபாரஞ் செய்வதைத் தடுத்தான்; இந்தியரிடமிருந்து வெகுமதி வாங்கக் கூடாதென விதித்தான். பின்னர் 1767-ஆல் அவன் இங்கிலாந்துக்குப் போயினன்.

கிளைவின் விரோதிகள் அங்கே அவனைச் சும்மாவிடவில்லை; இந்தியாவிலே பல அக்கிரமங்கள் செய்தானென்றும், இந்தியரிடமிருந்து ஏராளமாக வெகுமதி வாங்கினானென்றும், பலவாறாக அவன்மீது பழி சுமத்தினர். இங்கிலாந்திலுள்ள காமன்ஸ் சபையார் அப்பழிகளை ஆரத்தீர விசாரித்து, நிரபராதி என்று தீர்ப்பளித்தனர்; இங்கிலாந்துக்குப் பேரூழியம் புரிந்த பெருமானென்றும் பாராட்டினர். எனினும் கிளைவுக்கோ மனநோய் மூண்டது; உடல் நலமும் குன்றியது. முடிவில் 49-வது வயதிலே 1774-ஆல் அவன் தற்கொலை செய்து கொண்டான். வர்த்தக நிமித்தம் இங்கு வந்த ஆங்கிலேயருக்கு அரசுரிமை தேடித் தந்தவன் கிளைவ்.

மொகலாய ஸாம்ராஜ்யம் முற்றிலும் சிதறிப் போக, டில்லியிலே பெயரளவில் ஷா அலம் பாதுஷாவாக இருந்து வந்தான். மேற்குக் கரைப் பிரதேசங்களில் மகாராஷ்டிரர் தலைதூக்கி வந்தனர்; கிழக்குக் கரையிலே ஆங்கிலக் கீழிந்திய கம்பனியார் சிறப்பும் மதிப்பும் பெற்றிருந்தனர்; தட்சணத்திலே நிஜாம் ராஜ்யம் வலுத்து வந்தது. தட்சணத்திற்கும் தெற்கிலே சாமானியப் போர் வீரனுயிருந்த ஹைதர் அலி மைசூர் ராஜ்யத்தின் மன்னவனுகத் தருக்கி நின்றுன். மத்திய இந்தியாவிலே சிறிய ராஜபுத்திர ராஜ்யங்கள் இருந்து வந்தன. பஞ்சாபிலே சீக்கியர் என்போர் சிறப்புக் கொள்ளலாயினர்.

தடியெடுத்தவ னெல்லாம் தண்டல்காரன் என்பது போல், தேச மெங்கும் பற்பலர் தந்தலையாட்டங்கொண்டனர். தேச நலத்தைக் கவனிக்க மத்திய சர்க்கார் இல்லாது போயினர். அந்த அரசுகளெல்லாம் தம்முள் சண்டை செய்வதிலேயே கண்ணுயிருந்தன. வியாபாரிகளாதலின் ஆங்கிலேயர் காசின்மீதே கருத்துக் கொண்டனர். வங்காள மாகாணத்தின் நிலைமை படுமோசமாக முற்றியது. வங்கத்தின் வரி வசூல் ஆங்கிலேயரின் கையில்; நீதி பரிபாலனமோ நவாபின் கைக்குள். இங்ஙனம் வங்கத்தில் இரட்டையாட்சி முறை நடைபெற்று வருகையில் ஜனங்களின் பாடு திண்டாட்டமாக முடிந்தது.

வரி வசூல் வேலையை ஏலத்தில் விடுவது வழக்கம். அதிகப் பணம் கொடுக்க ஏற்றுக்கொள்ளுவோனே வரி வசூல் உரிமை பெற்றுன். கம்பனிக்குக் கட்ட வேண்டிய பணத்துக்குமேல் வசூல் செய்தால்தான் அவனுக்கு லாபம். ஆகவே அவனுடைய ஆட்கள் ஜனங்களைத் துன்புறுத்தி அதிக வசூல் செய்தார்கள். இந்நிலையில் 1770ஆவ வங்காளத்திலே கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அதனுல் மக்களில் மூன்றிலொரு பங்குபேர் பசியால் வாடி மாண்டு மடிந்தனர்.

வியாபாரம், ராஜ்யபாரம் இரண்டையுங் கருதிய கம்பனியார் இரண்டிலெதையும் சரிவரக் கவனிக்க முடியவில்லே. ராஜ்யபாரம் கேடுற அத்துடன் பஞ்சமும் கூடிக்கொள்ள, வியாபாரம் எவ்விதம் நடக்கும்? கம்பனியின் லாபம் மிகவும் குறைந்துவிட்டது. அதோடு போரிலும் இறங்க நேர்ந்ததால், கம்பனியாரின் செலவு பெருகிற்று. வரவோ கொஞ்சம், செலவோ ஏராளம். அத்தகைய நிலைமையில் வார்ன் ஹேஸ்டிஸ் 1772ல் வங்காளத்தின் கவர்னராக நியமனம் ஆனார்.

---

36. வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772—1783)

இந்தியாவிலே ஆங்கிலேயர் அரசுகோள்ள அடிகோலியவன் கிளைவ். அந்த அடிப்படையின்மீது ராஜ்யமென்னும் மாளிகை சமைத்தவர் வாரன் ஹேஸ்டிங்ஸ். கிளைவைப்போல் ஹேஸ்டிங்ஸூம் பால்யமுதல் கம்பனியிலே குமாஸ்தா வேலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த பதவி பெற்றவர்; மதிநுட்பமும் மகா சாமர்த்தியமும் வாய்ந்தவர்; மொகலாய ஸாம்ராஜ்யத்தின் சிதைவையும், ஆங்காங்கே முளைத்த சிற்றரசுகளின் அவலத்தையும் நன்கறிந்தவர்; வட இந்தியாவின் தாய்மொழியான ஹிந்தி பாஷையையும், மொகலாய ராஜ்ய பாஷையான பாரசீக பாஷையையும் நன்கு உணர்ந்தவர்.

இரட்டையாட்சிமுறை, கொடிய பஞ்சம், வியாபாரச் சுணக்கம், இவற்றால் நேர்ந்த பணக்கஷ்டத்தைக் குறைக்கவும், வருவாயைப் பெருக்கவும் கம்பனியின் மேலதிகாரிகள் வாரன் ஹேஸ்டிங்ஸூக்கு உத்தரவு செய்தனர். உடனே அவர் வங்காளத்தில் இரட்டையாட்சி முறையை ஒழித்தார்; தேசத்தை ஜில்லாக்களாகப் பிரித்தார்; ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரொரு ஆங்கில கலெக்டரை

ஸர்வாதிகாரியாக நியமித்தார்; கலெக்டர்களே நீதிபதிகளாக இருக்கையில், அவர்களுக்கு உதவிபுரிய சாஸ்திரிகளையும் காஜிகளையும் நியமித்தார்.

வருவாய்க்குரிய மார்க்கங்களை யெல்லாம் வகுத்தும், விரும்பிய வண்ணம் வருவாய் பெருகவில்லை. அச்சமயம் ஆண்டுதோறும் ஆங்கிலேயரிடம் 26 லட்சம் ரூபா பெற்றுவந்த ஷா அலம், மகாராஷ்டிரரின் கை ஓங்குதல்கண்டு, அவர்களின் பக்கம் சேர்ந்து கொண்டான். உடனே, அவனுக்குக் கொடுத்துவந்த வருஷாந்தரத் தொகையை ஹேஸ்டிங்ஸ் நிறுத்திவிட்டார். ஷா அலத்தின் ஆதீனத்திலிருந்த கோரா, அலகாபாத் ஆகிய இரு பிரதேசங்களையும் அயோத்தி நவாபிடம் ஐம்பது லட்ச ரூபாய்க்கு விற்ருர்; வங்காள நவாபின் செலவுக்குக் கொடுத்துவந்த தொகையையும் பாதியளவு குறைத்தார்.

அயோத்திக்கு அப்பால் ரோகில்கண்டு எனும் பிரதேசமொன்றுண்டு. அங்குள்ள மக்கள் ரோகில்லர் எனப்படுவர். அன்னுரை மடக்கி அவர்களின் தேசத்தைக் கைப்பற்றிக்கொள்ள அயோத்தி நவாப் ஆவல்கொண்டான். அதற்குத் துணைபுரியின், படைச்செலவைத் தான் ஏற்றுக்கொள்வதோடு, பரிதானமாக 40 லட்சம் ரூபா தருவதாகவும் அந் நவாப் சொன்னுன். பண வரும் படியை எண்ணி, அதற்கு ஒப்புக்கொண்டார் ஹேஸ்டிங்ஸ். உடனே ஆங்கிலப்படையும் நவாபின் சேனையும் கிளம்பின. பயிரும் பச்சையுமாக விளங்கிய ரோஹில் கண்டு நாட்டை நவாப் கட்டிக் கொண்டான்.

ரெகுலேடிங் ஆக்ட்: வரவைப்பெருக்கியும் செலவைக் குறைத்தும் வாரன் ஹேஸ்டிங்ஸ் எவ்வளவோ செய்தும், கம்பனியின் பணமுடை தீர்ந்தபாடில்லை. கம்பனிக்கோ இருபது லட்சம் பவுன் கடன் இருந்தது. கம்பனியின் மேலதிகாரிகள் இங்கிலாந்தின் துரைத்தனத்தை யண்டிக் கடன் கேட்டார்கள். வர்த்தகம் புரியப் போன

மக்கள் வெகு பணம் திரட்டியதையும், கொஞ்சம்கொஞ்ச மாகக் கம்பனி நாடுகொள்வதையும் அத்துரைத்தனத்தார் கவனித்து, அதன்மீது ஆதிக்கம் பெற விரும்பி, ரேகு லேடிங் ஆக்ட் எனும் சட்டமொன்று செய்து, அக்கம்பனிக்குக் கடன் கொடுத்து உதவினர். இந்தியாவில் ஆங்கில கீழிந்திய கம்பனிக்குச் சொந்தமான பிரதேச ஆட்சியை ஒழுங்கு செய்வதே அச்சட்டத்தின் நோக்கம்.



வாரன் ஹேஸ்டிங்ஸ்

அச் சட்டத்தின் சாரம் யாதெனில்: 1. வங்காளத்தின் கவர்னரே இந்தியாவில் கம்பனிக்குச் சொந்தமான பிரதேசம் முழுவதற்கும் மேலான அதிபதி. ஆதலின் அவர் கவர்னர் ஜெனரலும் ஆவர். 2. இங்கிலாந்தின் துரைத்தனத்தாரைக் கலந்துகொண்டே கம்பனியார் கவர்னர் ஜெனரலை நியமித்தல் வேண்டும். 3. நிர்வாகத்தில் அவருக்கு ஆலோசனை சொல்ல நால்வர் கொண்ட ஒரு சபை தோன்றியது. 4. கல்கத்தாவிலே ஸுப்ரீம் கோர்ட் எனும் உயர்ந்த நீதிஸ்தலம் ஏற்பட்டது. அதற்குரிய நீதிபதியையும் இங்கிலாந்தின் துரைத்தனமே நியமிக்கும். 5. சென்னை, பம்பாய் இந்த இடங்களில் உள்ள கவர்னர்கள், கவர்னர் ஜெனரலுக்கு உட்பட்டே ஆட்சி நடத்திவர வேண்டும்.

1774ல் அச்சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படி முதல் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸே. கவர்னர் ஜெனரலாகும் வரையில் ஹேஸ்டிங்ஸ் தம் இஷ்டப்படியே காரியம் நடத்தி வந்தார். நிர்வாக ஆலோசனை

சபை ஏற்பட்ட பின்போ அது மலையேறிப் போய்விட்டது. சபை யங்கத்தினர் நால்வரில் மூவர் அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் குறுக்கிட்டனர். அம்மூவரில் ஒருவன் பெயர் பிலிப் பிரான்ஸிஸ். இவனுக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் சதா கடும் பகை. அதனால் ஒரு சமயம் இருவரும் அடித்துக்கொள்ளவும் நேர்ந்தது.

அச்சமயம் கல்கத்தாவிலே மகாராஜா நந்தகுமார் எனும் செல்வச் சீமானொருவன் இருந்தான். வாரன் ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கியதாக அவன் புகார் செய்தான். அப்புகாரை விசாரணை செய்யுமுன், நந்தகுமார் கள்ளக்கையெழுத்திட்டதாக ஒரு முகம்மதியன் வழக்குத் தொடுத்தான். நீதிபதி அதனை நம்பி நந்தகுமாருக்குத் தூக்குத் தண்டனை விதித்தனன். அக்கொடிய தண்டனையை அறிந்ததும், வங்காளத்திலுள்ள ஹிந்துக்கள் அனைவரும் அடங்காத் துயர் கொண்டனர்.

முதல் மைசூர் யுத்தம்: விஜய நகர ஸாம்ராஜ்யம் நலிந்தவுடன், அதற்கு அடங்கியிருந்த நாடுகள் பலவும் சுயேச்சை கொண்டு தனித்தனி ராஜ்யங்கள் ஆகிவிட்டன. அவற்றுள் ஒன்று மைசூர் ராஜ்யம். அதனை ஹிந்து வரசர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியிலே அந்த ராஜ்யத்தில் **ஹைதர் அலி** எனும் போர்மகனொருவன் தோன்றினான். அவன் தனது புத்திவன்மையினால் ஹிந்துவேந்தனைப் போக்கிவிட்டுத் தானே மைசூர் சுல்தான் ஆயினான்.

அப்போது மைசூர் ராஜ்யத்தின் தலைநகரம் ஸ்ரீரங்கபட்டணம். அதனை ஹைதர் பலப்படுத்தி மலையாளம், கோயமுத்தூர் இரண்டையும் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான்; இன்னும் பல இடங்களையும் கொள்ளையாடினான். அக்கொள்ளையிலே அவனுக்கு ஒரு கோடி ரூபா கிடைத்தது. அவ்விதம் அவன் மேம்பட்டு வருகையில் 1765ஆ மகாராஷ்டிரர் அவனை எதிர்த்து முறி

யடித்தனர். அவன் அவர்களுக்கு 32-லட்சம் ரூபாய் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான்.

ஹைதரின் எடுப்பைக் கண்டு நிஜாம், ஆங்கிலேயர், மகாராஷ்டிரர் ஆகிய மூவரும் கவலையெய்தி அவனை எதிர்க்க எண்ணினர். அச்சமயம் அவன் ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்த முகம்மதலியின் பட்டணங்களில் சிலவற்றை வசஞ் செய்து கொண்டான். அதன் மேல் அம்மூவரும் ஹைதரின் மீது போருக்கு எழுந்தனர். மூவரையும் ஒரே சமயத்தில் எதிர்க்க முடியாதெனக் கண்ட ஹைதர் வெகு தந்திரமாக அம் மூவரையும் தனித்தனியே பிரித்துவிட்டான். அதனால் ஆங்கிலேயர் தனியே நின்று அவனுடன் சமர்செய்ய நேர்ந்தது.

ஹைதர் அலி

திருவண்ணுமலைக்கு அருகிலுள்ள சங்கம் கணவாயில் அவ்விருவருக்கும் போர் நடந்தது. அதில் ஹைதர் வெற்றிகொள்ள முடியவில்லை. பின்பு திருவண்ணுமலையில் இருவருக்கும் போர்மூண்டது. அதில் ஹைதர் பெருந்தோல்வி கொண்டான். பின்பு சிலநாள் சென்றதும், 1769ஆ அவன் ஒரு பெரும் படையுடன் சென்னையின்மீது பாய்ந்தான். அதனை எதிர்பாராத ஆங்கிலேயர் அஞ்சி, அவனுடன் சமாதானம் செய்து கொண்டனர். அதன்படி இருவரும் நேசமாக வாழ்ந்து ஒருவருக்கொருவர் உதவிபுரிந்துகொள்வதென்றும், தாம்தாம் பிடித்துக்கொண்ட நாடுகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதென்றும் உடன்பாடு ஏற்பட்டது. இவ்விதம் முதல் மைசூர் யுத்தம் முடிந்தது.

ஹைதரும் ஆங்கிலேயரும் ஓர் உடன்பாடு கொண்டது கண்டு, மகாராஷ்டிரர் மனம் பொறுது, ஹைதரது நாட்டின்மீது படையெடுத்தனர். அப்போது, ஒப்பந்தப் படி உதவிக்கு வருமாறு ஹைதர் ஆங்கிலேயரை அழைத்தான். ஆங்கிலேயர் உதவ மறுத்துவிட்டனர். ஆதலின், ஏராளமான பணங்கொடுத்து மகாராஷ்டிரருடன் அவன் சமாதானம் செய்துகொள்ள நேர்ந்தது. பின்பு ஆபத்தில்கைவிட்ட ஆங்கிலேயர்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள அவன் சமயம் பார்த்திருந்தான்.

இரண்டாவது மைசூர் யுத்தம்: ஐரோப்பாவிலே ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டை உண்டாயிற்று. உடனே இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் புதுச்சேரியைப் பிடித்துக்கொண்டு, மேற்குக் கரையிலுள்ள மாஹி நகரையும் கைப்பற்றக் கருதினர். மாஹியைப் பிடிக்க ஹைதர் நாட்டின் வழியே ஆங்கிலப் படைகள் சென்றன. அவன் ஆட்சேபித்தும் பலனில்லை. அவன் 1780ல் ஒரு பெரும்படையுடன் கர்நாடகத்தில் புகுந்து பளூர் என்னுமிடத்தில் ஆங்கிலப் படைகளை முறியடித்தான் ; பின்பு ஆறுகாட்டையும் கைப்பற்றினான்.

அப்பொழுது ஜெனரல் கூட் எனும் ஆங்கில தளகர்த்தன் கல்கத்தாவிலிருந்து ஒரு படையுடன் வந்து, கூடலூரில் ஹைதருடன் சமர் செய்தான். ஹைதருக்குத் துணைபுரிய பிரஞ்சுக்காரர் ஒரு சேனையையும் கப்பல் படையையும் அனுப்பினர். 1781ல் பரங்கிப்பேட்டை, போளூர், சோளங்கிபுரம், ஆரணி என்னுமிடங்களில் ஹைதருக்கும் ஆங்கிலேயருக்கும் பல சண்டைகள் நடந்தன. அவற்றில் ஹைதர் தோல்வி கொண்டான். ஆனால் அவன் மைந்தன் திப்பு என்பானே தஞ்சாவூரிலே ஆங்கிலேயரைத் தாக்கித் தோற்கடித்தான்.

அடுத்த வருஷம் ஹைதர் காலகதி யடையவே, திப்பு மைசூர் சுல்தான் ஆயினன். பிரஞ்சுக்காரரின் துணை

கொண்டு ஆங்கிலேயரை முறியடிக்க அவன் ஏற்பாடுகள் பலவும் செய்தனன். அது சமயம் ஐரோப்பாவிலே ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சமாதானம் உண்டாயிற்று. அதனால் இங்கும் அவ்விரு நாட்டினரும் சமரஸங்கொண்டனர். எனவே, பிரஞ்சுக்காரர் ஹைதருக்குத் துணை புரியவில்லை. அத்துடன் மகாராஷ்டிரருடனும் ஆங்கிலேயர் சமாதானம் கொண்டு விட, இலகுவில் திப்புவைத் தாக்கும் நிலையில் இருந்தனர் ஆங்கிலேயர்.

திப்பு சுல்தான்

ஓர் ஆங்கிலச் சேனை புறப்பட்டுப் பாலக்காட்டைத் தாக்கி மைசூரை எதிர்க்கச் சென்றது. திப்புவை ஜெயிக்க முடியவில்லை. எனவே சமாதானத்தில் ஆங்கிலேயர் நாட்டங்கொண்டனர். 1784ஃ மங்களூரிலே இருவருக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இருவரும் தாம்தாம் பிறரிடமிருந்து பிடித்த நாடுகளைத் திரும்பக் கொடுத்தனர். இரண்டாவது மைசூர் யுத்தம் இவ்வாறு முடிந்தது.

முதல் மகாராஷ்டிர யுத்தம்: சென்னையிலும் கல்கத்தாவிலுமிருந்த ஆங்கில வர்த்தகர் ஆங்காங்குள்ள சுதேச மன்னருடன் சண்டை சச்சரவுகொண்டு நாடுசேர்த்து வருகையில், பம்பாயிலுள்ள ஆங்கில வர்த்தகரோ வியாபாரத்திலேயே கண்ணுயிருந்தனர். பம்பாய் நகரம் மட்டுமே அவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. பம்பாயைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் மகாராஷ்டிரருக்குச் சொந்தம். அந்நகரை யடுத்துள்ள இரண்டு இடங்கள் அவர்களுக்குத்

தேவையா யிருந்தன. அவர்கள் விலைக்குக் கேட்டும், மகாராஷ்டிரர் கொடுக்க மறுத்துவிட்டனர்.

இனி, சிவாஜியின் பேரனான ஸாகுவின் காலம் முதல், மகாராஷ்டிர ராஜ்யத்திலே பேஷ்வாக்கள் எனும் முதன் மந்திரிகளே ராஜ்யபாரத்தை வகித்து வந்தனர். நாளடைவில் மகாராஷ்டிர ராஜ்யத்திலே கெயிக்வார், சிந்தியா, ஹோல்கார், பான்ஸ்லே என்போர் சுயேச்சை பெற்று முறையே பரோடா, குவாலியர், இந்தூர், நாகபுரி எனுமிடங்களில் தனியரசராகத் திகழ்ந்து வரலாயினர்.

மகாராஷ்டிரரின் மூன்றாவது பேஷ்வாவான பாலாஜி ராவ் இறந்த பிறகு அவன் மைந்தன் மாதவ ராவ் 1772-ஆல வரையில் பேஷ்வாவாக விளங்கி நின்று, பிள்ளையில்லாது இறந்துபோனான். மாதவ ராவின் தம்பி நாராயண ராவ் பட்டத்துக்கு வந்தான். நாராயண ராவின் சிற்றப்பனான ரகுநாத ராவின் சூழ்ச்சியினால் நாராயண ராவ் கொலையுண்டான். உடனே ரகுநாத ராவ் பேஷ்வா ஆயினன். சின்னாளைக் கெல்லாம் நாராயண ராவின் மனைவிக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது.

அக்குழந்தைக்கு இரண்டாவது மாதவ ராவ் என்று பெயர். அக்குழந்தையே பேஷ்வா என்றும், ரகுநாத ராவுக்குப் பேஷ்வா உரிமை கிடையாதென்றும், மகாராஷ்டிரரில் ஒரு சாரார் வாதாடினர். இக்கட்சியின் தலைவர் நானாபட்னாவிஸ். ரகுநாத ராவோ தானே பேஷ்வா என்று கிளம்பித் தனக்குப் பக்கபலம் தேட பம்பாயிலுள்ள ஆங்கிலேயரை நாடினான்; ஸால்ஸெத், பஸ்ஸீன் இந்த இரண்டிடங்களைத் தரவும், துணைக்குவரும் ஆங்கிலச் சேனையின் செலவை ஏற்றுக் கொள்ளவும் சம்மதித்தான். அவ்வாறே 1775-ஆல சூரத் நகரில் இருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

இதற்கிடையில் நானாபட்னாவிஸ் கல்கத்தாவிலுள்ள கவர்னர் ஜெனரலின் உதவியை நாடினான். புரந்தரம்

எனும் நகரில் இந்த இருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஸால்ஸெத் எனுமிடத்தை ஆங்கிலேயருக்குக் கொடுக்க நானுபட்னுவிஸ் இசைந்தான். ஆங்கிலேயர் ரகுநாத ராவுக்குத் துணைபுரியார் என்று கவர்னர் ஜெனரல் வாக்களித்தார்.

சூரத் உடன்படிக்கை, புரந்தர உடன்படிக்கை ஆகிய இரண்டும் இங்கிலாந்துக்கு எட்டின. ரெகுலேடிங் ஆக்டின்படி நேராக உடன்படிக்கை செய்துகொள்ள பம்பாய் கவர்னருக்கு உரிமை கிடையாது. என்றாலும் இரண்டு இடங்கள் கிடைப்பது கேட்ட கம்பனியின் மேலதிகாரிகளோ சூரத் உடன்படிக்கையையே ஒப்புக்கொண்டனர். அதன்படி ரகுநாதராவுக்குத் துணைபுரிய ஆங்கிலப் படைகள் பேஷ்வாவின் தலைமை ஸ்தலமான பூனு நகரை நோக்கி எழும்பின.

நானுபட்னுவிஸின் சகாக்களில் ஒருவனுன சிந்தியா என்பான் அந்த ஆங்கிலப் படைகளை வழிமறித்துத் துரத்திவிட்டான். கல்கத்தாவிலிருந்து வாரன் ஹேஸ்டிங்ஸ் அனுப்பிய சேனையோ சிந்தியாவின் தலைநகரான குவாலியர் கோட்டையைப் பிடித்துக்கொண்டது.

இதற்குள் மகாராஷ்டிரரும் ஹைதரும் சேர்ந்து, ஆங்கிலேயருக்கு எதிராக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி ஆங்கிலேயருக்குத் துன்பம் இழைக்க ஹைதர் அலி புறப்பட்டான். ஆனுல் 1782ல் ஹைதருக்குக் காலகதி நேர்ந்தது. நானுபட்னுவிஸைச் சேர்ந்த மகாராஷ்டிரர் அதே வருடத்தில் சால்பை எனுமிடத்தில் ஆங்கிலேயருடன் சமாதானம் கொண்டனர். இதன்படி ஆங்கிலேயருக்கு ஸால்ஸெத்தும் இன்னேரிடமும் கிட்டின ; குழந்தை மாதவ ராவே பேஷ்வா என்று ஏற்பட்டது. ரகுநாத ராவ் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு போனுன். முதல் மகாராஷ்டிர யுத்தம் இவ்விதம் முடிந்தது.

கம்பனியின் செலவினங்களைச் சுருக்கியும் வருவாயைப்பெருக்கியும், பணமுட்டுப்பாடு முழுதும் தீரவில்லை. மகாராஷ்டிரருடனும் ஹைதருடனும் சண்டைகள் மூண்டமையால் கம்பனிக்கு அதிகச்செலவு ஏற்பட்டது. அதனை எவ்விதம் சமாளிப்பது? இரண்டு உபாயங்களை வாரன் ஹேஸ்டிங்ஸ் மேற்கொள்ளலானார்.

அக்காலத்தில் காசி ஒரு சிறிய ராஜ்யம். அது அயோத்தி நவாபுக்கு உட்பட்டது. ஆண்டுதோறும் காசி ராஜன் அந்த நவாபுக்குக் கப்பம் கட்டிவர வேண்டும். சைதசிம்மன் ஆங்கிலேயரின் ஆதரவில் காசியரசனாக இருந்துவந்தான். நவாப் ஷுஜா உத் தௌலா இறந்ததும் காசியரசின் கப்பத்தொகை இருபது லட்சத்தை ஆங்கிலேயர் வாங்கிவந்தனர். ஐந்து லட்சம் கூட்டித் தரவேண்டுமென்று ஹேஸ்டிங்ஸ் நிர்ப்பந்தம் செய்தார்; அத்துடன் 25 லட்சம் அபராதமும் விதித்தார். உடனே காசிராஜன் போருக்குக் கிளம்பினான். ஆங்கிலப் படைகளும் சீறி எழுந்தன. சண்டையிலே சைதசிம்மன் தோற்று, உயிருக்கஞ்சி மாளவநாட்டை நோக்கி ஓடவும் நேர்ந்தது. உடனே அவனுடைய உடைமைகளை எல்லாம் ஹேஸ்டிங்ஸ் கைப்பற்றிக் கொண்டான். சைதசிம்மனது சோதரனோ சுயநலமே மிகுந்து, அரசிலே ஆசைகொண்டு, இருமடங்கு கப்பங் கட்டிவர இசைந்தான். அவனுக்கு அவ்வாறே காசி ராஜ்யத்தை யளித்தார் வாரன் ஹேஸ்டிங்ஸ்.

மேலும் வாரன் ஹேஸ்டிங்ஸ் கையாண்ட மற்றோர் உபாயம் இது: அயோத்தி நவாபான ஷுஜா உத் தௌலா என்பவன் ரோஹில்லரை ஜெயிக்க ஆங்கிலேயரின் உதவியை நாடினான் அல்லவா? அதற்குப் பரிதானமாக ஆங்கிலேயருக்கு வாக்களித்த தொகையை அவனால் செலுத்த முடியவில்லை. அவனுக்குத் துணையாக அவன் நாட்டிலிருந்த ஆங்கிலச் சேனையின் செலவிலும் பெருந்தொகை கொடுபடவில்லை. பழைய நவாப் பரகதி சென்

றதும் அவன் மைந்தன் அஸப் உத் தௌலா நவாப் ஆயி
னன். தகப்பன் பட்ட கடன் பிள்ளையின் தலையில் சுமர
அவன் இன்னும் கடனாளி யானான்.



வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் இந்தியா

புதிய நவாப் அதன்மேல், 'என்னிடம் பணம் இல்லை; என் தாயாரும் பாட்டியுமான பேகம்மார்களிடம் நகை நட்டுக்களும் பணமும் ஏராளமாக இருக்கின்றன. அவர்களிட முள்ளதை வலிந்து கொள்ள உதவிபுரிய வேண்டும்,' என்று ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டான். நகை நட்டும் பணமும் பேகம்மார்களுக்கே சொந்தமாகும் என்று முன்னம் கம்பனியார் சொல்லியிருந்தனர். அச்சொல்லை மீறி நடப்பதெப்படி? சைதசிம்மன் கலகமாகக் கிளம்பிய பொழுது பேகம்மார்கள் அவனுக்கு உடந்தையாக இருந்தனரென்று சாக்குச் சொல்லி, அவர்களின் சொத்தைப் பறிக்க ஏற்பாடாயிற்று. புதிய நவாபுக்குத் துணையாக ஓர் ஆங்கில அதிகாரியை ஹேஸ்டிங்ஸ் அனுப்பினார். பேகம்மார்களைத் துன்புறுத்திப் பணம் பறிக்கப் பட்டது. அவ்விதம் பறித்த தொகையில் ஒரு கோடி ரூபா ஆங்கிலேயருக்குக் கொடுத்தான் அந் நவாப்.

நிர்வாக சபை அங்கத்தினரிலே ஹேஸ்டிங்ஸின் பரம வைரியான பிரான்ஸிஸ் இவற்றை யெல்லாம் அறிந்து, இங்கிலாந்து சென்று கம்பனியின் மேலதிகாரிகளிடம் ஹேஸ்டிங்ஸைக் குறித்துப் புகார் செய்தான். அவர்கள் கோபங்கொண்டு ஹேஸ்டிங்ஸைத் தாக்கிக் கடிதம் எழுதினார்கள். அதுகண்டு ஹேஸ்டிங்ஸ் மனம் புழுங்கித் தன் பதவியை வீசி எறிந்து 1785ஆ இங்கிலாந்து சேர்ந்தார். அங்கே பிரமாதமாக ஏழு வருஷம் விசாரணை நடந்தது. அதனால் பணமும் மதிப்பும் இழந்து ஹேஸ்டிங்ஸ் தவித்தார். முடிவில் அவர் மீது குற்றமில்லை என்று முடிவாயிற்று. அப்பால், உபகாரச் சம்பளம் பெற்று ஹேஸ்டிங்ஸ் நெடுநாள் வாழ்ந்து வந்தார்.

---

37. லார்டு காரன்வாலிஸ் (1786—1793)

ஆங்கில கீழிந்திய கம்பனியின்மீது ஆதிக்கங்கொள்ளக் கருதியே இங்கிலாந்தின் துரைத்தனத்தார் ரெகுலேடிங் ஆக்ட் என்னும் சட்டஞ் செய்தனர். வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது புகார்கள் பிறந்தவுடன், அந்த ஆதிக்கத்தை இன்னும் பெருக்கிக்கொள்ளவே அத்துரைத்தனத்தார் 1784ஸ் மற்றுமொரு சட்டஞ் செய்தனர். அது **பிட் இந்தியா சட்டம்** எனப்படும். அதன் முக்கிய அம்சங்களாவன :—

(1) வியாபார விஷயத்தில் கம்பனிக்கு ஸர்வாதிகாரம் இருப்பினும், இந்திய நிர்வாகத்தை மேல்விசாரணை செய்யப் பார்லிமெண்டு அங்கத்தினரில் அறுவர் அடங்கிய ஒரு சபை ஏற்பட்டது. (2) சுதேச மன்னவர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ளுவதாயின் அச்சபையின் அங்கீகாரம் பெறவேண்டும். (3) கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபையில் மூன்று அங்கத்தினரே இருப்பர். அவ்விதமே சென்னை, பம்பாய் கவர்னர்களுக்கும் ஆலோசனை சபைகள் ஏற்பட்டன. (4) சுதேச மன்னர்களுடன் கம்பனி உத்தியோகஸ்தர்கள் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ளக் கூடாது.

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பின்பு லார்டு காரன்வாலிஸ் கவர்னர் ஜெனரலாக வந்தார். கம்பனியிடம் வேலை பார்த்த ஒருவனையே கவர்னர் ஜெனரலாக நியமித்தால், கம்பனியின் மேலதிகாரிகளது ஆளாக அவன் ஆகிவிடக் கூடும் என்ற அச்சத்தால் கம்பனியில் வேலைபாராத லார்டு காரன்வாலிஸ் நியமனம் பெறலானார். முன்னம் ஆலோசனை சபையார் ஹேஸ்டிங்ஸுக்கு முட்டுக்கட்டையாக இருந்தனர் அல்லவா? ஆதலினால் அச்சபையின்

அபிப்பிராயத்தை அவசியமானுல் மீறியும் காரியஞ் செய்யுமாறு காரன்வாலிஸுக்கு அதிகாரம் கிடைத்தது.

நிரந்தர நிலவரி: கம்பனி ஊழியர்களின் ஊழலைப் போக்க முன்னம் கிளைவ் முயன்றும் அவை ஒழிந்தபாடில்லை. ஊழியர்கள் சொந்தத்தில் வாணிபம் புரிந்தும், பொய்க் கணக்கு எழுதியும், பரிதானம் வாங்கியும் வந்தனர். இவை கூடாவென்று காரன்வாலிஸ் விதித்தார்; அத்துடன் அவர்களின் சம்பளத்தை உயர்த்தினுர். அதனுல் ஊழல்கள் அநேகமாக நீங்கத் தலைப்பட்டன.

பின்பு நிலவரி விஷயத்தில் அவர் நிரந்தரமான சீர்திருத்தம் ஒன்று செய்தார். முகம்மதியரின் ஆட்சியிலே முதன்முதல் நிலவரியை ஓர் ஒழுங்கு செய்தவன் ஷெர்ஷா. அவன் நிலங்களையெல்லாம் அளந்து, மகசூலை மதிப்பிட்டு, நாலிலொரு பங்கே வரியாக வாங்கி வந்தான். அப்பால் அக்பரின் காலத்திலே நிலங்களை மூன்று தரமாகப் பிரித்து, மகசூலின் அளவையும் தராதரத்தையும் தழுவி, மூன்றிலொரு பங்கு வரி வாங்கப்பட்டு வந்தது. கிளைவின் காலத்திலே மாறுதல் எதுவும் செய்யப்படவில்லை. வரி வசூல் அதிகாரிகளோ அளவுக்குமிஞ்சி வரிவசூலித்து ஒரு பகுதியை அரசாங்கத்துக்குக் கொடுத்து மற்றைப் பகுதியைத் தாங்களே வைத்துக்கொண்டனர்.

வாரன் ஹேஸ்டிங்ஸின் காலத்தில், வரி வசூலின் மேற்பார்வை கம்பனியின் ஊழியர்களிடமே இருந்தது. தவிர வரி வசூல் உரிமை வருஷா வருஷம் ஏலத்தில் விடப்பட்டும் வந்தது. அந்த உரிமையை அடைந்தவர்களோ நில வளப்பத்தையும் விவசாயிகளின் நலத்தையும் மதியாமல், எவ்வளவு பணம் கறக்கமுடியுமோ அவ்வளவு பணம் கறந்து, தங்கள் லாபத்தில் மட்டுமே கண்ணுயிருந்தனர். அதுபற்றி விவசாயிகள் கஷ்ட நஷ்டம் அடைந்தது ஒருபுற மிருக்க, கவர்ன்மெண்டாரும் நஷ்டமடைந்து வந்தனர்.

வரி வசூல் செய்வதற்கும் சர்க்காரின் பாக்கியை முன்னதாகக் கட்டுவதற்கும் சக்தியற்ற அநாமதேயப் பேர்வழிகளும் ஏலத்திலே அந்த உரிமையைப் பெறலாயினர். எனவே வரி வசூல் உரிமையை ஏலத்தில் விட வேண்டாமென 1784ஆ கம்பனியார் சொல்லினர். அவ்விதமே வரி வசூலிக்கும் உரிமை முதலில் பத்து வருஷத்துக்கு நிலவரமாகியது. அதன்படி பத்து வருஷத்துக்கு ஒருமுறை நில்வரி விகிதம் மாறும். இவ்விதம் மாறுவதும் சரியன்று என லார்டு காரன்வாலிஸ் கருதினர்; உடனே நிரந்தர நிலவரி முறையை ஏற்படுத்தினர்.

மொகலாயரின் காலம் முதல், வரி வசூலித்துச் செலுத்தி வந்தவர்கள் ஜமீன்தார்கள் என்று பெயர் பெற்றிருந்தனர். ஏராளமான நிலங்கள் அவர்களின் ஆதீனத்துக்கு உட்பட்டிருந்தன. நிலையான நிலவரி முறை ஏற்பட்டதும் ஜமீன்தார்கள் கேவலம் வரிவசூல் அதிகாரிகள் என்பது மாறியது. அன்னவரே நிலங்களின் சொந்தக்காரர் ஆயினர். வங்காளம், பீகார், காசி இந்த இடங்களில் இன்றும் அந்த நிலவரி முறைதான் அமுலில் உள்ளது.

ஜில்லா கலெக்டர்களே முன்னம் வரி வசூல் மேற்பார்வையையும் நீதி பரிபாலனத்தையும் நடத்தி வந்தனர். காரன்வாலிஸோ வரி வசூல் மேற்பார்வை அதிகாரத்தை மட்டும் ஜில்லா கலெக்டர்களிடம் ஒப்படைத்தார்; நீதி பரிபாலனத்துக்காக ஜில்லா ஜட்ஜ் எனும் அதிகாரிகளை நியமித்தார். மேலும் முன்னம் இந்தியரும் சில பெரிய உத்தியோகங்களில் இருந்தனர். அது கூடாதென்று சொல்லி, ஆங்கிலேயரையே அவர் நியமிக்கலானர்.

---

38. மூன்றாவது மைசூர் யுத்தம்: திப்பு

பிட் இந்தியா சட்டத்தின்படி, சுதேச மன்னர்களின் விஷயத்தில் தலையிடாமல் இருக்க வேண்டுமென்று காரன்வாலிஸ் நினைத்தார். ஆயினும் திப்புவுடன் அவர் போருக்குப் போக நேர்ந்தது.

தென்னிந்தியாவில் தானொருவனே அரசனாயிருக்க வேண்டுமென்று திப்பு நினைத்தான். உடனே மலையாளம், குடகு இப்பிரதேசங்களின்மீது அவன் பாய்ந்தான். அவ்விரண்டும் உடனே அவன் வசமாயின. பின்பு அவன் திருவாங்கூரை எதிர்த்தான்; தான் ஜெயித்த இடங்களிலுள்ள ஜனங்களை இஸ்லாமியராக ஆகும்படி நிர்ப்பந்தம் செய்தான்; அதற்கு உட்படாதவர்களைக் கொன்றான்; ஆலயங்களையும் அழித்தான்.

திருவாங்கூர் அரசன் ஆங்கிலேயரிடம் உறவுகொண்டவன். திப்பு அதனை மதிக்கவில்லை. அவனது செயலைக் கண்டு மகாராஷ்டிரரும் நிஜாமும் மனங்கொதித்து நின்றனர். ஆதலின் திப்புவுடன் சண்டை செய்யவேண்டுமென்று அவர்களுக்கும் எண்ணம் உண்டாயிற்று. பின்பு, ஆங்கிலேயர், மகாராஷ்டிரர், நிஜாம் ஆகிய இம் மூவரும் சேர்ந்து திப்புவின்மீது புறப்பட்டனர்.

பெரிய சேனையொன்று திரட்டி அதற்குத் தானே தலைமை வகித்தார் லார்டு காரன்வாலிஸ்; முதலில் 1791-ல் பங்களூர் நகரைக் கைப்பற்றிக் கொண்டார். பின்பு, மூவரும் சேர்ந்து, ஸ்ரீரங்கபட்டணத்தை எதிர்க்கச் சென்றார்கள். தலைநகரை இழக்க திப்பு ஒப்பவில்லை. பெரும்படை கொண்ட பலமான பகைவர்களை எதிர்க்கவும் அவனால் ஆகவில்லை. ஆகவே அவன் சமாதானத்துக்கு ஒருப்பட்டான்.

அவ்வாறே 1792-ல் ஸ்ரீரங்கபட்டணத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, தன் ராஜ்யத்தில் பாதியை ஆங்கிலேயருக்கும், அவர்களுக்குத் துணை



காரன்வாலிஸ் காலத்தில் இந்தியா

யாக வந்த நிஜாமுக்கும் மகாராஷ்டிரருக்கும் அவன் 'பங் கிட்டுக் கொடுக்க நேர்ந்தது. யுத்தத்தின் செலவுக்காக அம் மூவருக்கும் மூன்று கோடியே முப்பது லட்சம் ரூபா கொடுக்கவும் நிர்ப்பந்தம் உண்டாயிற்று. அங்ஙனமே நடப்பதற்குப் பிணையாகத் தன் மைந்தர் இருவரையும் அவன் லார்டு காரன்வாலிஸிடம் ஒப்படைக்கலானுன்.

திப்புவின் நாட்டைப் பங்கிட்டுக் கொண்டதில் ஆங்கிலேயருக்குச் சேலம், திண்டுக்கல், மலையாளம் ஆகிய இடங்கள் கிடைத்தன. கொடை ஜில்லாக்கள் எனப்படும் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம் எனும் ஜில் லாக்களில் ஒரு பாகம் நிஜாமுக்குக் கிட்டிற்று. மகா ராஷ்டிரருக்கோ கிருஷ்ணுநதியின் தெற்கிலுள்ள பிர தேசம் வந்தது. குடகு நாட்டை அதன் அரசன் மீண் டும் அடைந்தான்.

சாமான்ய வீரனுன ஹைதர் ஒரு ராஜ்யத்தை ஏற் படுத்தினுன். அரசனுய்ப் பிறந்த திப்புவோ அதனை முடிவில் இழக்க நேர்ந்தது. ஹைதரின் வாழ்க்கையோ ஏற்றமே கொண்டது; திப்புவின் வாழ்வோ இறக்கம் எய்திற்று. இருவரும் யானையைப்போல், தமக்கு இழைக் கப்பட்ட கெடுதல்களை மறவாமல் பழிவாங்கும் இயல் புடையவர்கள்.

---

39. ஸர் ஜான் ஷோர் (1793—1798)

லார்டு காரன்வாலிஸின் காலத்தில் நிர்வாக சபையில் முதல் மெம்பராக இருந்தவர் ஸர் ஜான் ஷோர். நிலையான நிலவரி முறையை ஏற்படுத்துவதில் காரன் வாலிஸுக்கு அவர் பேருதவியாக இருந்தார். அதனுல் அவருக்கு கவர்னர் ஜெனரல் பதவி கிடைத்தது.

மொகலாயவரசு சின்னபின்னம் ஆவதையும், ஆங்கி லேயர் இங்கே படிப்படியாக ஆதிக்கம் கொள்வதையும்

கண்டு மகாராஷ்டிரர் சகிக்கவில்லை; தேசத்தை ஒருங்கே கவனிக்க மத்திய சர்க்காரின்மையால், தேசம் சீர்குலைவதைக் கண்டும் அவர்கள் நிம்மதி கொள்ளவில்லை. இந்தியா முழுதும் தாங்களே கட்டியாளவேண்டும் என்றும் அவர்களுக்கு நெடுநாளாக நினைப்புண்டு. நிஜாமும் சரி, திப்புவும் சரி, ஓங்காமல் ஒழிந்தால், தேச நிர்வாகம் சீர்படும் என்பதும் அவர்கள் கருத்து.

ஔரங்கசீபின் காலத்திலே தக்காணத்திலே மொகலாயருக்கு உட்பட்ட பல இடங்களில் நாலிலொரு பங்கு வரி (சௌத் வரி) அவர்களுக்கு உண்டு. அதனை அவர்கள் அடைந்து ஆண்டு அனுபவித்து வந்தார்கள். நிஜாமின் பிரதேசங்களிலும் அவ்வாறே நாலிலொரு பங்கு வரி தரவேண்டுமென அவர்கள் கேட்டார்கள். நிஜாம் அதற்கு மனமொப்ப வில்லை. தவிர மகாராஷ்டிரர் ஓங்கி உயர்வதைக் கண்டும் நிஜாம் மனங் குழம்பினான். அதுகண்ட மகாராஷ்டிரத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நிஜாமின்மீது பெரும்படையுடன் சென்றனர். நிஜாமோ ஆங்கிலேயரின் உதவியை வேண்டினான்.

ஸர் ஜான் ஷோர் அதற்குச் சம்மதிக்கவில்லை. சுதேச மன்னர்களுடன் சண்டைக்குச் செல்லக்கூடாது என்பது ஒரு காரணம். தவிர, திப்புவுக்கு எதிராக ஆங்கிலேயர், மகாராஷ்டிரர், நிஜாம் ஆகிய மூவரும் நேச உடன்படிக்கை யொன்று கொண்டிருந்தனர். அதற்கிணங்க, ஒருவருக்கொருவர் உதவிபுரிய வேண்டும்; ஆயினும், நிஜாமுக்குத் துணையாகச் சென்றால், மகாராஷ்டிரரின் பகை சம்பவிக்கும். இத் தர்மசங்கடத்தில் அக்கவர்னர் ஜெனரல் மாட்டிக்கொண்டு வாளாவிருக்க நேர்ந்தது.

கர்டா என்னுமிடத்தில் 1795-ல் நிஜாமுக்கும் மகாராஷ்டிரருக்கும் பெரும் போர் மூண்டது. அதில் நிஜாம் முற்றிலும் தோற்றுப்போனான். வேறுவழியின்மையால் மகாராஷ்டிரருடன் அவன் சமாதானம் செய்து

கொள்ளநேர்ந்தது. தன் நாட்டின் பெரும்பாகத்தையும் ஏராளமான பணத்தையும் அவன் மகாராஷ்டிரருக்குக் கொடுத்தான். இந்த வெற்றியினுல் மகாராஷ்டிரரின் கீர்த்தி இத் தேசமெங்கும் பரவியது. ஆங்கிலேயருக்கு இருந்துவந்த மதிப்பும் ஓரளவு குறையலாயிற்று. நிஜாம் ஆங்கிலேயரிடம் வெறுப் படைந்து, பிரஞ்சுக்காரரின் துணையைக்கொண்டு, தன் சேனையை வலுப்படுத்தினுன். திப்புவும் அவர்களைப் பழிவாங்கக் காலங்கருதினுன்.

ஸர் ஜான் ஷோரின் காலத்திலே அயோத்தி நவாபான அஸப் உத்தௌலா என்பவன் இறந்துபோனுன். விஜீர் அலி என்பவன் தானே பழைய நவாபின் மைந்தன் என்று வாதாடலானுன். அதனை நம்பி அவனை அயோத்தியரசில் அமர்த்தினுர் ஸர் ஜான் ஷோர். சின்னுள் சென்றதும், விஜீர்அலி சரியான மைந்தனல்லன் என்று புலப்பட்டது. உடனே ஸர் ஜான் ஷோர் அவனை நீக்கி நவாபின் சோதரனெருவனைப் பட்டத்தில் ஏற்றிவைத்தார். புதிய நவாப் அதற்கு ஈடாக, ஆங்கிலேயருக்கு அலகாபாத் பிரதேசத்தை வழங்கினுன்; அத்துடன் தனது நாட்டைக் காத்துவருமாறு வருஷாவருஷம் ஆங்கிலச் சேனைக்கு 75 லட்சம் ரூபா தரவும் ஒப்புக்கொண்டான்.

கம்பனியின் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. காரன்வாலிஸின் காலத்தில் அந்த ஏராளமான சம்பளத்தைக் குறைத்தனர். அதுகண்டு வங்காளத்திலிருந்த ராணுவ உத்தியோகஸ்தர்கள் கலகமாகக் கிளம்பினர். ஆதலின் ஸர் ஜான் ஷோர் அஞ்சி, அவர்களைத் திருப்தி செய்ய முயன்றுர். கலகத்தை யடக்காமல் போனமை கண்டு கம்பனியின் மேலதிகாரிகள் அதிருப்தி யுற்றனர். அதனுல் ஸர் ஜான் ஷோர் தம் பதவியை நீத்துச் செல்ல நேர்ந்தது.

அக் கவர்னர் ஜெனரலின் காலத்திலே இந்தூர் நாட்டை அஹல்யா பாய் எனும் ராணி ஆட்சி செய்துவந்

தாள். அவள் கண்டே ராவ் ஹோல்காரின் தேவி. அவள் கணவன் ஒரு சண்டையிலே கொல்லப்பட்டுப் போனான். உடனே மைந்தன் மாலீ ராவ் அரசன் ஆனான். சிறிது காலத்திற்கெல்லாம் இவன் மைந்தனில்லாது இறந்து போக, ராணியே ராஜ்யபாரத்தை நடத்திவர நேர்ந்தது. அவள் மகா சாமர்த்திய சாலி; மிக்க தைரியமும் படைத்தவள்; தகுந்த அதிகாரிகளை நியமித்து நாட்டை நன்கு பரிபாலித்து வந்தாள்.

அஹல்யா பாய்

கைக்கூலி வாங்குவோர், துஷ்டர் முதலியோரை வேலையினின்று அவள் நீக்கினாள். அதனால் அவர்கள் ஒன்று கூடிக் கலகமாக எழுந்தனர். வெகு திறமையுடன் அக்கலகத்தை அவள் அடக்கிப் போட்டாள். கலகத்திற்குத் தலைவனான புரோகிதன் பழி வாங்க எண்ணி, ராஜபுத்திரரை அந்நாட்டின் மீது ஏவிவிட்டான். ராஜபுத்திரரோ அவள் சேனையின் முன்னே தோற்றோடினர்.

வழக்குகளை யெல்லாம் அஹல்யாபாய் நேரே விசாரிப்பாள்; நடுக்கண்ட நியாயமும் வழங்குவாள். பிள்ளைப் பேறில்லாமல் இறந்து போன ஒரு சீமான் சொத்தை ஓர் அதிகாரி கவரக் கருதி, சுவீகாரம் கொள்ளக் கூடாதென்றான். ராணி அஃதறிந்து, அந்த அதிகாரியைக் கண்டித்தாள்; சுவீகாரம் செய்துகொள்ளுமாறு சீமான் மனைவிக்கு உத்தரவிட்டாள்.

ஒரு சமயம் பணக்கார விதவைகள் இருவர் ராணியை யடைந்து, தங்கள் சொத்தை எடுத்துக்கொள்ளும்படி வேண்டினர். அஹல்யாபாய் அதற்கு ஒப்பவில்லை; இருவரையும் அழைத்து, இகபரம் இரண்டினுக்கும் உதவியாமாறு தருமத்தில் அச்சொத்தைச் செலவிடும்படி புத்தி சொல்லியனுப்பினள். இந்தூர் நாட்டிலே எங்கே பார்த்தாலும் கோயில்களும் குளங்களும் சத்திரங்களும் சாவடிகளும் நிரம்பின. இவ்வளவுக்கும் அந்த ராணியே காரணம். அவளைப் பின்பற்றி ஆங்குள்ள தனிகரும் தர்மவான்களாக விளங்கினர். அரசன் எவ்வழி, அவ்வழி குடிகள் அல்லவா? அவளுக்குப் பின் யசோவந்தராவ் ஹோல்கார் என்பான் இந்தூர் அரசன் ஆனன்.

---

40. வெல்லஸ்லி பிரபு (1798—1805)

இந்தியாவிலே ஆங்கில அரசுக்கு அடிகோலியவன் கிளைவ். வெல்லஸ்லி பிரபு என்பவரோ இந்தியாவெங்கும் ஆங்கில ஏகாதிபத்தியம் பரவுமாறு செய்தவர். சுதேச அரசர்களின் அதிகாரத்தைக் குறைக்கவும், ஆங்கில ஆதிக்கத்தைப் பெருக்கவும், சமஸ்தானங்களை ஒடுக்கவும் லார்டு வெல்லஸ்லி மகா தந்திரமாக ஏற்பாடு செய்யலானர். அவரால்தான், இங்கே ஆங்கிலேயருக்கு ஏகாதிபத்தியம் ஏற்பட்டது.

வெல்லஸ்லி பிரபு

சுதேச மன்னர் தமக்குள்ளே சண்டைபோடுவது ஒருபுறம்; ஆங்கிலேயரோடு பல சண்

டைகள் செய்வது ஒருபுறம். இங்கிலையில் தேசத்தின் அமைதியும் செல்வமும் பாழாகி வந்தன; ஆங்கிலேயரின் வியாபாரமும் வெகுவாகக் குறைய, அவர்களின் லாபமும் சுருங்கியது. அத்துடன் பிரஞ்சுக்காரர் ஒருபுறம் சுதேச மன்னருக்குத் துணையாக நிற்பதும், ஆங்கிலேயருக்குப் பரம ஆபத்தாக இருந்தது.

சுதேச மன்னரை அடக்கி யொடுக்குவதுடன், இதர ஐரோப்பியரையும் தலைதூக்காமல் செய்து, ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் நிலைநாட்ட வேண்டும் என்பதற்கு அவர் ஒரு திட்டம் போட்டார். அதன் முக்கிய சாரம் என்னவென்றால்:

துணைப் படை முறை: 1. சுதேச மன்னர் தமக்குள்ளோ அந்நியர்களோடோ ஆங்கிலேயரின் அனுமதியில்லாமல் சண்டையும் சரி, சமாதானமும் சரி, செய்து கொள்ளக்கூடாது. 2. ஆங்கிலேயரின் அனுமதி பெறாமல், இதர ஐரோப்பியரை அம்மன்னவர் தம்மிடம் வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. 3. அம்மன்னவர் ஒவ்வொருவரும் தமது நாட்டின் பாதுகாப்புக்காக ஓர் ஆங்கிலப் படையை அமர்த்திக் கொள்ளவேண்டும். அது துணைப்படை முறை எனப்படும். யுத்த சமயங்களில் அத்துணைப் படை ஆங்கிலேயருக்கு உதவி புரியவேண்டும். 4. அப்படைக்குரிய பராமரிப்பின் செலவை அம்மன்னர் கொடுக்கவேண்டும். அல்லது அச் செலவுக்கு ஈடாகத் தம் ராஜ்யத்தின் ஒரு பகுதியை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட வேண்டும். 5. இவற்றிற்கெல்லாம் ஈடாக, அம்மன்னவரைப் பகைவரினின்றும் காப்பாற்ற ஆங்கிலேயர் பொறுப்புக் கொள்வர். 6. ஒவ்வொரு மன்னனும் தனது ராஜ்யத்தை மேற்பார்த்துத் தனக்கு ஆலோசனை சொல்ல ரெஸிடெண்டு (ஸ்தானீகன்) எனும் ஆங்கில அதிகாரிக்கு இடம் தரவேண்டும். 7. சுதேச மன்னரின் உள்நாட்டு விஷயங்களில் ஆங்கிலேயர் தலையிடார்.

அந்த ஏற்பாட்டை ஆங்கிலத்தில் ஸப்ஸிடியரி ஸிஸ்டம் என்பர். மகாராஷ்டிரரிடம் தோல்வி கொண்டு பேதுற்றுக் கிடந்த நிஜாம் அரசனே முதன்முதல் அந்த ஏற்பாட்டுக்கு இணங்கியவன். தனது நாட்டில் தனக்குத் துணையாக அமர்ந்த ஆங்கிலப் படையின் செலவினுக்காகக் கொடை ஜில்லாக்கள் என்பனவற்றை ஆங்கிலேயருக்கு அவன் கொடுத்துவிட்டான்; தன்னிடமிருந்த பிரஞ்சு சேனையையும் கலைத்துப் போட்டான்.

அங்ஙனம் உடன்படிக்கை கொள்ளுமாறு மகாராஷ்டிரருக்கும் லார்டு வெல்லஸ்லி சொன்னார். அதற்கு மகாராஷ்டிரர் மனங்கொள்ளவில்லை; காலம் இடம் கருதி, ஆங்கிலேயருடன் நேசப் பான்மையே கொண்டிருந்தனர். எனினும் அவர்களில் ஒரு குலத்தைச் சேர்ந்த கெயிக்வார் என்பவனே அந்த உடன்படிக்கையை ஒப்புக் கொண்டு அமைதியாக வாழச் சம்மதிக்கலானான்.

இனி, தென் இந்தியாவின் நெல்களஞ்சிய மான தஞ்சைநாடு சோழ வரசரின் காலம் முதல் பிரசித்தி பெற்றது. விஜயநகர ஸாம்ராஜ்யம் வீறு கொண்டு விளங்கி நின்றபொழுது அதன் பிரதிநிதிகளான நாயக்கர் என்போர் தஞ்சையை நெடுநாள் ஆண்டுவந்தனர். பின்னர் சிவாஜியின் சந்ததியார் 150-வருஷம் அதனை ஆண்டனுபவித்துவந்தனர். பின்னவரின் கடைசி யரசன் கடனாளியாகி இறந்து போனான். அவனுக்குச் சந்ததி யில்லை. அவன் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அந்த அரசுக்காக வாதாடினர். இந் நிலையில் அவ் விருவருக்கும் பெருந் தொகையான பணங் கொடுத்துவிட்டு, அந்நாட்டைச் சேர்த்துக்கொண்டார் வெல்லஸ்லி பிரபு.

ஆறுகாட்டின் நவாபான முகம்மதலி நெடுங்காலம் கர்நாடகத்தை ஆண்டனுபவித்து வந்தான். அவன் காலகதியாக அவன் மைந்தன் பட்டத்துக்கு வந்தனன். மைசூரிலுள்ள ஸ்ரீரங்கபட்டணம் ஆங்கிலேயரின் வச

மானபோது முகம்மதலியும் அவன் மைந்தனும் எழுதிய சில கடிதங்கள் அகப்பட்டன. தகப்பனும் பிள்ளையுஞ் சேர்ந்து ஆங்கிலேயருக்கு விரோதமாய்த் திப்புவுடன் சதியாலோசனை செய்ததாக அக்கடிதங்களிலிருந்து புலப்பட்டதாம். அத்தகைய சமயத்தில் முகம்மதலியின் மைந்தன் மாண்டுபோனான். அம்மகனது மகனைப் பெயரளவில் ஆங்கிலேயர் நவாபாக்கி, அவனுக்கு உபகாரச் சம்பளமும் கொடுத்து, கர்நாடக ராஜ்யம் முழுவதையும் எடுத்துக்கொண்டனர்.

கர்நாடக ராஜ்யத்தைக் கட்டிக்கொண்ட வெல்லஸ்லி அதன்மீது நவாபுகள் முன்னம் வாங்கியிருந்த பெருங் கடனைக் கொடுக்கவில்லை; மற்று அதனைத் தேசியக் கடனாகச் செய்துவிட்டார்.

---

41. நாலாவது மைசூர் யுத்தம்

மூன்னம் ஆங்கிலேயரிடம் முறியுண்டு சமாதானம் செய்து கொண்ட திப்பு அவர்களிடம் உள்ளூர வைரமே கொண்டு நின்றான். எங்ஙனமாயினும் அவர்களை இந்தியாவினின்று துரத்தி விடவேண்டுமென்பதே அவன் கொண்ட கருத்தாம்.

அச்சமயம் ஐரோப்பாவிலே பிரான்ஸ் தேசத்தில் ஜனக்கலகம் ஏற்பட்டது. மக்கள் வெகுண்டெழுந்து, மன்னவனைக் கொன்று, குடியரசு கொண்டனர். எங்கும் முடியரசு தொலைந்து, குடியரசே நிலையாக வேண்டுமென்று பிரஞ்சு மக்கள் முயலா நின்றனர். அதன் பொருட்டு அவர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் மூண்டது. இந்தியாவிலே ஆங்கிலேயர் அடைந்துவரும் ஏகாதிபத்தியத்தைத் தொலைத்துவிட வேண்டுமென்றும் அவர்கள் கருதினார்கள். அது சமயம் நெப்போலியன்

எனும் பெருவீரன் பிரான்ஸிலே தோன்றினன். உலகத்தையும் ஜெயிக்கவேண்டுமென்பது அவன் கருத்து. எகிப்தின்மீது அவன் படைகொண்டு வந்திருந்தனன்.


நெப்போலியன்

அங்கிருந்து இந்தியாவின் மீது தண்டு கொண்டு வரவும் அவ்வீரனுக்கு ஆவல் இருந்தது. அங்ஙனமே செய்யும் வண்ணம் திப்புவும் அவனைத் தூண்டினன்; நெப்போலியனிடமிருந்து வந்த சில தூதுவரையும் வரவேற்றுப் பேசினன். வெல்லஸ்லிக்கு அச்செய்தி எட்டிற்று. இங்கே ஆங்கில ஏகாதிபத்தியம் உருவாகையில், அதற்கு ஆபத்து நேர்வதுகண்டு அவர் சகிக்கவில்லை. ஆதலினல் பிரஞ்சுக்காரரின் நட்பையொழித்து ஆங்கிலேயரிடம் நேசங்கொள்ளும் வண்ணம் திப்புவுக்கு அவர் சொல்லியனுப்பினர். திப்புவோ அவ் வார்த்தையை மதிக்கவில்லை. உடனே நிஜாமுடனும் மகாராஷ்டிரருடனும் வெல்லஸ்லி ஓர் உடன்படிக்கைகொண்டு, திப்புவின்மீது போருக்கு ஆயத்தஞ் செய்தார். அந்த யுத்தமே நாலாவது மைசூர் யுத்தம்.

வெல்லஸ்லி கல்கத்தாவை விட்டு, நேரே சென்னைக்கு வந்து யுத்த முஸ்தீப்புகள் செய்தார். சின்னாளுக்கெல்லாம் ஆங்கிலச் சேனைகள் திப்புவை நோக்கிச் சீறி எழுந்தன. ஜெனரல் ஹாரிஸ் என்னும் ஆங்கில தளகர்த்தன் சென்னையிலிருந்து மைசூரை நோக்கிப் புறப்பட்டான். பம்பாயிலிருந்து ஓர் ஆங்கிலச் சேனை கிளம்பி, மலையாளத்திற்கு வந்து குடகு நாட்டின் வழியே மைசூருக்குப் போயிற்று. இரண்டு சேனைகளும் ஒன்று சேராவண்ணம், இரண்டினுக்கும் இடையே தன் சேனையை நடத்திச் சென்றான் திப்பு. எனினும் வெல்லஸ்லியின் சோதரனான ஆர்தர் வெல்லஸ்லி என்பான் இரண்டு சண்டைகளிலே திப்புவைத் தோற்கடித்தான்.

ஸர் ஆர்தர் வெல்லஸ்லி

நிலைமை மோசமானது கண்ட திப்பு விரைந்து பின்வாங்கித் தனது தலைநகரான ஸ்ரீரங்கபட்டணத்துக்குள் புகுந்து கொண்டனன். உடனே ஆங்கிலச் சேனைகள் அக்கோட்டையைச் சூழ்ந்துகொண்டு முற்றுகையிட்டன. திப்பு சுல்தான் ஆவேசத்துடன் சண்டை செய்து, வீரசுவர்க்கமே புகுந்தான். அவன் சேனாவீரரிலும் எண்ணற்றோர் சேதமாயினர். உடனே மைசூர் ராஜ்யம் ஆங்கிலேயரின் வசமாயிற்று. ஆகவே, ஆங்கிலேயர், நிஜாம்,

மகாராஷ்டிரர் மூவரும் சேர்ந்து மைசூர் ராஜ்யத்தை ஆளுக்குக் கொஞ்சம் பங்கு போட்டுக் கொண்டனர்.

அதில் கோயமுத்தூர், கன்னடம், வயநாடு இவை ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. நிஜாமுக்கோ கொடை ஜில்லாக்களில் முன்னம் கிட்டியதுபோக, எஞ்சிய பிர தேசங்கள் இப்போது கிடைக்கலாயின. இப்பிரதேசங் களை ஆங்கிலத் துணைப்படையின் செலவுக்கென ஆங்கி



ஸ்ரீரங்கபட்டணத்தில் ஹைதர், திப்பு சமாதி

லேயருக்கே அவன் கொடுத்துவிட்டான். மைசூர் ராஜ்யத்தில் எஞ்சியிருந்த நாடுகளுக்குப் பழைய ஹிந்து ராஜ வமிசத்தைச் சேர்ந்த கிருஷ்ண ராஜ உடையார் எனும் சிறுவர் அரசரானர். திப்புவிடம் மந்திரியாக விருந்த பூர்ணையா என்பவன் ராஜப்பிரதிநிதியாக நிய மனம் பெற்றான். அங்கே ஓர் ஆங்கில ஸ்தானீகனும் நிய மனம் ஆனான். திப்புவின் மைந்தர் உபகாரச் சம்பளம் பெற்று வேலூருக்குச் சென்று, அங்கே ஆங்கிலேயரின்

பாதுகாவலில் வாழ்ந்து வரலாயினர். இவ்விதம் நான்காவது மைசூர் யுத்தம் முடிவுற்றது.



வெல்லஸ்லியின் காலத்திய இந்தியா

42. மகாராஷ்டிரரின் சமஷ்டி

முகம்மதிய - மோகலாய மன்னவரின் போக்கினைக் கண்டும், இந்து மக்களின் அவலநிலை கண்டுமே, மகாராஷ்டிர வல்லரசை ஏற்படுத்தினான் சிவாஜி சத்திர பதி. இந்தியா முழுதும் ஹிந்து ராஜ்யமாமக விளங்குவ தற்கே அவ்வீர வேந்தன் அடிகோலினான் என்பர் சிலர். இது எங்ஙனமாயினும் அவன் கண்ட வல்லரசு நெடுநாள் விளங்கிவந்தது. அதனை யழித்துப்போட ஔரங்கசீப் பிரமாதமாக முயன்றும் பலிக்கவில்லை.

ஔரங்கசீப் காலமானதும், டில்லியிலே அரசைக் குறித்துப் போட்டா போட்டியும் சண்டை சச்சரவுகளும் நிகழ்ந்து வந்தன. அந்தச் சமயத்தில் சிவாஜியின் பேர னான ஸாஹு என்பான் மகாராஷ்டிர மன்னவனாயினன். இதற்குப் பெரிதும் துணைசெய்தவன் பாலாஜி விசுவ நாதன் எனும் வேதியன். இவனே பேஷ்வா பட்டம் பெற்று மகாராஷ்டிரத்தைப் பரிபாலித்தவன்.

நாளடைவில் பேஷ்வா பதவி பரம்பரை உரிமையாக முடிந்தது. பாலாஜியின் வமிசத்தார் அப்பதவியை வகித் தனர்; எனினும், ராஜகாரியம் அனைத்தையும் மன்ன வன் பெயராலேயே நடத்திவந்தார்கள்; அன்றியும் தேச மெங்கும் மகாராஷ்டிர ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டு மென்றும் நாட்டங் கொண்டிருந்தார்கள். மொகலாய மன்னரின் தகுதிக் குறைவையும், அதனால் தேசம் படும் கஷ்ட நஷ்டத்தையும் கண்டு சகியாமல், இத்தேசத்திலே அன்னவரின் ஆட்சியை அறவே ஒழித்துவிடக் கருதி, பாணிபத் என்னுமிடத்தில் 1761ல் பெரும்போர் புரிந் தனர். எதிர்பாராத விதமாக மகாராஷ்டிரருக்கு அப் போரில் தோல்வியே கிட்டியது.

என்ருலும் சிறிதுகாலத்திற்கெல்லாம், மீண்டும் அம் மகாராஷ்டிர சமூகம் முனைப்புக் கொண்டது; தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவும் பரப்பவும் கங்கணம் பூண்டது. அச்சமயத்தில் அச் சமூகத்திலே கெயிக்வார், ஸிந்தியா, ஹோல்கார், பான்ஸ்லே எனும் குலங்கள் தலைதூக்கின. அவர்களுக்கு முறையே பரோடா, குவாலியர், இந்தூர், நாகபுரி எனும் இடங்கள் தலைமை ஸ்தலங்களாயின. 1772ஆம் வரையில் மாதவ ராவ் பேஷ்வாவாக இருந்து அக் குடும்பங்களை ஒருமனப்படுத்தி, மகாராஷ்டிரரின் கட்டுக் குலையாமல், பரிபாலனம் பண்ணிவந்தார். மாதவ ராவ் மரித்த பின்னர், பேஷ்வா பதவிக்குப் போட்டி உண்டாயிற்று.

அப்பதவிக்குப் போட்டியிட்ட ரகுநாத ராவின் பக்கம் சிலரும், இரண்டவது மாதவ ராவின் பக்கம் சிலருமாக நிற்கவே, கட்சிப் பிரதிகட்சிகள் தோன்றின. அப்போது மகாராஷ்டிர சமூகம் சிதறக்கூடாதென்று கவலை கொண்டிருந்தவன் நானுபட்னுவிஸ் எனும் தலைவனுவன். அச்சமயத்தில்தான் முதல் மகாராஷ்டிர யுத்தம் மூண்டது. அதன் விளைவாகவே, அவர்கள் சில பிரதேசங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க நேர்ந்தது. எனினும் நானுபட்னுவிஸ் பேஷ்வா பதவிபெற்று, மகாராஷ்டிரரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தி வந்தான். மேலே சொல்லிய குலத் தலைவர்களோ தனித்தனியே நாடுகொண்டு தாமே சர்வாதிகாரப் பதவி வகிக்கவேண்டுமென்று விரும்பி நின்றனர். எனினும் நானுபட்னுவிஸ் உயிருடன் இருக்கும்வரையில், அனைவரையும் சமரஸப்படுத்தி மகாராஷ்டிர அரசைக் காத்துவந்தனன்.

1796ஆம் பாஜி ராவ் பேஷ்வா பட்டம் பெற்ருன். அதன் பிறகு சிறிது காலத்திற்கெல்லாம் நானுபட்னுவிஸுக்குக் காலகதி கிட்டியது. இளம் பேஷ்வா தன் ராஜ்யத்தின் நலத்தை மதியாமல் இஷ்டப்படி நடக்கத்

தொடங்கினான். அக்குலத் தலைவர்களில் ஒருவனான சிந்தியா என்பான் அதற்கு உடந்தையாக இருந்தனன்.

பேஷ்வாவிடம் சிந்தியா ஏற்றம் கொண்டிருத்தல் கண்டு, ஹோல்காருக்குப் பிடிக்கவில்லை. உடனே ஹோல்கார் ஒரு படையுடன் கிளம்பி, சிந்தியாவின் பிரதேசங்களைத் தாக்கினான். சிந்தியா சீறிக் கிளம்பி, ஹோல்காரின் படைகளை முறித்து, இந்தூரையும் கொள்ளைகொண்டான். தொடர்ந்து ஹோல்காரைத் தொலைக்க சிந்தியா முயலாது போயினான். ஹோல்காரோ சமயம் பார்த்து நின்று, பெரும் படைதிரட்டி, பேஷ்வாவின் தலைநகரான பூனாவின்மீது பாய்ந்தான். பாயவே, பிரமாதமான சண்டை நடந்தது. அச்சண்டையில் சிந்தியா தோல்வி கொண்டான். அதுகண்டு பயந்த பேஷ்வா பாஜி ராவ் உயிருக் கஞ்சி, பஸ்ஸீன் நகரஞ் சேர்ந்து ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தனன். இதற்கிடையில் புதிதாக ஒரு பேஷ்வாவை ஏற்படுத்த ஹோல்கார் முன்வந்தான்.

அப்போது பஸ்ஸீன் என்னுமிடத்தில் ஆங்கிலேயருக்கும் பேஷ்வாவுக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது அதன்படி (1) பேஷ்வாவின் பிரதேசத்திலே ஆங்கிலத் துணைப் படையொன்று இருக்கலாயிற்று. அதன் செலவுக்காக ஆண்டுதோறும் 26-லட்சம் ரூபா வருமானமுள்ள பிரதேசங்களை அவன் ஆங்கிலேயருக்குக் கொடுத்தான். (2) ஆங்கிலேயருக்கு விரோதமான எந்த ஐரோப்பியரையும் தன் சேவகத்தில் அமர்த்திகொள்வதில்லையென்று பேஷ்வா ஒப்புக்கொண்டான். (3) சூரத் நகரம் தனக்கு உரிமையானதென்று அவன் பாராட்டவில்லை. (4) ஆங்கிலேயரிடம் பரம விசுவாசம் கொள்ளவும் அவன் ஒருப்பட்டான். (5) இவற்றிற்கெல்லாம் ஈடாக அவனையும் அவன் ராஜ்யத்தையும் காப்பாற்றி வர ஆங்கிலேயர் ஒப்புக்கொண்டனர்.

---

43. மகாராஷ்டிர யுத்தங்கள்

ஆங்கில ஏகாதிபத்தியத்தை இத்தேசத்திலே நிலை நாட்டக் கருதியே துணைப் படை முறையை மேற்கொள்ளுமாறு சுதேச மன்னருக்கு வெல்லஸ்லி சொல்லி வந்தார். அதற்கு நிஜாம் போன்ற சிலர் உடனே மன மிசைந்தனர். மகாராஷ்டிரரோ தங்களது சுயாதீனம் போய் விடுமென எண்ணி முதலில் அதற்கு உடன்படாமல் இருந்தனர். மகாராஷ்டிர குலத் தலைவர்கள் தம்முள் சண்டையிட்டு நின்றதனால், பேஷ்வா அவ்விதம் ஆங்கிலேயருடன் உடம்பாடு கொள்ள நேர்ந்தது.

மகாராஷ்டிர சமூகத்தின் நிர்வாகத் தலைவன் பேஷ்வாவே. அவனே ஆங்கிலேயருடன் உடன்படிக்கை கொண்டதனால், சமூகத்துக்கே பங்கமுண்டு என்பதை ஸிந்தியா, பான்ஸ்லே முதலிய குடும்பத் தலைவர்கள் உணர்ந்து கொண்டார்கள்; அதன்மேல் ஆங்கிலேயருடன் போர் புரிந்தாக வேண்டுமென்று தீர்மானித்தனர். தங்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு ஹோல்காரையும் கெயிக்வாரையும் அவர்கள் வேண்டிக்கொண்டும் பயன்படவில்லை. தருக்கு மிகுந்த ஹோல்கார் விலகியே நிற்கலானான். எனவே ஸிந்தியா, பான்ஸ்லே இருவருமே ஆங்கிலேயரின் மீது போருக்கு ஆயத்தமாயினர்.

கவர்னர் ஜெனரலான வெல்லஸ்லி அதனை யறிந்து தனது சேனையைத் திரட்டி வந்தார். அவர் சோதரனான ஜெனரல் வெல்லஸ்லி என்பவன் 1803-ஆம் அஸ்ஸே எனுமிடத்தில் அவ்விருவரின் சேனையுடன் கடும் போர் தொடுத்தான். இருவரும் தோல்வியே கொண்டனர். பான்ஸ்லே அது கண்டு, பேஷ்வாவைப் போல் தானும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டனன். அதன்

பலனாக பீராரை நிஜாமுக்கும், ஒரிஸாவை ஆங்கிலேயருக்கும் கொடுத்தான்; ஆங்கிலத் துணைப் படை யொன்றையும் தன் நாட்டில் வைத்துக்கொள்ள இணங்கினான்.

தோல்வி யடைந்த சிந்தியா மீண்டும் படை திரட்டி, ஆங்கிலேயரின்மீது பாய்ந்தனன். லஸ்வாரி எனுமிடத்தில் மறுபடியும் அவனுக்குத் தோல்வியே கிட்டியது. அவனது ஆதீனத்திலிருந்த டில்லி, ஆக்ரா இரண்டையும் ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர்; அவனிடம் கட்டுண்டு கிடந்த ஷாஅலத்தையும் விடுவித்தனர். அதன் மேல் விதியின்றி ஸிந்தியாவும் சமாதானத்துக்கு உட்படலானான். உடனே ஆங்கிலேயருக்கும் அவனுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கங்கைக்கும் யமுனைக்கும் இடையேயுள்ள பிரதேசத்தை அவன் ஆங்கிலேயருக்குக் கொடுத்தான். (2) புரோச் நகரும் அவர்களுக்குக் கிடைத்தது. (3) அஹ்மத்நகரம் பேஷ்வாவுக்குக் கிடைத்தது. நிஜாம் அரசனுக்கும் சிறிது மண் கிடைத்தது. இவ்விதம் இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தது.

ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்துக்கு உட்பட ஹோல்காருக்கு மனமில்லை. ஆயினும், இதர மகாராஷ்டிரத் தலைவர்களுக்கு உதவிபுரியவும் விரும்பாமல் நின்றான். எனினும் ஆங்கில ஆதிக்கம் ஓங்குவது கண்டு அவன் மனம் பொறுமல், தன்னிடமுள்ள எண்பதாயிரம் வீரரின் பக்க பலத்தைக்கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்கவே அவன் காலங் கருதியிருந்தான். இதற்கிடையில் ராஜபுத்திர ராஜ்யங்களில் அவன் புகுந்து கொள்ளையும் கொலையும் கண்டனன். நண்பர்களான ராஜபுத்திரரைக் காக்கவேண்டுமென்று வெல்லஸ்லி நினைத்தார். உடனே ஆங்கிலப் படைகள் பிரமாதமாக எழுந்தன.

லேக் எனும் தளகர்த்தன் டில்லியிலிருந்து கிளம்பி வந்தான்; மர்ரே என்பான் கூர்ஜரத்திலிருந்து புறப்பட்

டான்; மான்ஸன் என்பான் மத்திய இந்தியாவிலிருந்து எழுந்தான். மூன்று சேனைகளும் சேர்ந்து ஹோல்காரை எதிர்க்கலாயின. ஒரு சேனை இந்தூரைப் பிடித்துக் கொண்டது. யுத்த தந்திரத்தை உத்தேசித்து, ஹோல் கார் பின்வாங்கி, ஆங்கிலச் சேனை யொன்றை எதிர்த்து அலக்கண் இழைத்தான். பரதபுரம் எனும் நாட்டின் வேந் தன் ஹோல்காருக்குத் துணையாக எழவே, அப்பரதபுரக்



பரதபுரக் கோட்டை

கோட்டையை நெடுநாள் லேக் முற்றுகை யிட்டும், அதனைப் பிடிக்க முடியவில்லை. எனினும் முடிவிலே அவ் வரசனுக்கும் ஆங்கிலேயருக்கும் சமரஸம் ஏற்பட்டது.

ஹோல்காரின் சேனைகள் முறிபடாமல் சண்டை யிட்டுக்கொண்டே யிருந்தன; இரண்டு இடங்களில் ஆங் கில வீரரை வெருட்டியும் அடித்தன. இங்ஙனம் ஓயாச் சண்டை ஒழியாச் சண்டை நிகழ்தல் கேட்டு, இங்கி லாந்திலுள்ள கம்பனி மேலதிகாரிகள் மனம் பதைத்தனர். ஆதலின், ஹோல்காருடன் நேர்ந்த சண்டை முடிவதற் குள் வெல்லஸ்லி தம் பதவியைவிட்டு, இங்கிலாந்துக்குச்

செல்ல நேர்ந்தது. இதற்குள் சிந்தியாவும் முன்னம் ஆங்கிலேயரிடம் கொண்ட உடன்படிக்கையை உதறித் தள்ளி ஹோல்காருடன் போரில் கூடிக் கொண்டான்.

இந்தியாவிலே ஆங்கிலேயர் அரசுகொள்வதற்குலார்டு கிளைவ் விதைபோட, அதற்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் தண்ணீர் வார்த்து வளர்க்க, அதனைப் பயிராக்கினர் வெல்லஸ்லி. இந்தியா முழுவதையும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தவேண்டும் என்பதே அவர் கருத்து. ஆதலின் பற்பல மன்னவரையும் அவர் தந்திரமாக வசஞ் செய்தார். நிஜாம் அரசன், பேஷ்வா, பான்ஸ்லே முதலியோர் ஆங்கிலத் துணைப் படை கொண்டனர்; ஆங்கில ஸ்தானீகரையும் அமர்த்திக் கொண்டனர்; ஆங்கிலேயரைத் தவிர ஏனைய ஐரோப்பியரை வேலையில் வைத்துக் கொள்ளாதிருக்கவும் இசைந்தனர். இத்தகைய காரணங்களால் இந்தியாவிலே ஆங்கிலேயரின் அரசு நிலைத்துக் கிளைக்கலாயிற்று.

---

44. மிண்டோ பிரபு (1807—1813)

வெல்லஸ்லிக்குப் பின்பு காரன்வாலிஸ் இரண்டாம் முறை கவர்னர் ஜெனரல் ஆனர். அவர் இந்தியாவுக்கு வந்து நெடுங்காலம் உயிருடன் வாழவில்லை. 1805ல் காஜிப்பூரில் அவர் இறந்துபோனர்.

அவருக்குப்பின் மிண்டோ பிரபு கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்றர். இந்தியாவுக்கு அவர் வந்து சேரக் கொஞ்சகாலம் ஆயிற்று. அந்த இடைக்காலத்தில், நிர்வாக சபையில் முதல் மெம்பராக இருந்த ஸர் ஜார்ஜ் பார்லோ என்பவர் கவர்னர் ஜெனரலாக வேலைபார்த்து வந்தார். இவர் இந்திய மன்னரின் விஷயத்தில் தலையிடுவதில்லை யென்று தீர்மானங் கொண்டார்; அதற்கு

ஏற்ப யமுனு நதிக்கு அப்பாலுள்ள நாடுகளை ஸிந்தியாவுக்குத் திரும்பக் கொடுத்தார்; ஹோல்காருக்கும் அவனது பழைய நாடுகளைத் திருப்பிக் கொடுத்தார்.



மிண்டோ பிரபு I

நாடு சேர்த்து வந்த கம்பனியார் காவலுக்கு வேண்டிய சேனையையும் திரட்டி அதில் இந்துக்கள், முகம்மதியர் இருவரையும் சேர்த்து வந்தனர். ராணுவ ஒழுங்கைத் தழுவி, சிப்பாய்களெல்லாம் ஒரேவிதமாக உடை தரிக்க வேண்டும் என்றும், நெற்றியிலே ஜாதி மதச் சின்னங்கள் கொள்ளக்கூடாது என்றும், உத்தரவு பிறந்தது. அதுகண்டு மதங் கெடுப்பதாக எண்ணிய சிப்பாய்கள் கனன்று கிளம்பி, ஆங்கில தளகர்த்தரில் பலரைக் கொன்று போட்டனர். பின்பு அந்த உத்தரவை ரத்து செய்யவே, அக்கலகம் அடங்கியது. இதன்பின்னரே லார்டு மிண்டோ கவர்னர் ஜெனரலாக இங்கே வந்தார்.

சுதேச மன்னரின் விஷயத்தில் தலையிடுவதில்லையென லார்டு மிண்டோவும் கருத்துக் கொண்டார். ஆயினும் விதியின்றி அக்கொள்கையை நீத்து, ராஜபுதனத்திலும் பண்டில்கண்டிலும் மகாராஷ்டிரர்களால் உண்டான கலகங்களை யடக்க நேர்ந்தது. நாகபுரியின்மீது படையுடன் வந்த அமீர்கான் என்பவனையும் போர்முனையில் துரத்தியடிக்க வேண்டியதாயிற்று.

அச்சமயத்தில் ஐரோப்பாவிலே ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் மீண்டும் யுத்தம் மூண்டது. அதனால், மோரிசுத் தீவு, போர்பன் தீவு இந்த இடங்களிலிருந்த

பிரஞ்சுக் கப்பல்படை, இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த ஆங்கிலக் கப்பல்களை வழிமறித்துக் கொள்ளையிட்டது. அதன்மேல் 1810ஆ மோரிசுத் தீவை மிண்டோ பிடித்துக்கொண்டார்; பிரஞ்சுக்காரருக்கு உதவியாக வந்த டச்சுக்காரருக்குச் சொந்தமான ஜாவா தீவையும் வசப்படுத்திக்கொள்ள நேர்ந்தது.

இந்தியாவுக்கு வடமேற்கேயுள்ள பாரசீகம், ஆப்கானிஸ்தானம் இத்தேசங்களின் வழியே பிரஞ்சுக்காரர் படைகொண்டு இந்தியாவுக்குள் புகுவரோ என மிண்டோ அச்சங்கொண்டார். வட மேற்கிலிருந்து அன்னிய நாட்டார் தரைமார்க்கம் இந்தியாவுக்குள் புகவேண்டுமாளுல் அந்நாடுகளின் வழியே வந்து, கைபர் கணவாயைத் தாண்டி இந்தியாவுக்குள் சேரவேண்டும். ஆதலின் அவ்விரு தேசங்களுக்கும் மிண்டோ ஒரு தூதனுப்பி அன்னியருக்கு வழிவிடக்கூடாதென வேண்டிக்கொண்டார்.

அக்கணவாய்க்கு இப்பாலுள்ள பஞ்சாப் மன்னவனையும் சரிப்படுத்திக்கொள்ள மிண்டோ நினைத்தார். பஞ்சாபில் சீக்கியமதம் தோன்றியதைக் குறித்து முன்னம் சொல்லியிருக்கிறோம். சீக்கியருக்குள் ஒருவருக்குப்பின் ஒருவராகப் பத்து குருமார்கள் தோன்றினர். பத்தாவது குருவானவர் குரு கோவிந்த சிம்மன். இவருக்குப் பின், ஐந்து சீக்கியர் கூடுமிடத்தில் குருவின் அருளும் கீர்த்தியும் சோபிக்குமென்று சீக்கியர் நம்பிக்கை கொண்டனர். அவ்விதமே அவர்களிடையே கால்ஸா எனும் சமூகசபை தோன்றியது.

அவர்களுக்குள்ளே பல கிளைகள் ஏற்பட்டன. ஒவ்வொரு கிளைக்கும் ஒரொரு ஸர்தார் (தலைவன்) இருந்தான். அவர்கள் தனித்தனியாக அப் பஞ்சாப் நாட்டிலே பற்பல பாகங்களைக் கைக்கொண்டு அதிகாரஞ் செலுத்தி வந்தார்கள். அவர்களை ஒருமுகப்படுத்தி, ஒரு பெரிய ராஜ்யத்தை உண்டாக்கினுன் ரஞ்சித சிம்மன்.

ரஞ்சித சிம்மன் 1780-ஆம் பிறந்தவன் ; பன்னிரண்டாவது வயதிலேயே ஸர்தார் ஆனவன் ; பிறகு பல ஸர்தார்களுக்குத் தலைவனானான்; 1800-ஆம் வரையில் ஆப்கானிய அரசரின் பெயரால் பஞ்சாபை ஆண்டு வந்தான்; அப்பாலோ தானே பஞ்சாப் மன்னவன் ஆயினான்; ஆனவுடனே ஐரோப்பியரைக் கொண்டு, சீக்கிய வீரரைப் பழக்கி நல்ல சேனையொன்றைத் திரட்டினான்.



ரஞ்சித சிம்மன்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே, பிரஞ்சுக்காரரோடு ருஷியரும் ஆங்கிலேயரின் பகைவர் ஆயினர். ருஷியரின் வரவைத் தடுக்க வேண்டுமானால், சீக்கியரின் நட்பு அவசியமென்று மிண்டோவுக்குத் தோன்றியது. ஆதலின் ரஞ்சித சிம்மனுடன் மிண்டோ ஓர் உடன்படிக்கை கொண்டார். அதன்படி ஆங்கில அரசுக்கும் ரஞ்சித சிங்கின் ராஜ்யத்துக்கும் ஸட்லஜ் நதி எல்லையாக வரையறுக்கப்பட்டது. தனது நாட்டின் வழியே ஆங்கிலேயரின் பகைவரை வரவிடுவதில்லையென ரஞ்சித சிம்மன் ஒப்புக்கொண்டான். அதன்மேல் சிறிதுகாலம் வரையில் ஆங்கிலேயர் கவலையற்றிருந்தனர்.

பின்பு இரண்டு ஆண்டுகள் கழிந்ததும் மூல்தான், ஜம்மு, காஷ்மீரம் முதலிய நாடுகளும் ரஞ்சித சிம்மனுக்கு உட்பட்டன. 1823-ஆம் ஆப்கானியரிடமிருந்து பெஷாவர் நகரையும் அவன் பிடித்துக்கொண்டான். அவனுடைய ஆட்சி வெகு நேர்த்தியாக இருந்தது. அவன் காலத்திலே சீக்கியர் மிக்க ஒற்றுமையும் உயர்வும் தகவுங்கொண்டனர். அவனை லாகூர்ச் சிங்கம் என்று அழைப்பர்.

சென்னையிலிருந்த ராணுவத் தலைவர்களின் சம்பளம் முன்னம் குறைக்கப்பட் டிருந்தது. அதனால் ஆங்கில தளகர்த்தர்கள் கோபங்கொண்டு கலகமாகக் கிளம்பினர். உடனே லார்டு மிண்டோ நேரே சென்னைக்குச் சென்று, வெகு சாமர்த்தியமாக அக்கலகத்தை ஆரம்பத்திலேயே அடக்கிவிட்டார்.

---

45. மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ்

அடுத்தபடி கவர்னர் ஜெனரலாக வந்தவர் மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ் என்பவர். சுதேச மன்னரின் ஜோலிக்குப் போவதில்லை என்று முதலில் அவர் எண்ணங் கொண்டார். ஆயினும், கூர்க்கர், பிண்டாரிகள், மகாராஷ்டிரர் இவர்களுடன் மல்லுக்கு நிற்க நேர்ந்தது.

மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ்

பஸ்ஸீன் நகரில் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது முதல், இரண்டாம் பாஜி ராவ் எனும் பேஷ்வா சுயாதீனம் இழந்து நின்றான். அதை நினைக்க அவன் மனம் பொறுக்கவில்லை.

தவிர, சிந்தியா, ஹோல்கார் இவர்களிடமிருந்து பிடித்த நாடுகளை ஆங்கிலேயர் திரும்பக் கொடுத்ததுபோல், தன்னிடமிருந்து கொண்ட நாடுகளையும் திரும்பக் கொடுக்க வேண்டுமென அவன் நினைத்தான். இங்ஙிலையில் கெயிக்வாருக்கும் அவனுக்கும் ஒரு சச்சரவு ஏற்படலாயிற்று.

கெயிக்வார் முன்னமேயே ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்டவன். ஆயினும் மகாராஷ்டிர சமூகத்தின் தலைவனான பேஷ்வாவுக்கு அவன் கப்பம் கட்டி வருதல் வழக்கம். அவ்விஷயமாக இருவருக்கும் விவாதம் உண்டாயிற்று. ஆங்கிலேயரின் நேசத்தை எண்ணி அக்கெயிக்வார் தருக்கியே நின்றான். இங்ஙிலையில் பேஷ்வாவுடன் ராஜிபேச கெயிக்வாரின் தூதரான கங்காதர சாஸ்திரி பூனா நகருக்குப் போயினன். அப்போது அத்தூதன் ஆங்கே திடீரெனக் கொலையுண்டான். அக்கொலைக்குப் பேஷ்வாவின் மந்திரியான திரியம்பகனே காரணமென்று ஆங்கிலேயர் கருதினர்; ஆதலின் தங்களிடம் திரியம்பகனை ஒப்படைக்குமாறு பேஷ்வாவை நிர்ப்பந்தம் செய்தனர். பேஷ்வாவும் அவ்வாறே ஒப்படைத்தான்.

மந்திரியின் கதிகண்டு பேஷ்வா மாழ்கி நின்றான். மகாராஷ்டிர சமூகமும் மனக்கொதிப்புக் கொள்ளலாயிற்று; பேஷ்வாவே குலமுதல்வன் என்றும் மதித்திருந்தது. சமூகத்தின் தலைமைப் பதவியை இச்சிப்பதில்லையென்று உறுதி கூறும்படி அவனை ஆங்கிலேயர் கேட்டனர். அவன் அதற்கு ஒப்பவில்லை. இதற்கு இடையில் திரியம்பகன் தப்பிச் சென்று, சிந்தியா, ஹோல்கார் இருவரையும் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரட்டலானான். இதற்கு உடந்தையாக இருந்தான் பேஷ்வா.

ஹேஸ்டிங்ஸ் அது கண்டு போருக்கு ஆயத்தமானார். அம்மூவரின் சேனைகளும் திரண்டெழுந்தன. பிரமாதமாக இரு திறத்தாருக்கும் போர் நடந்தது. வெற்றி

யும் தோல்வியும் இருதிறத்தாருக்கும் மாறிமாறி வந்தன. முடிவிலே கார்க்கி என்னுமிடத்தில் பேஷ்வாவின் சேனை முறியுண்டது. பான்ஸ்லேயின் துருப்புகள் நாகபுரியில் தோல்வியடைந்தன. ஹோல்கார், சிந்தியா இவர்களின் வீரர்களும் வேறிடங்களில் அபஜெயம் அடைந்தார்கள். இதுவே நான்காவது மகாராஷ்டிர யுத்தம் எனப்படும்.

அந்த யுத்தத்தின் முடிவாக, (1) பேஷ்வாவின் ராஜ்யத்தை ஆங்கிலேயர் சேர்த்துக்கொண்டனர். (2) அவனுக்கு வருஷா வருஷம் எட்டு லட்சம் ரூபா ஜீவனும்சம் கிடைத்தது. (3) சிவாஜியின் சந்ததியைச் சேர்ந்த ஒருவனை ஆங்கிலேயர் பெயரளவிலே சதாரா நகரில் அரசனாக அமர்த்தினர். (4) பான்ஸ்லே தனது ராஜதானியான நாகபுரியை இழந்தான்; மற்றொருவன் அரசனாக நியமனம் பெற்றான். பான்ஸ்லேயின் அரசில் ஒரு பாகம் ஆங்கிலேயரின் வசமாயிற்று. (5) ஹோல்காரும் தனது ராஜ்யத்தில் பெரும்பாகத்தை இழந்தான்.

பாஜி ராவின் நாடுகள் ஆங்கிலேயரின் வசமாயின அல்லவா? அவையே ஆங்கில ஆதிபத்தியத்தில் பம்பாய் மாகாணம் ஆயின. நாகபுரி ராஜ்யத்தில் பெரும்பாகம் கம்பனியின் ஆட்சியில் சேர, அதுவே மத்திய மாகாணமாம். வெல்லஸ்லி சென்னைராஜதானியை ஏற்படுத்தினர்; மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸோ பம்பாய், மத்திய மாகாணங்களை உண்டாக்கினர்.

---

46. நேபாள யுத்தம்

நேபாளம் இமயமலைப் பிராந்தியத்திலுள்ள ஒரு நாடு. அது ஆயிரம் மைல் நீளமும் இருநூறு மைல் அகலமும் உள்ளது. அந்நாட்டிற்கு அடுத்தாற்போல்தான் இமயமலையின் உன்னத சிகரங்கள் பலவும் இருக்கின்றன.



மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸின் காலத்தில் இந்தியா

நாடு முழுவதும் மலைகள் மிகுந் திருப்பினும் இடை இடையே செழுமையான சம வெளிகள் பல உண்டு. அந் நாட்டு மக்களில் பெரும்பாலார் கூர்க்கர் எனப்படுவர்.

கூர்க்கர் ஆரிய குலத்தைச் சேர்ந்தோர்; ராஜபுத்திர சந்ததியாரு மாவர். அவர்கள் மிகவும் குட்டையாக இருப் பார்கள் ; ஆயினும் புஜபல பராக்கிரமமும் பெரு வீரமும் படைத்தவர்கள். அவர்களின் நாட்டினுக்குத் தெற்கிலே அயோத்தி உள்ளது. அயோத்தி ராஜ்யம் சீரழிந்து போன காலையில், பழம் பகையைக் கருதிய கூர்க்கர் அந்த ராஜ்யத்துக்குள் புகுந்து பல இடங்களில் கொள்ளை கண்டு, சில நகரங்களைப் பிடித்துக் கொண்டனர்.

அயோத்தி ராஜ்யம் ஆங்கிலப் பராமரிப்பில் உள்ள தாதலின், ஆங்கிலேயர் வாளாவிருக்க முடியுமா? பிடித்த இடங்களைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்று முன்னம் கவர்னர் ஜெனரலாயிருந்த மிண்டோ கேட்டார். அவர்கள் மறுத்து விட்டார்கள். ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக வந்தவுடனே, கூர்க்கரை யடக்கி ஒடுக்கினு லன்றி ஆங்கில ஏகாதிபத்தியம் நிம்மதியாக இருக்க முடியாதென்று தென்பட்டது.

உடனே வெல்லஸ்லி நான்கு படை வகுப்புக்களை அக்கூர்க்கர்மீது ஏவினர். மலை யுச்சிகளிலும் சரிவுகளி லும் இருந்துகொண்டு சண்டை செய்வதில் கூர்க்கர் மகா சாமர்த்தியசாலிகள். முன்பின் அறியாத மலைப் பிர தேசத்தில் ஏறிச் சண்டை போடுதல் ஆங்கிலப் படை களுக்கு மிக்க கஷ்டமாக முடிந்தது. அதனுல் மூன்று படை வகுப்புக்கள் முற்றிலும் முறிபட்டுப் பின்வாங் கின. ஆயினும் ஆங்கிலப் படைகள் மீண்டும் விடாப்பிடி யாகப் போர்புரிந்தன. ஒரு படையானது நேபாளத்தின் தலைநகரான காட்மாண்டு என்பதைப் பிடித்துக் கொண் டது. பற்பல மலைக் கோட்டைகளும் ஆங்கிலேயரின் வசமாயின. முடிவில் இருதிறத்தாருக்கும் 1816ஆ ஓர்

உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் முக்கிய அம்சங்கள் இவை: (1) ஸிம்லா, நைனிடால், முஸ்ஸோரி, அல்மோரா முதலிய முக்கிய ஸ்தலங்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. அந்நான்கும் குளிர்ச்சி வாய்ந்த கோடைவாச ஸ்தலங்களாக விளங்குகின்றன. (2) மலையின் அடிவாரத்திலுள்ள தெரேய், சிக்கிம் இந்த இடங்களையும் கூர்க்கர் ஆங்கிலேயருக்கு விட்டுக் கொடுத்தனர். (3) ஆங்கில ஸ்தானீகர் ஒருவரையும் தம் நாட்டில் வைத்துக் கொள்ள அவர்கள் இசைந்தார்கள். (4) ஆங்கிலேயரும் கூர்க்கரும் என்றும் நேசமாயிருப்பதென ஏற்பாடாயிற்று.

---

47. பிண்டாரிகள்

மொகலாயர், மகாராஷ்டிரர் ஆகிய இருவரும் அதி உன்னதமாக வாழ்ந்த காலையில் அவர்களிடம் தலைமுறை தலைமுறையாகப் பலர் போர்ச்சேவகம் புரிந்து வந்தனர். அவ்விருவரும் சுயாதீனத்துடன் அரசையும் இழந்தபின்னர் அப்போர்ச் சேவகரின் சந்ததியாருக்குப் பிழைப்பில்லாமல் போய்விட்டது. அங்ஙனம் பல்லாயிரக் கணக்கான பேர் சோற்றுக்கு வகையில்லாமல் திண்டாடலாயினர். பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பர். கையில் இல்லாதவன் கள்ளன் என்பதும் ஒரு பழமொழி. போர்ச் சேவகம் இல்லாவிடினும், தொழில் துறைகளில் இறங்கி, ஊழியம் புரிந்து வயிறு வளர்க்கலாம் என்றாலோ அதற்கும் வகையில்லை. ஆதலின், அவர்கள் கூட்டங் கூட்டமாகக்கூடி, எங்குஞ் சென்று, கொள்ளையும் கொலையுங்கண்டு காலங் கழித்துவந்தனர். அவர்களையே பிண்டாரிகள் என்பர்.

ஹேஸ்டிங்ஸின் காலத்திலே அவர்களின் தொகை கிட்டத்தட்ட ஐம்பது லட்சமாயிற்று. ஆங்கிலேயரிடம் உறவுகொண்டுள்ள நிஜாமின் நாட்டிலும் அவர்கள் புகுந்து அட்டகாசம் செய்தனர். மகாராஷ்டிர குலத்தலைவர் களிலே ஸிந்தியாவும் பான்ஸ்லேயும் அப்பிண்டாரி களுக்கு உடந்தையாக இருந்துவந்தனர். அவ்விருவருட னும் ஹேஸ்டிங்ஸ் ராஜிசெய்துகொண்ட பின்பு பிண் டாரிகளின்மீது சேனைகளை ஏவினார்.

மாளவ நாட்டிலே பிண்டாரிகளுக்கும் ஆங்கிலச் சேனைகளுக்கும் கடும்போர் நடந்தது. போருக்குரிய ஆயு தங்களும் பக்கபலமும் இல்லாமையால், பிண்டாரிகளின் தலைவர்கள் வேசாறிப்போயினர். அத்தலைவர்களில் ஒரு வனான கரீம்கான் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். வாஸில் முகம்மது என்பான் குண்டுக்கு இரையானான்; சிட்டு என்பவனோ வனத்தில் புகுந்து வேங்கைப் புலிக்கு இரையாயினான். அமீர்கான் என்பவன் டாங்க் எனும் பிரதேசத்தின் நவாபாகி அடங்கிவாழ ஒருப்பட்டான். பிண்டாரிகளின் தொல்லை அவ்விதம் தீர்ந்தது. மக்களும் சுகம் எய்தினர்.

சுபம்.

Printed at The Liberty Press, G.T., Madras.

BALAR DESA CHARITRAM---Book IV

By

SUNDARA SUBRAHMANIAM

and

V. K. SUBRAHMANIAN, B.A., L.T.

JAYAM & CO., Publishers

Nungambakkam, MADRAS :: VALAVANUR, (S. A. Dt.)

[Copyright] [Price As. 10